823

T.N.L.A.I

OFFICIAL REPORT

Vol-20 (C) No-3

MAR-1972

## உள்ளடக்கம்.

26— 3—1992


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 473–520 |
| 2. சிறப்புக் குறிப்பு ஈர்ப்பு— | |
| தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்து வருவது குறித்து. | 520–522 |
| 3. விதி 110-இன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை— | |
| தமிழகத்தில் மின் வெட்டு நீக்கப்படுவது குறித்து. | 522–523 |
| 4. கவன ஈர்ப்பு— | 523 |
| 5. அறிக்கை அளித்தல்— | |
| சட்ட விதிகள் ஆய்வுக்குழு .. .. .. | 524 |
| 6. அறிவிப்புகள்— | |
| (அ) முன்பண மானியக் கோரிக்கைகள், 1992—93 குறித்து (ஆ.செ.) | 524–529 |
| (ஆ) நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 1992 (ஆ.செ.) | 530 |
| (இ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1991—92 (ஆ.செ.) | 531 |
| (ஈ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1992 (ஆ.இ.) | 590 |
| 7. முன்பண மானியக் கோரிக்கைகள், 1992—93 —வாக்கெடுப்பு. | 524 |
| 8. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— | |
| (அ) நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 1992. | 530 |
| (ஆ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1992 | 590–591 |

| | பக்கங்கள் |
|---|---|
| 9. இறுதி, துணை நிதிநிலை அறிக்கை, 1991—92, விவாதமும் வாக்கெடுப்பும்— | 531–591 |
| திரு. மா. சுந்தரதாஸ் .. .. .. | 533–546 |
| திரு. எம். பெரியவீரன் .. .. .. | 546–550 |
| *திரு. ஒ. எஸ். அமர்நாத் .. .. .. | 550–553 |
| திரு. ஜி. பழனிசாமி .. .. .. | 553–555 |
| *திரு. ஆ. கு. சீனிவாசன் .. .. .. | 556–558 |
| திரு. ஆர். சிங்காரம் .. .. .. | 558–563 |
| திரு. சி. சுவாமிநாதன் .. .. .. | 563–570 |
| *மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 570–585 |
| 10. 25—3—1989-ஆம் நாளைய நடவடிக்கைக் குறிப்புகளில் உள்ள செய்திகள் குறித்து— | |
| பேரவைத் தலைவரின் தீர்ப்பு .. .. | 591–602 |
| 11. சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)— | |
| நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு, 1992. | 609 |
| 12. அரசினர் தீர்மானம்— | |
| விதி 32-ஐத் தளர்த்தல் ... .. .. | 610 |
| 13. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.— | |
| அ. சட்டபடிக்கான விதிகளும், ஆணைகளும் .. | 611 |
| ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனையதாள்கள்.. | 611 |

சென்னை-600
165046
D
V211,31 N92
N92.2r3

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 13, பிரஜோற்பத்தி— திருவள்ளுவர் ஆண்டு 2023

1992 மார்ச் 26, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள் ''

இறையாக வந்து சேரும் பொருளும், சுங்கமாகக் கொள்ளும் பொருளும், தன் பகைவரை வென்று திறையாகக் கொள்ளும் பொருளும் அரசுக்கு உரிய பொருள்களாகும்.

### I. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 357, டாக்டர் பீட்ரிக் டி சோசா, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

### 357- REGISTRATION OF MARRIAGES

*4269 Dr. Tmt. BEATRIX D'SOUZA: Will the Hon. the Minister for law be pleased to state;

Whether registration of marriages especially in rural areas made compulsory?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிருத்துவ, முஸ்லீம், பார்சி மதத் திருமணங்கள், மற்று தனித் திருமணங்கள் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும். இந்து மதத் திருமணங்கள் கிராமப்புறங்களில் மற்றும் நகர்ப்புறங்களில் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற கருத்துரு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

Dr. Thirumathi Batrix D'So za: Hon. Speaker Sir with your permission, I would like to quote a small verse.

"I am the Parlimentary Draftsman
I draft the country's laws
And for half the litigation
I am undoubtedly the cause"

In the absence of compulsory registration' Hindu marriages are sanctifsed by religious rituel and custom This gives room for desertion and bigamy and undoubtedly lowers the status of women. Is there any legislation propoccd at the state level to plug the loopholes in the laws relating to bigamy?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ,போற்றுதலுக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகத் தெளிவாகவும், மிக உறுதியாகவும் சொன்னது போல இன்றைய இந்து மதத் திருமணங்கள் சட்டத்தில் சில 'லூப் ஹோல்ஸ், இருக்கிற காரணத்தினாலே இருதார மணங்கள் 3 தார மணங்கள், 4 தார மணங்கள் என்று எல்லாம் திருமணங்கள் செய்து கொண்டு, சட்டப்பூர்வமாக நடக்கிற ஒரு காரியம் இருக்கிறது. இதனைப் போக்க வேண்டுமென்று மாண்புமிகு போற்றுதற்குரிய உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக் காட்டினார்கள். நம்முடைய போற்றுதற்குரிய பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-ஆவது ஆண்டு இங்கே முதலமைச்சராக இருந்த அந்த நல்ல நாட்களில் அவர் 3 நல்ல சட்டங்களைக் கொண்டு வந்தார். ஒன்று கட்டாய இந்தி இல்லையென்றார். தமிழ் நாட்டிற்கு தமிழ்நாடு என்ற பெயரைச் சூட்டினார். மூன்றாவதாக சுய மரியாதைத் திருமணச் சட்டத்தை நிறைவேற்றினார். இந்து மதத்தில் சடங்கு இல்லாமல், சம்பிரதாயம் இல்லாமல், புரோகிதம் இல்லாமல், திருமணம் செய்து கொண்டாலும்கூட அது சட்டபூர்வமான திருமணம் என்று சட்ட வடிவத்தைக் கொடுத்தவர் பேரறிஞர் அண்ணா. இன்னும் சொல்லப் போனால் எங்களைப் போன்றவர்கள் எல்லாம் அதற்கு முன்பு சுயமரியாதைத் திருமணங்கள் செய்து கொண்டு, 'இல்லெஜிடிமேட் மேரேஜ்: எங்கள் திருமணம் எல்லாம் சட்டபூர்வமான திருமணம் அல்ல. எங்களுக்குப் பிறந்த குழந்தைகள் எல்லாம் 'இல்லெஜிடிமேட் சில்ரட்ன்' சட்ட பூர்வமான குழந்தைகள் அல்ல. எங்கள் சொத்துக்களிலே அவர்களுக்கு உரிமை கிடையாது என்ற ஒரு 'லூப்ஹோல்'— பலவீனத்தை போற்றுதற்குரிய அண்ணா போக்கினார். மேலும் இன்று இருக்கின்ற சங்கடங்களை போற்றுதற்குரிய புரட்சித் தலைவி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரைவிலே [illegible]வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. எம். ரங்கராஜன்

திரு. டி. எம். ரங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஸ்பெஷல் மேரேஜஸ் ஆக்ட்—லே ஒருவர் பதிவுத் திருமணம் செய்து கொள்ளவேண்டுமென்று சொன்னால், பிரையர் நோட்டீஸ், அதாவது 15 நாட்களுக்கு முன் நோட்டீஸ் தரவேண்டும். ஆனால் இந்து மேரேஜ் ஆக்டிலே அதுபோன்ற நோட்டீஸ் தேவையில்லை இன்றைக்கு காதலித்து திருமணம் செய்துகொள்பவர்கள் பலர் இந்த ரிஜிஸ்டர்டு மேரேஜைத்தான் விரும்புகிறார்கள் இவ்வாறு காதலித்து திருமணம் செய்துகொள்கின்ற பல பெண்கள், இன்றைக்கு அவர்களுடைய கணவன்மார்களால் கைவிடப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனைத் தவிர்த்திட இந்த நோட்டீஸ் கொடுப்பது என்பது சப் ரிஜிஸ்ட்ரார் ஆபிசில் மட்டும்தான் அதை பப்ளிஷ் செய்கிறார்கள் இந்த நோட்டீஸ் (குறுக்கீடு)

முற்பகல் 9.35.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. எம். ரங்கராஜன் கேள்வி கேட்கச் சொல்லி உங்களை அழைத்தேன். உரையாற்றச் சொல்லி அழைக்கவில்லை.

திரு. டி. எம். ரங்கராஜன்: இந்த நோட்டிசையும் மற்ற பத்திரிகைகளிலே பப்ளிஷ் செய்ய வேண்டுமென்ற விதத்திலே அந்த ரூல் திருத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவிலே காம்பிரஹென்சிவ் லெஜிஸ்லேஷன் இது சம்பந்தமாக வர இருக்கிற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்தும் நினைவில் கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, முஸ்லீம்கள் கல்யாணம் செய்யும்போது மசூதியில் ரெஜிஸ்டர் இருக்கிறது. அதில் பெண்ணுக்கு சம்மதமா என்று கேட்டு கையெழுத்து வாங்குவார்கள். மாப்பிள்ளைக்கும் சம்மதமா என்று கேட்டு கையழுத்து வாங்குவார்கள் அதேபோல கிருஸ்துவ மதத்திலே கல்யாணம் செய்யும்போது சர்ச்சிலே கையெழுத்துப் போடுகிறார்கள். இந்துக்கள் கோவிலிலே கல்யாணம் செய்யும் போது அப்படி ஒரு ரெஜிஸ்டரிலே பதிவு செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

[1992 மார்ச் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உண்டு, உண்டு. மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே. இதற்குத் தெளிவான பதில் சொன்ன பிறகு அமைச்சருக்கு இதில் வேலையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : தலைவர் அவர்களே திருமணங்கள் செய்கிற நேரத்தில், 18 வயதிற்கு குறைவாக இருக்கிற பெண்களை சிலபேர் காதலித்து கல்யாணம் செய்வதற்காக அழைத்துச் சென்று விடுகிறார்கள். 2, 3 மாதங்கள் குறைவாக இருக்கிறது என்றால் தொலை தூரம் அழைத்துச் சென்று அவர்கள் இருக்கும் இடத்தை கண்டு பிடிக்கமுடியாத அளவுக்கு செய்து விடுகிறார்கள். ஆகவே அப்படி அழைத்துச் செல்வதற்கு யார் காரணமாக இருக்கிறார்களோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதோடு திருமணம் செய்துவிட்டால் பெண்கள் தான் ஆண்கள் வீட்டிற்குச் செல்லுகிறார்கள். அப்படி ஒரு முறை வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு பெண்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் இந்த நேரத்தில் சரிசமமாக, பெண்கள் ஆண்கள் வீட்டிற்குச் செல்வதுபோல ஆண்களும் மாமனார் வீட்டிற்கு சென்று அங்கேயே குடியிருப்பதற்கான வகையில் சட்ட திருத்தம் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல இப்போது முஸ்லீம்கள் மத்தியிலே அந்த பழக்கம் இருக்கிறது. சில குடும்பங்களிலே நான் கேள்விபட்டிருக்கிறேன். சென்னையிலே இருக்கிறார்கள். அவர்களில் திருமணம் செய்துவிட்டால் மணமகன் மணமகள் வீட்டிற்கு, மருமகன் அந்த வீட்டிற்கு செல்லுகிற ஒரு பழக்கம் சில முஸ்லீம் குடும்பங்களில் இருப்பது எனக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல இடங்களிலே முறையோடு பெண் கேட்டு இத்தனை பவுன் வேண்டுமென்று சொல்லி திருமணம் செய்கிறார்கள். திருமணம் செய்துகொண்ட பிறகு அந்த நகைகளிலே குறைவு இருந்தால் அந்தப் பெண்ணை வைத்து வாழாமல் அவளை கொடுமைப்படுத்துகிறார்கள். அந்த பெண்ணை மட்டும் அல்ல அவளுடைய குழந்தையையும் முடுக்கி விட்டு கொடுமைப் படுத்துகிறார்கள். அதோடுமட்டுமல்ல யாரையாவது கொண்டுவந்து வீட்டிலே வைத்துக்கொண்டு அவர்கள் யார் என்று கேட்டால் சமையலுக்கு வைத்திருக்கிறேன் என்று சொல்லி அந்தப் பெண்ணினுடைய வாழ்க்கையை பாழடித்துக் கொண்டிருக்கிறார்கள் அப்படிப்பட்ட நிலைமையை உருவாக்கக்கூடிய ஆண்களுக்கு அரசு என்ன தண்டனையை கொடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்



1992 மார்ச் 26]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதற்கென்று தனிச் சட்டங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்விபோட்டால் விவரமாக, தெளிவாக, விளக்கமாக அதற்கான தகவல்கள் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரெஜிஸ்ட்டிரார் ஆப் மேரேஜெஸ் என்று சொல்லக்கூடிய வகையில் கிறிஸ்தவர்களுக்கு—ரோமன் கத்தோலிக்க கிறிஸ்துவர்களைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கிற பாரிஸ் ப்ரீஸ்ட் அதாவது தந்தைகள் என்று சொல்லக்கூடியவர்கள் ரெஜிஸ்ட்டிரார் ஆப் மேரேஜஸ்ஸாக இருக்கிறார்கள். அதேபோல் சி.எஸ்.ஐ. மற்றும் மற்ற கிறிஸ்துவர்களைப் பொறுத்த வரையில் அந்தந்த பாஸ்டரேட் சேர்மன் என்று சொல்லக்கூடியவர்கள் அந்த மேரேஜெஸ் ரெஜிஸ்டிராராக இருக்கிறார்கள். முஸ்லீம்களைப் பொறுத்த வரையில் ஜமாத் கமிட்டி தலைவர் என்று சொல்லக்கூடியவர்கள் மேரேஜெஸ் ரெஜிஸ்ட்டிரார்களாக இருக்கின்றார்கள். அதேபோல இந்து சமயத்தைப் பொறுத்தவரையில் யாரை பதிவாளர்களாக ஆக்குவதற்கு அரசு உத்தேசித்து இருக்கிறது. அத்தகைய ஒரு பதிவாளரை கண்டுபிடிப்பது சிரமமாக இருக்கும் என்று சொன்னால், இறப்பு - பிறப்பு பதிவேடுகளைப் போல் ஆங்காங்கே திருமணப் பதிவேடுகளை ஒவ்வொரு ஊரிலும் வைத்துவந்தால் இந்தப் பணி இலகுவாக இருக்கும். அதைப் பரிசீலிக்க அரசு முன்வருமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் திரு. அல்போன்ஸ் அவர்கள் சட்டம் வந்தால் அதை இம்பிலிமெண்ட்டிங் செய்கிற அத்தாரிட்டி யார், என்

போர்சிங் செய்கிற அத்தாரிட்டி யார் என்று கேட்கிறார்கள். அந்த அத்தாரிட்டி ரெஜிஸ்ட்டிரேஷன் துறையிலே இருக்கிறது. பதிவுத் துறைத் தலைவர் அதனுடைய தலைவராக இருப்பார்கள். அதை எப்படிச் செய்யலாம் என்று அவரிடத்திலே கருத்துரு கேட்டிருக்கிறோம். அது யாரிடத்திலே இருக்கும், என்ன அதிகாரம் என்ற விளக்கத்தைச் சொல்லும் வகையில் சட்டமுன் வடிவு வர இருக்கிற்து என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 9–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமணச் சட்டப்படி ஒருவன் ஒருத்தியைத் தான் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று சட்டப்படி இருப்பதற்கு மாறாக **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் இந்த மாதிரி குற்றச்சாட்டு கூடாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. சிங்கை கோவிந்தராசு : பேரவைத் தலைவர் அவர்களே. இரண்டு திருமணங்கள் செய்துகொள்கின்ற முன்னாள் அரசியல்வாதிகள் போன்றவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைய அரசியல்வாதிகள் பலரும்கூட. (சிரிப்பு) திரு.கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : பேரவைத் தலைவர் அவர்களே, வயது குறைவாக இருக்கின்ற பெண்களை காதலித்துத் திருமணம் செய்து கொள்கின்றார்கள். அவர்களுக்கு அரசுச் சலுகைகள் ரத்தாகுமா என்பதைக் கேட்பதோடு இரண்டு மனைவிகளை திருமணம் செய்தவர்களுக்கு கணவன் இறந்துவிட்டால் வாரிசு சான்றிதழ் கொடுப்பதில் ஏகப்பட்ட குளறுபடிகள் ஆகிவிடுகின்றன. இருவரும் வந்து அழுகிறார்கள். எனக்குத்தான் வாரிசு சான்றிதழ் தரவேண்டும் என்று அதை நிவர்த்தி செய்ய அரசு ஏதாவது முயற்சி எடுக்குமா? நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. பி. ராஜுவுக்கு இப்போதே கவலை வந்துவிட்டது! (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள சட்டப்படியே வயதுகுறைந்தவர்களைத் திருமணம் செய்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்கலாம், அவருடைய இரண்டாவது கேள்வி, இன்றைக்கு இரண்டு மனைவிகள் இருந்தால் வாரிசுப் பிரச்சினை வருகிறது என்பது. அந்தக் குறையைப் போக்குவதற்காகத்தான். பதிவு செய்து கொண்டால் முறைப்படி மனைவி என்று சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்படும். இந்தப் பிரச்சினைகள் எல்லாம் அதன் மூலம் தவிர்க்கப்படலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்.

திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : பேரவைத் தலைவர் அவர்களே. இங்கே கேட்கப்பட்ட கேள்விகளில் எல்லாம் முஸ்லீம்களும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள், என்னைப் பொறுத்தவரையில் என்னைக் கைக்கூலி மாப்பிள்ளை என்று சொல்வார்கள். அதாவது பெண் வீட்டிற்குப் போகிறவர்கள். அதிலே நானும் சேர்ந்தவன். சில பகுதிகளிலே கடற்கரை ஓரமாக இருக்கின்ற பகுதிகளிலே அப்படிப் பெண் வீட்டிற்கே மாப்பிள்ளை போய்விடுவது வழக்கம், அங்குதான் எல்லா சீதனங்களும் கொடுக்க வேண்டும், வீடும் கொடுக்க வேண்டும், நகையும் கொடுக்க வேண்டும். சாப்பாடும் போடவேண்டும். ஆனால் நம்முடைய பரிபாலனத்தில்தான் மறுபடியும் அது நடைமுறையில் இருந்துகொண்டு வருகிறது. கல்யாணம் செய்யும்போது ஊர்களிலே ஜமாத் என்ற ஒன்று இருக்கிறது. அந்த ஜமாத்திலே அதாவது திருமண பதிவு புத்தகம் வைத்திருக்கிறார்கள். அந்தப்பதிவு புத்தகத்தை வைத்திருந்தால் கூட அந்தத் திருமணம் செய்வதற்கு முன்னால் இரண்டு சாட்சிகளை அந்தப் பெண்ணிடம் அனுப்பி. இந்த மணாளனை நீங்கள் திருமணம் செய்து கொள்வதற்குச் சம்மதமா என்று கேட்க வேண்டும். சம்மதம் என்று சொன்னால்தான் தாலி கட்ட முடியும். சம்மதம் இல்லை என்று சொன்னால் தாலி கட்ட முடியாது. ஆகையினால் அந்தத் திருமணங்களை நிச்சயமாக சம்மதித்துத்தான் செய்வது வழக்கம். செய்து கொண்டும் வருகிறார்கள். அப்படி இல்லை என்றுசொல்லி போன பழக்கமே கிடையாது. ஆகையினால் அந்த நிலைமையை இந்துக்களுக்கும் உருவாக்கி சம்மதம் என்ற கேள்வியைக் கேட்பதற்குச் சட்டத்தில் இடம் இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சட்டத்தில் இடம் இல்லை என்றாலும் சம்பிரதாயத்தில் நடைமுறையில் இன்றைக்கு அந்தப் பழக்கம் இருக்கிறது. சம்மதம் பெற்ற பிறகுதான் திருமணங்கள் நடைபெறுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 358, திருமதி கே. எம். கலைச்செல்வி மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

358—

காட்பாடி தனித்தாலுகா.

*4005— திருமதி கே. எம். கலைச்செல்வி :
மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

காட்பாடி தனித் தாலுகாவாக எப்போது மாற்றப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காட்பாடியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி கே. எம். கலைச்செல்வி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவரின் ஆட்சியின்போது காட்பாடியை தனி தாலுக்காவாக பிரிக்கக் கேட்டு, அங்கே அதற்கு ஆதாரமாக துணைக் கருவூலம் ஒன்று இயங்கவும் அனுமதிக்கப்பட்டு உள்ளது. எனவே பொன்மனச் செம்மலின் பிரதிபலிப்பாக விளங்கும் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் அரசு இதை அவசியம் எங்களுக்குச் செய்து தர வேண்டும் என்று மெத்தப் பணிவன்போடு வேண்டிக் கொள்கிறேன். காட்பாடி தொகுதி என்பது ஸ்கேட்டர்டு ஏரியா. ஒரு சாதாரண ஜாதிச் சான்றிதழ் வாங்குவதானாலும்கூட அவர்கள் குடியாத்தம் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு எங்கள் காட்பாடியை தனித் தாலுக்காவாகப் பிரித்துத் தர வேண்டும் என்று வேண்டி அதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.





முற்பகல் 9-45

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்பாடி இன்றைக்கு குடியாத்தம் வட்டத்தில் இருக்கிறது. குடியாத்தத்தை தலைமையிடமாகக் கொண்ட வட்டம் அது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி காட்பாடி என்பது குடியாத்தத்திலிருந்து 30 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. ஆகவே, மக்கள் வட்ட ஆட்சியர் இடத்தில் செல்வதற்கு தூரம் என்பதை இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது. அரசு ஏற்றுக்கொண்டாலும் அந்த காட்பாடி என்பது வேலூரை தலைமையிடமாகக் கொண்ட வேலூர் வட்டத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில்தான் உள்ளது. ஆகவே, காட்பாடி, காட்பாடியைச் சேர்ந்த கிராமங்களை வேலூர் வட்டத்தில் சேர்க்கலாமா என்றும் அரசு பரிசீலித்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 359, திருமதி ரமணி நல்லதம்பி, மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

359—

திசையன்விளை சலவைத் தொழிலாளர்களுக்கு வசதி

*41 திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ராதாபுரம் திசையன்விளையில் சலவைத் தொழிலாளர்களுக்கு டோபிகானா மற்றும் நீர் வசதி ஏற்படுத்தித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்சமயம் இல்லை.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்த திசையன்விளையில் டோபிகானா வசதிக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இடத்தை எல்லாம் பார்வையிட்டு அந்த நிலம் அரசு நிலமாக இருந்தபோதிலும் கூட வருவாய்த்துறை அதை ஒப்படைசெய்ய தயக்கம் காட்டுகின்ற காரணத்தால் அது கடந்து கொண்டே இருக்கிறது ஆகவே, தான் இந்தக் கேள்வியை இங்கே கொடுத்தேன்.

[1992 மார்ச் 26

ஆகவே, அந்தநிலத்தை ஒப்படைத்து அந்த டோபிகானா எச திியை உடனே செயற்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று அரசு ஏற்கெனவே அனுமதிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைப்போன்ற சலவைத்துறைகள் பற்றிய குறிப்புகள் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர்நல அலுவலர் இடமிருந்து வருகிறபோது அதை இயக்குநர் அலுவலகம் ஆராய்ந்து முடிவு எடுக்கும். 80 ஆயிரம் ரூபாய்க்கு உட்பட்ட திட்டமாக இருந்தால் அவர்களே அனுமதி வழங்குகிறார்கள். 80 ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருந்தால் அரசின் அனுமதிக்காக வருகிறது. ஆண்டுதோறும் ஒதுக்குகிற நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்துத்தான் இத்தகைய சலவைத் துறைகள் அனுமதிக்கப்படுகின்றன. இந்தக் கேள்வியில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற திசையன் விளையைப் பொறுத்த வரையில் அந்தப் பேரூராட்சி, நிதி வசதியிலே குறைவாக இருக்கின்ற காரணத்தாலே உடனடியாக அவர்கள் தங்களுடைய 20 சதவீதப் பங்கை செலுத்த முடியாத ஒரு சூழ்நிலையிலே இந்தக் காரியத்தை மேற்கொள்ளவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற இடம் ஓடைப்புறம் போக்கு நிலமாக உள்ளது. அதில் மழைக் காலங்களில் தண்ணீர் வருகிறது என்ற குறிப்புகள் எல்லாம் இருக்கின்றன. ஆனால் அதைப்பற்றிய குறிப்புரையை இனிமேல் நம்முடைய இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்புவதாக அந்த மாவட்ட அலுவலர் தெரிவித்திருக்கிறார். அப்படி அந்தக் குறிப்புரைகள் வந்ததற்குப் பிறகு அரசு நிதிநிலையை ஒட்டி பரிசீலிக்கும். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுதான் பரிசீலிக்கப் படும் என்று சொல்லிவிட்டார்களே !

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திசையன்விளையில் டோபிகானாவிற்குச் தேர்வு செய்யப்பட்டிருக்கின்ற நிலம் ஏரிப் புறம்போக்கு அல்ல. அரசினுடைய நத்தம் நிலம். அதிலே சிலர் வாழையை பயிரிட்டுக்கொண்டு இடைஞ்சல்களை எல்லாம் தந்து கொண்டிருக்கிறார்கள். இப்படித்தான் ஒவ்வொரு அரசின் திட்டத்திற்கும் இடையூறு நடந்து கொண்டிருக்கிறது. மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கூட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.



1992 மார்ச் 26]

திருமதி ரமணி நல்லதம்பி: இதுபற்றிக் கூறியிருக்கிறார்கள். ஆகவே அது குறித்த விவரங்களை கொஞ்சம் சிரத்தை எடுத்து செயலாற்றி அந்தத் திட்டத்தைச் செயற்படுத்தித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலம் ஏரிப் புறம்போக்கு என்று சொல்லவில்லை. ஓடைப்புறம்போக்கு நிலம்தான். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பதைப்போன்று அங்கே ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என்றுதான் அரசுக்குக் குறிப்பு வந்திருக்கிறது. ஒருவேளை அது எந்தப் பயனுக்கும் உபயோகப்படுத்தப்படாமல் இருக்கின்ற காரணத்தால் யாராவது இப்படி விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை ஆனால் குறிப்பிலே அங்கே எந்த ஆக்கிரமிப்பும் இல்லை என்று தான் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்த இடத்திலே கட்டுவதற்கான குறிப்பை ஆராய்ந்து நம்முடைய பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு அனுப்புவதாக அந்த மாவட்ட அலுவலர் தெரிவித்து இருக்கிறார். அப்படி வந்ததற்குப் பிறகு நிதி நிலையையொட்டி, நிச்சயமாக அது பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 9–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 360, திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

360—

தனியார் பொறியியல் கல்லூரி சேர்க்கையில் முறைகேடுகள்

*3797 திரு. கி. இராஜன் பாபு என்கிற தணிகை பாபு :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தனியார் துறையிலுள்ள பொறியியல் கல்லூரி மற்றும் தொழில்நுட்ப நிலையங்களில் மாணவர் சேர்க்கையில் முறைகேடுகள் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவற்றைக் களைந்திட அரசு ஆவன செய்யுமா?

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ) : ஒரு சில சுயநிதி பொறியியல் கல்லூரி மற்றும் பாலிடெக்னிக்குகள், சேர்க்கைகளில் தவறு செய்துள்ளதாகப் புகார்கள் வந்து, விசாரிக்கப்பட்டு நிர்வாகங்கள் எச்சரிக்கப்பட்டுள்ளன.

<u>திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தக்களை என்ற இடத்தில் இருக்கின்ற நூருல் இஸ்லாம் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு பொறியியல் படிக்கின்ற சுரேஷ் என்கின்ற மாணவன் ஊனமுற்ற கோட்டாவில் அங்கே இடத்தைப் பெற்று ஆஸ்த்மா நோயினால் பீடிக்கப்பட்டு இன்றையு தினம் அந்த மாணவன் பெற்றோருடைய பாதுகாப்போடு இருக்க வேண்டும் என்பதால் அவன், பெற்றோர்கள் இருக்கின்ற இடத்திலே இருந்தால்தான் அவனுடைய மருத்துவ சிகிச்சைக்கு வாய்ப்பாகவும், ஏதுவாகவும், இருக்கும் என்கிற மருத்துவர்களின் அறிவுரைப்படி—அந்த மாணவனுக்கு சென்னையிலே இருக்கின்ற எம். ஜி. ஆர். பொறியியல் கல்லூரியிலே இடம் தருவதற்கு ஆவன செய்யப்படுமா ?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு, மூலக் கேள்வி, தனியார் துறை பொறியியல் கல்லூரியில் மாணவர் சேர்க்கையில் முறைகேடு உள்ளதா என்பது பற்றியது.

<u>திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறைகேடுகளைத்தான் சொல்லிக் கொண்டு இருக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : முறைகேடுகள் இருக்கின்றனவா என்பதைப் பற்றிக் கேட்டுவிட்டு, தனிப்பட்ட ஒரு மாணவனை, அங்கே இருக்கின்ற மாணவனை மாற்றி, இங்கே சேர்ப்பீர்களா என்று கேட்பது எப்படி. இதிலே துணைக் கேள்வியாகும்.

<u>திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரிக்கு அந்த மாணவனுடைய பெற்றோர்கள் சென்றால் அவர்களை மிரட்டி அனுப்பி இருக்கிறார்கள். அதேபோன்று என்னுடைய தொகுதியிலேகூட, ஒரு தனியார் கல்லூரியில், அதாவது தொடுகாடு என்று அழைக்கப்படுகின்ற இடத்தில் உள்ள ஐ.டி.ஐ-யிலே ஒரு மாணவனைச் சேர்ப்பதற்காகச் சென்று இருக்கிறார்கள். ஐந்து ஆயிரம் ரூபாய் கேட்டு இருக்கிறார்கள். 4,500 ரூபாய் கொடுத்து இருக்கிறார்கள். 500 ரூபாய் தரவில்லை என்பதற்காக அந்த மாணவனை வெளியேற்றி இருக்கிறார்கள். எனவே





அந்த மாணவன் விரக்தியின் எல்லைக்கே சென்று, தற்கொலை செய்து கொள்கின்ற அளவிற்கு அவன் தூக்கு போட்டுக் கொண்டு இருக்கிறான். மருத்துவ சிகிச்சைக்குப் பிறகு அவனுடைய உடல் நலம் தேறி இன்றையதினம் இருந்து கொண்டு இருக்கிறான். இதைப்போன்ற முறைகேடுகள் இருந்து கொண்டிருக்கின்றன. எனவே நமது புனித தெய்வமான தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர், புனிதத் தாய், டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் இந்தக் குறைகளைக் களைவதற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுயநிதிக் கல்லூரியில் மட்டுமல்ல, வேறு எந்தக் கல்லூரியாக இருந்தாலும், பாலிடெக்னிக்காக இருந்தாலும், பள்ளிக்கூடமாக இருந்தாலும், எந்தக் கல்வி நிறுவனமாக இருந்தாலும், முறைகேடுகள், தவறுகள் என்று இருக்கிறபொழுது அதைத் திருத்துவதற்கும், அவ்வா லாமல் செய்வதற்கும்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் என்னை அமைச்சர் பொறுப்பிலே வைத்தி கள். ஆகவே, குறிப்பிட்ட கல்லூரியிலே ஏதாவது தவறுகள் இருக்குமேயானால், அதை எங்களது கவனத்திற்குக் கொண்டு வந்தால், அந்தத் தவறை திருத்துவதற்கான நடவடிக்கையை நாங்கள் மேற்கொள்வோம். மாண்புமிகு உறுப்பினர், குறிப்பிட்ட ஒரு மாணவன், குறிப்பிட்ட ஒரு கல்லூரியிலிருந்து, சென்னையிலே இருக்கிற ஒரு குறிப்பிட்ட கல்லூரியில் சேர்வதற்கான ஒரு கோரிக்கையைத்தான் இங்கே மன்றத்திலே வைத்து இருக்கின்றார்கள். பொதுவாக, சுயநிதிக் கல்லூரிகளிலே சொல்லப்படுகின்ற பல்வகை முறைகேடுகளில் இதுவும் ஒன்று. அரசின் அனுமதியில்லாமல் ஒரு கல்லூரியிலிருந்து இன்னொரு கல்லூரியிலே சேருவதற்கு, அவர்கள் அனுமதி தருகிறார்கள் என்பதுதான் ஒரு முறைகேடாகச் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட நிலையில், இது ஒரு முறைகேடாக இல்லாமல், ஒரு மாணவனுக்குச் செய்கின்ற ஒரு நியாயமான உதவியாக இருக்குமேயானால் அதைக் குறித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும். மற்றபடி ஐ. டி. ஐ., என்பது கல்வித் துறையின் கீழ் வராது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. ஜி. பழனிசாமி.

<u>திரு. ஜி. பழனிசாமி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுயநிதி பெற்று பொறியியல் கல்லூரி நடத்தக்கூடிய கல்லூரிகள் மாணவர்களிடத்தில் தங்கள் இஷ்டம்போல் பணங்களைப் பெற்று, அவர்களைச் சேர்க்கின்ற ஒரு தன்மை இருக்கிறது. அதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு முன்வருமா ? அதே போன்று, அதிலே பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கு.

1992 மார்ச் 26]

அரசு ஊழியர்களுக்கு வழங்குகின்ற, அரசு ஊழியர்களாக பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு வழங்குவதுபோன்ற அடிப்படையான சம்பளத்தை, தனியார் கல்லூரிகளிலே பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கும் வழங்குவதற்கு அரசு ஏதாவது ஒரு சட்டத்தைக் கொண்டு வர முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்கல்வி பெறுகின்ற மாணவர்கள், அந்தக் கல்விச் செலவுக்கான அந்தத் தொகையினை அவர்களே பகிர்ந்து கொள்கின்ற ஒரு முறையைதான் இப்போது தேசியக் கல்விக் கொள்கை அங்கீகரிக்கிறது ஏழை எளிய மாணவர்களுக்கு வேண்டுமானால் அரசு தான் அந்தச் செலவை ஏற்றுக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அந்த முறையில் ஒரு சுய நிதிக் கல்லூரியோ அல்லது சுய நிதி பாலிடெக்னிக்கோ நடத்துவதற்கு என்ன செலவாகும் என்பதைப் பார்த்து, அதிலே சேர்ந்து படிக்கின்ற மாணவர்கள் அந்தச் செலவைப் பகிர்ந்து கொள்கிற அளவிற்கு ஒரு முறையை வகுப்பதற்காகப் பல்கலைக் கழக மானியக் குழு, அகில இந்திய தொழில் நுட்பக் கழகம், மத்திய அரசு, மாநில அரசு போன்றவைகள் கருத்தைச் செலுத்தி ஆராய்ந்து வருகின்றன. அப்பொழுது ஒரு நல்ல முறையை வகுக்க முடியும் என்று நான் நம்புகிறேன். அது வரைக்கும் அதிகத் தொகைகளை வாங்கி மாணவர்களைச் சேர்க்கின்ற முறையைக் கட்டுப்படுத்துகின்ற முயற்சியிலே அரசு ஈடுபடும். ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில், அரசாங்கக் கல்லூரிகளிலே அல்லது அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளிலே என்ன சம்பளம் தரப்படுகிறதோ அதே சம்பளம்தான் இந்தச் சுய நிதிக் கல்லூரியிலும் தர வேண்டும் என்று அரசு விரும்புகிறது. அதையும் அமல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

முற்பகல் 9—55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 361, திரு. கே. முனிவெங்கடப்பன்—மாண்புமிகு கல்வி அமைச்சர்.

361—

நூலகங்களில் '' நமது எம்.ஜி.ஆர். '' நாளிதழ்.

* 9375 திரு. கே. முனிவெங்கடப்பன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பொது மக்கள் விரும்பிப் படிக்கும் '' நமது எம்.ஜி.ஆர். '' நாளிதழ் எல்லா நூலகங்களிலும் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் கிடைக்கும்?



1992 மார்ச் 26]

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : 1991-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் நூலக ஆணைக் குழுக்களின் நூலகங்களுக்கு '' நமது எம்.ஜி.ஆர். '' நாளிதழ் வாங்கப்பட்டு வருகிறது.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, செய்தித்தாள்கள் என்பது உண்மையான செய்திகளை உரிய முறையில் மக்களுக்குக் கொடுப்பதாகும். இன்றைக்குச் செய்தித்தாள்கள் இலக்கணப்படி, இலக்கணத்திற்கேற்ப உண்மையான செய்திகளை முறைப்படி தந்து கொண்டிருக்கும் இந்தியத் துணைக்கண்டத்திலேயே வல்லமை படைத்த முதலமைச்சராக, இறையுள்ளம் கொண்ட முதலமைச்சராக, நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் கரங்களால் வெளியிடப்பட்ட '' நமது எம்.ஜி.ஆர். '' செய்தித்தாளானது, குறிப்பாக எல்லா பொது நூலகங்களுக்கும், குறிப்பாக கிராமப்புறங்களிலே இருக்கும் நூலகங்களுக்கும் வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கேள்விக்கு ஏற்கனவே இந்தத் தேதியிலிருந்து வழங்கப்படுகிறது என்று அறிவித்திருக்கிறார். அமைச்சருடைய பதிலைக் கேட்டு நீங்கள் கேள்வி கேட்க வேண்டும். 11 ஆம் மாதத்திலிருந்து வழங்கப்படுகிறது என்று அறிவித்ததற்குப் பிறகு, வழங்கப்படுமா என்று இன்னொரு கேள்வி கேட்டால் சரியாக இருக்காது. திரு. ஆர். பி. பரமசிவம்.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எல்லா நூலகங்களுக்கும் அளிக்கப்படுகிற '' நமது எம்.ஜி.ஆர். '' பத்திரிகை எவ்வளவு என்பதனையும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முரசொலி பத்திரிகை அனைத்து கிராமங்களுக்கும் செல்லுகின்றன. அதுபோன்று உள்ளாட்சித் துறையில் அனைத்து ஊராட்சி மன்றங்களும் இதை வாங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அது சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் கேட்கப்பட வேண்டும்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சத்துணவு கொடுத்து, இலட்சக்கணக்கான ஏழை மாணவர்களைக் கல்வி பயிலச் செய்திருக்கும் பொன்மனச்

செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரைத் தாங்கி வருகின்ற அந்த நாளிதழை எல்லாப் பள்ளிக்கூட நூலகங்களுக்கும் அரசு வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொது நூலகங்களுக்கு வாங்கு மாறு ஆணை இடப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூடங்களுக்கு, பள்ளிக் கூடங்களே, அவர்களேதான் முடிவெடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 362. டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர்,

362—

அரசு மருத்துவமனைகளுக்கு தரமுள்ள மருந்துகள் கொள்முதல்.

* 1238 டாக்டர் மு. சீனியம்மாள் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசு மருத்துவமனையில் அளிக்கப்படும் மருந்துகள் தரமுள்ள நிறுவனங்களிலிருந்தே கொள்முதல் செய்யப்பட வேண்டும் என்பதை அரசு அறிவுறுத்துமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு மருத்துவமனைகளில் வழங்கப்படும் மருந்துகள் அனைத்தும் தரமுள்ள நிறுவனங்களிலிருந்தே கொள்முதல் செய்யப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகிறது.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைரவரவர்களே, தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்ட மருத்துவ மனைகள், தாலுக்கா மருத்துவமனைகள், ஆரம்பச் சுகாதார நிலையம் மற்றும் பேரூராட்சி மருத்துவ மனைகளில் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்ற மாத்திரைகள் மருந்துகள் பர்ச்சேசிங் கமிட்டி மூலம் அனுமதி பெற்ற பின்னர்தான் எல்லா மருத்துவமனைகளுக்கும் கொடுக்கப் படுகின்றது. பெரும்பாலும் அரசு மருத்துவமனைகளில் உள்ள மருத்துவர்கள் எவ்வளவு நல்ல வைத்தியம் செய்தாலும் கொடுக்கப்படுகின்ற மருந்துகளினுடைய தரம் வீரியம் குறைவாக இருந்தால் மக்களுக்குச் செய்கின்ற பலன் முழுமை





அடைவதில்லை. எனவே, மக்கள் இப்படி தரம் இல்லாத மாத்திரைகளாக இருப்பதன் காரணமாகவும், தனியார் மருத்துவமனைகளை நாடிச் செல்லுகின்ற ஒரு அவல நிலை உள்ளது. எனவே, உடல் நலத்தையே தனது உயிர் நோக்கமாகக் கொண்ட மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பத்தாயிரம் மருத்துவ முகாம்களை அமைத்து மக்களைக் கவனித்துக் கொண்டிருந்தபோதிலும், அடிப்படைத் தேவைகளுக்காகத் திங்கள் தோறும் இலட்சக் கணக்கான மக்கள் கோட்டைக்கு வருகின்ற ........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் மு. சீனியம்மாள். உங்களை உரை நிகழ்த்த நான் கூப்பிட வில்லை. கேள்விதான் கேட்க வேண்டும். ஒவ்வொரு உறுப்பினரும் இதைப்போல துணைக் கேள்விகள் கேட்காமல் பெரிய விளக்கங்கள் கொடுக்கிற காரணத்தால் நான் குறிப் பிட்ட நேரத்திற்குள் கேள்வி நேரத்தை முடிக்க முடிய வில்லை. இதை மனதிலே கொண்டு உறுப்பினர்கள் கேள்வி கேட்க வேண்டும்.

முற்பகல் 10–00

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, எனவே, தமிழகம்தான் தமிழக முதல்வர் என்ற ரீதியில், தமிழக மக்களுக்கு தரமான மருந்துகளை, தரமுள்ள கம்பெனிகளிடமிருந்து பெறுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? இதுவரை எந் தெந்த தரமுள்ள கம்பெனிகளிடமிருந்து மருந்துகள் வாங்கப் பட்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன் தரமான கம்பெனிகளிடமிருந்துதான் வாங்கப்படுகின்றன, தரமான மருந்துகள்தான் வாங்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்கிறபோது அவருடைய நோக்கம் எப்படி இருந்தது என்று சொன்னால், பர்சேசிங் கமிட்டி யிலே முடிவு செய்கிற மருந்துகள் இல்லாமல், ஆங்காங்கே மருத்துவர்கள் என்னென்ன மருந்துகளை நினைக்கிறார்களோ அதை வாங்கவேண்டுமென்ற உணர்வோடு அவர்கள் சொல் வதாக நான் அறிகிறேன். அப்படித்தான் அவர்கள் நினைத் தார்கள். ஆனால், அதைப் போல அனுமதிக்க முடியாது. ஏறத்தாழ 1,200 மருந்துகளை வாங்குவதற்கு முடிவு செய்து அவை என்னென்ன மருந்துகள் என்பதை அந்தந்த ஸ்பெஷ லிஸ்டுகளிடமிருந்து கேட்டறிந்து, அவற்றைத்தான் இப் போது அரசாங்கம் வைத்திருக்கிறது. மருந்து கம்பெனிகள்

ஏவை என்று கேட்டால், அவை 200-க்கு மேல் இருக்கின்றன. நான் பட்டியல் போட வேண்டியிருக்கும். Ov rall Picture சொல்ல வேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு அரசுத் துறையால் நடத்தப்படுகிற கம்பெனிகள், மத்திய அரசுத் துறையால், மாநில அரசுத் துறையால் நடத்தப்படுகிற கம்பெனிகளிலே அதிகமாக வாங்கிக் கொண்டிருக்கிறோம். அடுத்து, 'ஜாயிண்ட் செக்டார்' அதற்கு அடுத்து, Small Scale Industries in Tamil Nadu அதற்கு அடுத்து, தனியார் துறை; தனியார் துறைக்குப் போவது மிகவும் குறைவாக இருக்கும். இந்த மூன்று கேட்டகிரிகளிலே தான் நாம் அதிகமாக வாங்கிக் கொண்டிருக்கிறோம். எனவே தரமான மருந்துகள் இப்போது வாங்கப்படுகின்றன. அதிலே எந்தவிதமான பிரச்சினையும் இருப்பதாகத் தெரியவில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> டாக்டர் எம். கருப்புசாமி.

<u>டாக்டர் எம். கருப்புசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரமான கம்பெனிகளிலிருந்து வாங்கப்படும் மருந்துகள், 'பல்க் பர்சேஸ்' என்று சொல்லப்படுகிற ஆசிலேதான் வாங்குகிறார்கள். அதில் 'த.அ.' என்று எழுதியிருப்பதை, சில நோயாளிகள் 'தருவதற்கு அல்ல என்று நினைத்து வீசிவிடுகிறார்கள். ஆகவே தரமான மருந்துகளை 'ஸ்ட்ரிப் பேக்கிங்' அல்லது 'பிளிஸ்டர் பேக்கிங்' என்று சொல்லக்கூடிய பிளாஸ்டிக் உறையில் போடப்பட்டு, கொடுத்தால் அவற்றை உபயோகிப்பார்கள். பிளாஸ்டிக் உறையில் இருந்தால்தான் உயர்ந்த ரக மருந்துகள் என்று அதை சாப்பிடக்கூடிய நிலையில் ஏழை எளியவர்கள் நினைத்து விடுகிறார்கள். ஆகவே, இனிமேலாவது 'ஸ்ட்ரிப் பேக்கிங்', 'பிளிஸ்டர் பேக்கிங்' என்ற முறையில், மருந்துகளை வாங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு அரசு' என்பதற்குத்தான் 'த.அ.' என்று போடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அதை 'தருவதற்கு அல்ல' என்று சொன்னார்கள். அதை மாண்புமிகு உறுப்பினர் இப்படியும் எடுத்துக் கொள்ளலாம். வெளியிலே தருவதற்கு அல்ல அரசு மருத்துவமனையில் மட்டும் தருவதற்கு என்று எடுத்துக் கொள்ளலாம். எனவே, வெளியிலே வந்து விடக்கூடாது என்பதறகாகத்தான் அந்த அடையாளமே போடப்பட்டிருக்கிறது. இப்போது, நாம் புதிதாக ஒரு கொள்கையை வகுத்திருக்கிறோம். அதன்படி, முடிந்தவரை 'ஸ்ட்ரிப் பேக்கிங்' இலே போட்டுத்தர வேண்டுமென்று சொல்லி





ஒரு ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். நடைமுறையிலே இந்த ஆண்டு பார்த்தால்தான் முழுவதையும் அப்படிச் செய்ய முடியுமா என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். ஏற்கெனவே கூட நாங்கள் நினைத்தோம்; அதை ஆசிலே கொடுக்கிற காரணத்தினால், சில நேரங்களிலே கவரிலே போட்டுக் கொடுக்கிறார்கள்; சில நேரங்களிலே அவசரத்திலே கவரிலே போட்டுக் கொடுக்காத காரணத்தினால், அழுக்கு ஏற்படுகிறது. அதுகூட நோய்க்கு வழிவகை செய்து விடும் என்ற காரணத்தினால், இந்த ஏற்பாட்டை இப்போது செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். எனவே, வருகிற ஆண்டிலே, அதைச் சீர்செய்ய முடியுமென்று கருதுகிறேன்.

<u>டாக்டர் மு. சீனியம்மாள் ;</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னது போல, நான் அந்தக் கருத்தைச் சொல்லவில்லை. சில காண்டிராக்ட் மருந்துக் கடைக்காரர்கள், பர்சேசிங் கமிட்டியிடம் சில ஒப்பந்தங்களைச் செய்து கொண்டு, சென்ற திராவிட முன்னேற்றக் கழக அரசில் முறைகேடுகள் நடந்திருக்கிற காரணத்தினால்தான், நான் இந்த பாயிண்டைச் சொல்ல வந்தேன், எனவே. தரமான மருந்துகளைத் தர வேண்டுமென்ற தன்னம்பிக்கையுள்ள நமது தமிழக முதலமைச்சர் அவர்களுடைய அரசில். அத்தகைய முறைகேடுகளைக் களைந்து விட்டு. மீண்டும் நல்ல தரமான மருந்துகளைத் தரமுள்ள கம்பெனிகளிலிருந்து பெற்றுத் தருவார்களா என்பதை அமைச்சர் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. டெண்டர்களில் யார். யார் கலந்துகொள்ள வேண்டுமென்பதிலே நாங்கள் தரத்தைப் பார்த்து. மோசமான கம்பெனிகளை அதிலே வரவிடாமல் செய்து விடுகிறோம், அதற்கு என்னென்ன சர்டிபிகேட்' தேவையோ அதையெல்லாம் பெற்ற பிறகுதான். அந்த டெண்டரிலே கலந்துகொள்ள. முடியும், அதற்குப் பின்னாலே. மருந்துகள் வாங்குகிறபோது ஒவ்வொரு முறையும் அந்த மருந்துகள் தரமானவையாக இருக்கின்றனவா? அதனுடைய தரத்திலே ஏதேனும் குறை இருக்கிறதா என்பதையும் உரிய அதிகாரிகளை வைத்து முடிவு செய்கிறோம், அதிலே. யாராவது அப்படி தரமில்லாத மருந்துகளைக் கொடுத்திருந்தால். அது எவ்வளவு பெரிய கம்பெனியாக இருந்தாலும். குறைந்தபட்சம் அதற்குப் பின்னாலே. 5 ஆண்டுக் காலத்திற்கு டெண்டரே கேட்கமுடியாதநிலையில். 6 பிளாக் லிஸ்ட்'டில் அவர்களை வைக்கிற நிலையைப் போட்டு வைத்திருக்கிறோம், எனவே, நிச்சயமாக தரமில்லாத மருந்துகள் அரசு மருத்துவமனைகளிலே வாங்குவதற்கு வாய்ப்பே இல்லாத அளவுக்கு இப்போது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

[1992 மார்ச் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எம். ஆண்டி அம்பலம்.

திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தரமுள்ள ஊசி மருந்துகளை, ஏழை மக்களிடம் வெளியே வாங்கி வரச் சொல்லும் நிலையை மாற்றி. ஏழை மக்களுக்கு தரமுள்ள ஊசி மருந்துகள், அரசு மருத்துவ மனைகளிலேயே கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஏற்கெனவே இது பலமுறை சட்டமன்றத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, 'டிமாண்' டிலே கூட இதைப் பற்றி நான் சொன்னேன், இடையிலே அந்தத் தொய்வு முன்பு ஏற்பட்ட உண்மை என்றும், அதற்குப் பின்னாலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 6 கோடி ரூபாயை தனியாக இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஒதுக்கிக் கொடுத்து, இப்போது அந்த நிலைமை சீர் செய்யப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பிரச்சினை இப்போது தீர்க்கப்பட்டிருக்கிறது,

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 363.: திரு. சி. இராமசுவாமி. திரு. க. அர்ச்சுனன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்,

363—

அரசு டெப்போவிலுள்ள சந்தனக் கட்டைகளை விற்க நடவடிக்கை,

*5207— திரு. சி. இராமசுவாமி :
திரு. க. அர்ச்சுனன் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகக் காடுகளில் சந்தனக் கட்டைகள் அதிகமாக கடத்தப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) சந்தனக் கட்டைத் திருடர்கள் குறைந்த விலைக்கு சந்தனக் கட்டை தருவதால் அரசு டெப்போவில் உள்ள சந்தனக் கட்டைகள் விலைபோகாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில். அந்த சந்தனக் கட்டைகளை விற்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?



1992 மார்ச் 26]

மாண்புமிகு திரு. கே. ஏ, செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. : —

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) திருட்டு சந்தனக் கட்டைகள் திருடப்படுகின்றவர்களால் தனியார் தொழிற்சாலைகளுக்கு குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றது என்பதற்கான விவரம் ஏதுமில்லை திருட்டுத்தனமாக விற்கப்படும் சந்தனமர விற்பனையால் அரசு சந்தனக்கட்டை ஏலம் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை, மேலும், விற்பனை விலையிலும் எந்தவிதமான பாதிப்பும் இல்லை. சந்தனக் கட்டைகளை விற்பதில் முன்பிருந்த தேக்க நிலை இல்லை, வியாபார சந்தை மற்றும் ஏற்றுமதிக் கொள்கை ஒரு காரணமாகும். தற்போது. கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு ஏற்றுமதி ஊக்கப்படுத்தப்படுவதால் சமீபத்திய ஏலத்தில் சந்தனக் கட்டைக்கு நல்ல விலை கிடைத்துள்ளது.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் தொகுதியில் கல்வராயன் மலைப் பகுதியில். சந்தனக் கடத்தல்காரர்கள் வனத்துறை அதிகாரிகள் உதவியுடன் பெருமளவில் சந்தனக் கட்டைகளைக் கடத்துகிறார்கள், அதை அரசு அறியுமா ? மேற்படி வனத்துறை அதிகாரி ஒருவர் கல்வராயன் மலைப்பகுதியிலிருந்து மூன்றுமுறை அரசால் மாற்றப்பட்டும் மீண்டும், மீண்டும் அதே கல்வராயன் மலைப் பகுதிக்கே பல ஆயிரம் செலவு செய்து மாறுதல் மீண்டும் வாங்கி அங்கே கள்ளக்கடத்தல்காரர்களுக்கு உதவியாக இருப்பதை அரசு அறியுமா ? தேங்கிக் கிடக்கும் சந்தனக் கட்டைகளைக் கூடிய விரைவில் விற்பனை செய்ய தீவிர நடவடிக்கை எடுக்கப்படுமா ? என்பதையும் அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போதுதான் அதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள், ஒரு அதிகாரி மூன்று முறை அங்கே பணத்தைக் கொடுத்து மீண்டும் மாறுதல் வாங்கியிருக்கிறார் என்பதை இப்போதுதான் எனக்குத் தெரிவித்து இருக்கிறார்கள், அதுபோன்ற அதிகாரியினுடைய பெயரைக் குறிப்பிடுவீர்களேயானால், சந்தவக்கட்டைகள் இருக்கின்ற அந்தப் பகுதியிலிருந்து அவரை மாற்றி சாதாரண காடு இருக்கின்ற பகுதிக்கு அவரை மாற்றுவதற்கு நடவடிக்கையை நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசு எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்,

[1992 மார்ச் 26

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மர எண்ணெய்த் தொழிற்சாலைகள் அரசு டெப்போக்களிலிருந்து மட்டும்தான் அவைகளைக் கொள்முதல் செய்ய முடியும். அவர்கள் திருட்டுத்தனமாக பல இடங் களில் சந்தனக் கட்டைகளைக் குறைந்த விலைக்கு வாங்கி தொழிற்சாலையில் தொழில் செய்கிற காரணத்தால், அரசு டெப்போக்களில் இருந்து வாங்கக் கூடிய விற்பனையில் தேக்கநிலை ஏற்படுகிறது. அதைக் கண்காணிப்பதற்குத் தமிழகத்திலிருந்து சில தொழிற்சாலைகள் வேண்டுமானால் அதைக் கண்காணிக்க முடியும். ஆனால், முழுவதுமாக இங்கேயிருந்து திருட்டுத்தன மாக சந்தனக் கட்டைகளை கேரள மாநிலத்திற்குத்தான் கடத்திச் செல்கிறார்கள். எனவே, கேரள மாநிலத்தில் இருக் கின்ற தொழிற்சாலைகளைக் கண்காணிப்பதற்கு மத்திய அரசு மூலமாக ஏதாவது நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன் வருமா? ஏனென்று சொன்னால் அங்கு, எவ்வளவு அரசு டெப்போக்களில் இருந்து சந்தன மரங்கள் வாங்கப்படுகின்றன என்ற கணக்கைப் பார்க்கின்றபோது, திருட்டுத்தனமாக எவ்வளவு வாங்கப்படு கின்றது என்ற கணக்கு தெரிய வரும். எனவே, மத்திய அரசு மூலமாகக் கண்காணிப்பதற்கு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிடு கிற நேரத்தில், திருட்டுத்தனமாக சந்தனக் கட்டைகள் கடத்தப் பட்டு, கேரள மாநிலத்தில் எண்ணெய்த் தொழிற்சாலைகள் நடத்துகின்றார்கள் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பி னர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல தகவல்கள் எதுவும் என்னு டைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போல, ஏலத்தில், கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள், வேறு நாட்டை சேர்ந்தவர்கள் கூட இடம் பெறலாம். நம்முடைய அரசைப் பொறுத்தவரையிலும், இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, திருட்டுத்தனமாக சந்தனக் கட்டைகளைக் கடத்துகின்ற வர்கள் மீது கடுமையான நடவடிக்கையை நாம் மேற்கொண் டிருக்கிறோம். நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கிற தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப் பிற்கு வந்ததற்குப் பிறகுதான் குறுகிய காலத்திலே 120 பேர் களை குண்டர் சட்டத்திலே கைது செய்திருக்கிறோம் என்பதை நேற்றைய முன்தினம் சுட்டிக்காட்டியிருக்கிறேன். அதேபோல கடத்தப்பட்ட சந்தனக் கட்டைகளின் மதிப்பு ரூ. 4 கோடியே 54 இலட்சம் என்பதையும் கோடிட்டு காட்டினேன். அதேபோல, வனத்துறை வழக்கு சம்பந்தமாக 3,800 க்கும் மேற்பட்டவர் களின்மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. ஆக, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு சந்தனக் கட்டைகள் எங்கு எங்கு



1992 மார்ச் 26]

இருக்கிறதோ அந்தப் பகுதிகளில் அதிகாரிகளை நியமிக்கின்ற போது சிறப்பான அதிகாரிகளாக, நல்ல பணியாற்றக்கூடிய அதிகாரிகளாக தேர்வு செய்துதான் போடுகிறோம். எதிர்காலத் தில் இதுபோன்ற சிறிய தவறுகள் கூட நடக்கக்கூடாது என்பது தான் புரட்சித் தலைவி அவர்களின் ஆசை. அதை நிறை வேற்றுவதற்கு இந்த அரசு என்றைக்கும் தயங்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரங்களை வெட்டுவதற்கு அனுமதி வழங்கப் பெற்று, மரங்களை வெட்டுகின்றபோது அந்த மரங்களுடன் சந்தன மரங்களையும், வனத்துறை அதிகாரிகளை உடந்தை யாக வைத்து வெட்டி எடுத்துச் சென்று விடுகிறார்கள். ஆக மரங்களை வெட்ட அனுமதி வழங்காமலும், சந்தன மரங்களைக் கடத்துகின்றவர்களுக்குத் துணை போகின்ற அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிடு கிறபோது மரங்கள் வெட்டுவதற்கு அனுமதி கொடுக்கக்கூடாது என்று சொன்னார்கள். 100 ஆண்டுகளுக்கு மேலே எஸ்டேட்டில் சொந்த பட்டா நிலங்களில் மரங்களை வைத்திருப்பவர்களுக்கு மரங்களை வெட்டுவதற்கு சிலபேருக்கு அனுமதி தந்தாக வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு 7 மரங்கள் என்ற அளவில் மரங்களை வெட்டுவதற்கு அனுமதி தந்தாக வேண்டும். இல்லை யென்று சொன்னால் அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் செல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் குறிப் படுகின்ற போது, சாதாரண மரங்களை வெட்டிச் செல்லுகின்ற போது சந்தன மரங்களையும் வெட்டிக் கடத்திச் செல்வதாகச் சொன்னார்கள். அப்படி குறிப்பாக எந்த இடத்தில் அந்தமாதிரி தவறுகள் நடக்கிறது என்று சொல்வார்களேயானால்—அந்த இடத்தில் நம்முடைய அரசு பொறுத்தவரையிலும், வனத் துறையைப் பொறுத்தவரையிலும், தனிக் கவனம் எடுத்து அந்தக் குறிப்பிட்ட பகுதியிலே ஏதாவது சந்தன மரங்கள் கடத்தப்படு கின்றனவா என்பதைக் கண்காணிப்பதற்கு கண்காணிப்புக் குழு ஒன்றை உருவாக்க இருக்கிறோம். என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசைப் பொறுத்தவரை யிலும் சந்தன மரங்களாக இருந்தாலும் சரி, தேக்கு மரங்களாக இருந்தாலும் சரி, விலையுயர்ந்த மரங்கள் எதுவாக இருந்

தாலும் அவைகளைக் கடத்துகின்றவர்கள் கடுமையான தண்டனைக்குள்ளாவார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் (திருமதி) வெ. சரோஜா.

டாக்டர் (திருமதி) வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தனக் கட்டை கடத்தலில் பிடிபட்ட கட்டைகளை குறிப்பிட்ட காலத்திற்குள் ஏலம் விட்டு, அரசுக்கு நிதியைச் சேர்க்க ஆணை பிறப்பிக்குமா? அப்படிப் பிறப்பித்திருந்தால், குறிப்பிட்ட காலம் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிடிபட்ட சந்தனக் கட்டைகளை உடனுக்குடன் ஏலம் விடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதே நேரத்தில் சந்தனக் கட்டைகளைக் கொண்டு செல்லுகின்ற வாகனங்களை ஏலம் போடுவதற்குத்தான் நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கிற தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு சட்டத்தை வகுத்து இன்றைக்கு மத்திய அரசுக்கு அதை அனுப்பியிருக்கிறார்கள். மத்திய அரசின் அனுமதி பெற்றவுடனேயே கடத்தப்படுகின்ற வாகனங்களையும் உடனடியாக ஏலம் விடுவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். முருகையா பாண்டியன்.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற புகார்களின் பேரில் மாற்றப்படுகின்ற அதிகாரிகள் கோர்ட்டுக்குச் சென்று தடையாணை வாங்கிவிடுகிறார்கள். தடையாணை வாங்குகிறவர்களுக்குப் பின்னால் பதவி உயர்வு கொடுக்கும்போது அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்காமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னே இதுபோன்ற நிலைமைகள் ஏற்பட்டிருந்தன. இப்போது அந்த நிலை இல்லை மாறுதல் உத்தரவு போட்டவுடனேயே அதிகாரிகள் அவர்களே சென்று பணியில் அமர்ந்துவிடுகிறார்கள். காரணம் அவர்களை அழைத்து நாங்கள் பேசுகின்ற நேரத்தில் இதுபோன்ற தவறு செய்கிற அதிகாரிகளை மாற்றம்



செய்கிற போது அந்தத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு அறிவுரை வழங்கப்படுகிறது. ஆகவே, இதுபோன்ற நிலைமை இப்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரக் கடத்தல் செய்யும் வீரப்பனைப் பிடிப்பதற்கு ஒரு தனியார் துப்பறியும் நிறுவனம் முன்வந்து, அரசு அனுமதியும், உதவியும் செய்தால் ஒரு மாத காலத்திலே பிடித்துத் தருகிறோம் என்று அரசுக்கு ஏதாவது கடிதம் எழுதியுள்ளதா? அதுபோல் அரசின் உதவியுடன் வீரப்பனைப் பிடிப்பதற்கு அந்தத் தனியார் துப்பறியும் நிறுவனத்திற்கு அரசு அனுமதி ஏதும் வழங்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற கடிதம் எதுவும் அரசுக்கு வரவில்லை. நம்முடைய தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் நேற்றைய முன்தினம் கூட உரையாற்றுகின்ற நேரத்தில் குறிப்பிட்டார்கள். அவர் வேறு மாநிலத்திலே இருக்கின்ற காரணத்தினாலே உடனே அவரைக் கைது செய்ய முடியவில்லை என்று குறிப்பிட்டார்கள். ஆகவே இதுபோன்ற கருத்துக்கள் அரசுக்கு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 364. திருமதி என். சி. கனகவல்லி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்.

364—

## விளாத்திகுளம் தொகுதியில் கூட்டுறவு முறையில் நூற்பாலைகள்.

*4937 திருமதி என்.சி. கனகவல்லி: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விளாத்திகுளம் தொகுதியில் நெசவாளர்கள் அதிகம் வாழ்வதாலும் பருத்தி அதிகமாக விளைவதாலும் நூற்பாலைகள் இல்லாததாலும் கூட்டுறவு முறையில் நூற்பாலைகள் ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விளாத்திக்குளம் தொகுதியில் ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

திருமதி என். சி. கனகவல்லி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் தொகுதியிலும் என்னுடைய சிதம்பரனார் மாவட்டத்திலும், அதிகமாக பருத்தி உற்பத்தியாவதால் அப்பருத்தியை வெளி மாநிலங்களுக்கும், இதர மாவட்டங்களுக்கும் அனுப்புவதால் என்னுடைய சொந்த மாவட்டத்திலேயே தொழில் வசதி பெருகவோ, வேலை வாய்ப்பு கிடைக்கவோ அதிக வாய்ப்பு இல்லை. அதனால் அரசு கனிவோடு பரிசீலித்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அரசிலாவது எங்கள் மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் மூலம் நூற்பாலைகள் அமைத்து வேலை வாய்ப்பு கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், பேட்டையில் கூட்டுறவு நூற்பாலை 50,000 கதிர்களுடனும், எட்டயபுரத்தில் பாரதி நூற்பாலை 12,500 கதிர்களுடனும்செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் ஒட்டுமொத்தமாக 5 இலட்சம் பேல்கள் பஞ்சு தான் உற்பத்தி ஆகின்றன. மீதம் தேவைப்படுகின்ற 20 இலட்சம் பேல்களை இதர மாநிலங்களிலிருந்து பெற்று வருகிறோம். ஆதலால் தற்போது இருக்கிற இரண்டு நூற்பாலைகள் திருநெல்வேலி மாவட்டத்திலும், மீதம் 16 நூற்பாலைகள் இதர மாவட்டங்களிலும் சுமார் 16,000 பேல்கள் முதல் 18,000 பேல்கள் வரை சிட்டாநூல் மற்றும் கோன்நூல் ஆகியவற்றை உற்பத்தி செய்கின்றன. தற்போது உற்பத்தியாகும் நூல் அளவே உபரியாக இருப்பதால் இந்தக் கேள்விக்கு இடமில்லை என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 365—திரு. சோ. இராசாராமன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்

365—

## குப்பை மூலம் மின்சாரம் தயாரித்தல்.

*114. திரு. சோ. இராசாராமன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் குப்பை மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஒன்றை அரசுக்கு திருச்சி பெல் நிறுவனம் தந்துள்ளதா?



(ஆ) ஆம் எனில், இத்திட்டத்தை நிறைவேற்றுவது பற்றி அரசு பரிசீலிக்குமா ?

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் குப்பை மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஒன்றை பெல் நிறுவனம். நம்முடைய தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்திற்கு 'டெடா'-வுக்கு தந்துள்ளது, ஆனால் அந்தத் திட்டம் அதிகப்படியான விலைப் பட்டியலாக இருக்கின்ற காரணத்தினாலே, இந்தத் திட்டத்தை இப்போது நடைமுறைப்படுத்தலாமா என்பதைப் பற்றி அரசு பரிசீலனை செய்து முடிவெடுக்கவேண்டிய கட்டத்தில் இருக்கிறதுஎன்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இந்த திட்டத்திற்காக மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிறதா? அல்லது தனியார் துறையிலே செய்ய உள்ளார்களா? அல்லது கூட்டுறவுத் துறையிலே செய்ய இருக்கிறதா? அல்லது ஜாயிண்ட் செக்டார் மூலமாக செய்ய உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் நாள்தோறும் குவிகின்ற 900 டன் குப்பையை வைத்துக்கொண்டு ஏறத்தாழ 4 மெகா வாட் மின்சாரம் தயாரிக்கின்ற 45 கோடி ரூபாய் அளவிலே ஒரு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டது, இந்தத் திட்டத்தினுடைய விலை மதிப்பு அதிகமாக இருக்கின்ற காரணத்தாலே இது நடைமுறையிலே சாத்தியப்படுமா என்று இன்றைக்கு ஆராய்ந்துக்கொண்டு இருக்கின்றார்கள். அதற்குப் பின்னாலே, குப்பையினுடைய ஈரத்தன்மை மற்றும் குப்பையிலிருந்து உற்பத்தியாகும் எரிவாயுவினுடைய வெப்ப அளவு இவைகள் குறைந்து காணப்படுவதால், இயந்திரங்களை இயக்குவதற்குரிய வாய்ப்புகள் இல்லை என்று மின்சாரத் துறை தலைவர் கருத்து தெரிவித்திருக்கிறார். ஆகவே அதிலே மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்ற காரணத்தினாலேயே இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியுமா என்பதை இந்த அரசு ஆய்வு செய்துகொண்டிருக்கிறது,

திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெல் நிறுவனத்தினுடைய டைரக்டர் திரு. வாசுதேவன் அவர்கள் அளித்திருக்கின்ற இந்தத் திட்டம் மிக அருமையான திட்டம், குறைந்த செலவில் தமிழகத்திலே நகராட்சி, மாநகராட்சி, ஊராட்சி. இவைகளிலே உள்ள குப்பைகளைச் சுத்தம் செய்வதோடு மட்டுமல்லாமல், நம்

முடைய தமிழகத்தில் இந்த அனல் மின்சாரம், நீர் மின்சாரம் தட்டுப்பாடு இருக்கின்ற காரணத்தினால் இதை எல்லாம் போக்குவதற்கு உடனடியாக சென்னை நகரில் ஆரம்பிப்பதாக இந்தத் திட்டம் நிறுவப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அதேபோல தமிழகத்தின் மையப் பகுதியாக இருக்கின்ற திருச்சியிலும், திருச்சிக்கும் தஞ்சைக்கும் இடையிலே உள்ள ஒரு பகுதியையும் தேர்ந்தெடுத்து இதைச் செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்,

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போல இந்தத் திட்டம் மிகவும் குறைந்த விலையிலே இருக்கின்ற திட்டம் அல்ல, இது ஒரு 'காஸட்லி' என்று சொல்லப்படுகின்ற, அதிக அளவிலே விலைப் பட்டியல் உள்ள ஒரு திட்டமாகும், ஆகவேதான் பெஸ்ட் அண்ட் கம்பெனி என்ற நிறுவனம் சென்னை நகரில் கிடைக்கும் குப்பைகளின் மூலம் மின்சாரம் தயாரிக்கலாம் என்ற கருத்துரையைத் தந்தது, அதற்குப் பின்னாலேதான் இந்திய தொழில் நுட்ப நிறுவனத்தினுடைய ஆய்வுக்கு அனுப்பப்பட்டு இப்படிப்பட்ட கருத்துரைகள் எல்லாம் வந்திருக்கின்றன, மின்சாரத்துறையும் மாநகராட்சியும். மற்றும் குடிநீர்வடிகால் வாரிய அதிகாரிகளும் இதைப் பற்றி ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு விலைப் பட்டியல் நம்முடைய திட்டத் தயாரிப்பின் மதிப்பீட்டின்படி இருக்குமேயானால் இதை நடைமுறைப்படுத்துவதற்கு இந்த அரசு ஆய்வு செய்து சரியான முடிவுகளை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்,

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினா எண், 366. திரு, கே, பி, ராஜு மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்

366—

<u>பரம்பிக்குளம்— ஆழியாறு திட்டம்</u>

<u>'3321— திரு. கே. பி. ராஜு :</u> மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

கோயம்புத்தூர் மாவட்டம், பரம்பிக்குளம்— ஆழியாறு திட்டத்தை அரசு நிறைவேற்றுமா ?

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :</u> மாண்புமிகுபேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம், ஆழியாறு திட்டம் பற்றி ஏற்கனவே 3 நாட்களுக்கு முன்னாலே சட்டமன்றத்திலே விளக்கமாகச் சொல்லி இருக்கிறேன்; ஆகவே இந்த திட்டம் இன்றைக்கு



3 மண்டலங்களிலிருந்து 4 மண்டலங்களாக மாற்றுவதற்கு அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. கே. பி. ராஜு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திற்கு இந்த பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் கிடைத்தது ஒரு வரப்பிரசாதம், அந்த மாவட்டத்தில் இப்போது விவசாயிகளுக்கு அந்த திட்டம் அருமையாக அமைந்திருக்கிறது, அதிலே 4 மண்டலங்களாக்க புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலேயே வாய்க்கால் வெட்டப்பட்டு அது அப்படியே கிடப்பிலே கிடக்கிறது, மூன்று மண்டலங்களில் இருப்பவர்கள் தண்ணீரை முறையாகப் பயன்படுத்தாமல், தேக்கி வைத்துக் கொண்டு புஞ்சை எல்லாம் நஞ்சை ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள் ஆகவே அரசு அதைப் பரிசீலித்து நான்காவது மண்டலங்களில் உள்ள விவசாயிகளுக்கும் அந்த தண்ணீர் கிடைக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்த மட்டில் ஏறத்தாழ 2 லட்சம் ஏக்கர்களை 3 மண்டலங்களாகப் பிரித்து, once in 18 montus என்று சொல்கிற அளவுக்கு 18 மாதங்களுக்கு ஒரு முறை, ஒரு போகத்திற்கு 135 நாட்களுக்குத் தண்ணீர் விட்டு வருகிறோம். 4-வது மண்டலத்திற்கு உரிய வேலைகள், ஏறத்தாழ 1 லட்சத்து 75 ஆயிரம் ஏக்கர்களுக்கு விஸ்தரிக்க வேண்டிய ஒரு திட்டத்தை இந்த அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. நான் ஏற்கனவே இந்தத் திட்டத்தை விளக்கமாக சட்டமன்றத்தில் சொல்லி இருக்கிறேன். ஏற்கனவே ''மூன்றாவது மண்டலத்துக்காரர்கள் வழக்குமன்றத்திற்கு போய் 4-வது மண்டலத்திற்கு கொண்டு வரக் கூடாது என்று சொல்லி இன்றைக்கு நீதிமன்றத்தினுடைய தீர்ப்பும் வழங்கப்பட்டிருக்கிறது. நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு அரசுக்கு எதிரானது அல்ல என்பதையும் குறிப்பிட்டிருக்கிறேன். இருந்தாலும் இந்தப் பிரச்சினையை எடுக்கிறபோது 3-வது மண்டல பாசனதாரர்களுடைய நலனையும் இந்த அரசு கவனிக்க வேண்டும் என்கிற ஒரு அறிவுரையை தந்திருக்கிறார்கள். ஆகவே, இவைகளை எல்லாம் கவனத்திலே வைத்துக்கொண்டு இந்தப் பிரச்சினையிலே முடிவு எடுக்க வேண்டும் என்கிற காரணத்தினால் இதைப் பொதுப்பணித் துறை ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. மேலும் அதற்கு சட்டம் கொண்டு வர வேண்டிய பிரச்சினையும் இருக்கிறது. ஆகவே, தீவிர பரிசீலனைக்குப் பின்னால், தண்ணீர் பகிர்ந்து விடுவது பற்றிய முடிவை நம்முடைய ஒப்பற்ற மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய காலத்திலே எடுப்பதற்கு இந்த அரசு ஆய்வு செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1996 மார்ச் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனி சாமி.

பிற்பகல் 10—20

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்திலே, இந்த விஸ்தரிப்புப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலேயிருந்து இந்த விரிவாக்கப பகுதிக்கு கடந்த 10 ஆண்டுகளாக தண்ணீர் வராமல் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காங்கேயம்சட்டபேரவை தொகுதியில் நின்றபோது இந்த விரிவாக்கப் பகுதிக்கு தண்ணீர் விடுவ தாகச் சொல்லியிருப்பதால் விவசாய குடிமக்கள் புரட்சித் தலைவர் காலத்திலே வெட்டப்பட்ட வாய்க்கால்களுக்கு புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே தண்ணீர் வரும் என்ற நம்பிக்கையில் இருக்கிறார்கள். அந்தவகையிலே 4 மண்டலங் களாகப் பிரிக்காமலேயே வருகிற ஆண்டுக்கு 42 டி.எம்.சி. தண்ணீர் பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டத்திலே கொடுப்பதாக சொல்கிறார்கள். ஒரு டி.எம்.சி. தண்ணீரில் 10 ஆயிரம் ஏக்கர் பாசனம் செய்தால் 3 மண்டலத்திலே அந்த 4 லட்சத்து 20 ஆயிரம் ஏக்கருக்கு பாசன வசதி அளிக்க முடியும். புஞ்சைத் திட்டத்தின் அடிப்படையில், ஆகவே, இந்தத் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஒரு புதிய யோசனையை இன்றைக்கு தந்திருக்கிறார்கள். ஏற்கனவே அவர் இதுபற்றி சட்டமன்றத்திலே பேசுகிறபோது 4 மண்டலங்கள் வேண்டு மென்று கேட்டார்கள். இப்போது 3 மண்டலங்களாக வைத்துக் கொண்டு அந்தப் பாசனப் பகுதிகளை பிரித்துக் கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த 4 மண்டலங்களைப் பொறுத்தவரை நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இருக்கின்ற நீர் அளவை வைத்துக்கொண்டு எப்படி இந்தப் பகுதிகளுக்கு பாசனப் பரப்பினை மேம்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில்தான் இந்தக் கோப்பு இன்றைக்கு அரசின் பரிசிலனையில் இருந்து கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற நேரத்தில் மற்ற விவசாயிகளுடைய நலனையும் கவனிக்க வேண்டியிருக்கிற காரணத்தினால், அந்த விவசாயிகளுக் குள்ளே பிரச்சினை வந்துவிடக்கூடாது என்பதற்காக முடிவு எடுக்கிற நேரத்திலே அரசு எப்படியாவது நல்ல முடிவை



1992 மார்ச் 26]

எடுக்கும் என்கிற காரணத்தினால் அதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே, எல்லா யோசனைகளையும் மனதிலே வைத்துக்கொண்டு இந்தப் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வை காண்பதற்கு அரசு நிச்சயமாக முடிவெடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. பி. சந்திர சேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் நீர்ப்பாசனத்திற்காக 4-வது மண்டலம் கொண்டு வருகின்ற திட்டத்தை இங்கே அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அப்படி 4-வது மண் டலம் கொண்டு வருகிற நேரத்திலே புதிதாக நிலத்தை ஆயக் கட்டிலே சேர்க்கின்ற எண்ணம் அரசுக்கு உள்ளதா? புதிய வாய்க்கால்கள் வெட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே வெட்டப்பட்ட வாய்க்கால்களுக்கு இந்தத் தண்ணீர் விடுவதுபற்றி நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். ஏற்கனவே வெட்டப்பட்ட வாய்க்கால் களுக்கு, ஏறத்தாழ 1 லட்சத்து 75 ஆயிரம் ஏக்கர்களுக்கு தண்ணீர் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, புதிதாக வாய்க்கால்கள் வெட்டுவதுபற்றி எந்த பரிசீலனையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 367. திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

367—

மின்சாரத் தடை பற்றி தெரிவிக்க தொலைபேசி வசதி

*4557—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) சென்னையில் மின்சாரத் தடை பற்றி தகவல் தருவதற்கு வசதியாக அவ்வலுவலகங்களுக்கு பல தொலைபேசி நீட்சிகள் ( extension ) வழங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

[1992 மார்ச் 26

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சென்னையில் மின்சாரத் தடை பற்றி தகவல் தருவதற்கு தனித் தனி தொலைபேசி ...ட்சிகள் ஏற் கெனவே வழங்கப்பட்டுள்ளன, சென்னையில் மின்சாரத் தடை பற்றி தகவல் தருவதற்கு வசதியாக 44 மின்சார தடை நீட்சி மையங்கள் தனித் தனி தொலைபேசி வசதியுடன் இயங்கு கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைப் பொறுத்தவரையில் மின் தடங்கல் ஏற்படுகின்ற நேரத்தில் அதைப்பற்றித் தெரிவிக்கவேண்டு மென்றால், சென்னை அண்ணா சாலையில் உள்ள தலைமை நிலையத்தில் சி.பி.டி. என்ற பிரிவும், ஒவ்வொரு ஏரியா அலு வலகத்திலும் ஒரு FOC பிரிவும் உள்ளன, ஆனால் மாலை நேரங்களில் சென்னை நகரத்தில் மின் தடங்கல் ஏற்படுவதால் அந்த ஒவ்வொரு FOC பிரிவையும் இரண்டு பிரிவாகப் பிரித்து கூடுதலாக ஆட்களை நியமித்து தொலைபேசியை வழங்கி இணைப்பை அரசு தருமா என்று அறிய விரும்புகிறேன்,

முற்பகல் 10–25]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சென்னையைப் பொறுத்தமட்டில் 3 பகிர்மான வட்டங்களாகப் பிரித்து, தென் சென்னையிலே, 17 தனி தொலைபேசிகளும், வட சென்னையிலே 11 தனி தொலைபேசிகளும், மத்திய சென்னையிலே 16 தனி தொலை பேசிகளும் உள்ளன. இதுதவிர 44 மின்சார தடை நீக்கி மையங்கள், ப்யூஸ் ஆஃப் கால் சென்டர்ஸ் என்று சொல்லப் படுகிற தனித் தனி தொலைபேசி வசதிகள் இருக்கக்கூடிய நிலையங்கள் இருக்கின்றன, இது தவிர, வி.எச்.எஃப். என்று சொல்லப்பகிற ஒயர்லஸ் கருவிகள் பொறுத்தப்பட்ட அலுவலகம் 832295 என்ற தொலைபேசி எண்ணுடன் செயல் படுகிறது. வி.எச்.எஃப். ஒயர்லஸ் வசதியுடன் இணைக்கப்பட்ட ஒரு நிலையம் இயங்கிக் கொண்டிருக்கிறது. என்னுடைய வாகனத்தில்கூட அந்த ஒயர்லஸ் பொருத்தப்பட்டு என்னுடைய கவனத்திற்கு ஒயர்லஸ்மூலம் வரும் செய்திகளை நானே கேட்டு, எந்தப் பகுதியில் மின்தடை ஏற்பட்டிருக்கிறதோ, அங்கே நடவடிக்கை எடுக்க உடனுக்குடன் உத்தரவுகள் பிறப்பிக்கப் படுகின்றன. இன்றைக்கு ஒப்பற்ற தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய காலத்திலேதான் மின் தடையை நீக்க புதிய நடைமுறைகளை எல்லாம் கொண்டுவந்து, நடவடிக்கை எடுக்கப்பட்டு, உடனுக்குடன் மின் தடைகள் நீக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள் கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



1992 மார்ச் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 368. திரு. சி. தாமோதரன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்

368 — நெல்லிக்குப்பம் பேருந்து நிலையம்.

* 4225—திரு. சி. தாமோதரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) நெல்லிக்குப்பம்நகரத்தில் பேருந்து நிலையம் அமைக் கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): நகராட்சி அலுவலக வளாகத்தில் மாநில நகர்ப்புற ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பேருந்து நிலையம் அமைக்க வடிவமைப்பு, வரை படங்கள் தயாரிக்கப்படுவதற்கு நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

திரு. சி. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நகராட்சியால் சுட்டிக்காட்டப்பட் டுள்ள இடம் அதிக அளவுக்குப் பேருந்துகள் வந்துபோக வசதி யாக இராது. அதோடு அந்த இடம் நகரத்தின் மத்தியில் இல்லாமல் ஒதுங்கி உள்ள இடமாகும். எனவே நகரத்தின் மையப் பகுதிக்கு மாற்றினால் அதிக வருவாய் நகராட்சிக்கு வருவதோடு, பொதுமக்களுக்கும் வசதியாக இருக்கும். எனவே இதுபற்றி அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நகராட்சி எல்லைக்குட்பட்ட ஏதாவது இடத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேர்வு செய்து கொடுத்தால் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் நகராட்சி மிகவும் குறைந்த வருவாய் உள்ள நகராட்சி. பேருந்து நிலையத்தை அங்கே கட்டும்போது நகராட்சியின் வருமானத்தைப் பெருக்குகின்ற வகையில் கடைகள் கட்டி அமைத்தால் வருவாய் பெருகும். எனவே, நகராட்சியின்

[1992 மார்ச் 26

மையப் பகுதியாகிய காவல் நிலையத்திற்குப் பக்கத்தில் தனி யாருக்குச்சொந்தமான காலியிடத்தைக்கையகப்படுத்தி, அங்கே பேருந்து நிலையம் அமைக்க எதையும் திரும்ப முடிக்கும் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர் களின் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அரசு அது பற்றிப் பரிசீலித்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 369. திரு. இரா. நடேசன். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

369—

கூட்டுறவுச் சங்க நியமன உறுப்பினர்களின் நியமனம் ரத்து

* 452—திரு. இரா. நடேசன்:
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கூட்டுறவுச் சங்கங்களில் முறைகேடாக நியமிக்கப் பட்ட நியமன உறுப்பினர்களின் நியமனங்களை ரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). தொடக்கநிலை கூட்டுறவுச் சங்கங் களின் நிர்வாகக் குழுக்கள் 28-7-1991 அன்று தமிழ்நாடு அவசரச் சட்டம் 5/1991-ன் மூலம் ஏற்கெனவே கலைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 370—டாக்டர் ஜி. ஆர். மாலா. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.



1992 மார்ச் 26]

370—

துவாக்குடி கூட்டுறவு அச்சக நிர்வாகக் குழு

*1786—டாக்டர் ஜி. ஆர். மாலா:
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அவசரச் சட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள, அனைத்துக் கூட்டுறவு இயக்கங்களின் நிர்வாகக் குழுக்கள் கலைக்கப்பட்ட போதிலும், திருச்சி வட்டம், துவாக்குடியி லுள்ள கூட்டுறவு அச்சகத்தின் நிர்வாகக் குழு மட்டும் செயல்பட அனுமதிக்கப்பட்டிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அவசரச் சட்டம் மூலம் பிரதம கூட்டுறவு சங்கங்கள் மட்டுமே கலைக்கப்பட்டன. துவாக்குடியிலுள்ள திருச்சிராப் பள்ளி கூட்டுறவு அச்சுத் தொழிலியம் ஒரு மத்திய வகைச் சங்க மாதலால் நிர்வாகக் குழு தேர்தல் 1990 ஆம் ஆண்டு நடத்தப்பட வில்லை. துவாக்குடியிலுள்ள திருச்சிராப்பள்ளி கூட்டுறவு அச்சக தொழிலியத்தினை நடத்துவதற்கு அரசு நியமனம் செய்த நிர்வாகக் குழுவால் மேற்படி அச்சகம் தொடர்ந்து நிர்வகிக்கப் பட்டு வருகிறது.

டாக்டர் ஜி. ஆர். மாலா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தமிழ் நாட்டில் திருச்சி வட்டம், துவாக்குடியிலுள்ள கூட்டுறவு அச்சகம் அவசரச் சட்டத்தின் கீழ் கலைக்கப்படவில்லை என்ப தற்கு இது மத்திய கூட்டுறவுச் சங்கமாக உள்ளது என்றும், 1990ல் தேர்தல் நடத்தப்படவில்லை என்றும் பதில் அளித்துள் ளார்கள். அப்படி என்றால் மத்திய கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளில் நமது மாநில அரசின் பங்கு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசின் முடிவின்படி சட்டத் திருத்தம் கொண்டுவர இருக்கிறோம். அந்தச் சட்டத் திருத்தத் தில் இந்த மத்திய சங்கங்களும் சேர்த்து இணைக்கப்படும்.

அந்தச் சட்டத் திருத்தத்திற்குப் பின்னால் இந்தச் சங்கங்களுக்கும் சேர்த்து தேர்தல் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-30

டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; செய்வதைச் சொல்வோம், சொல்வதைச் செய்வோம் என்பதை உண்மையாக்கி, தேசியக் கொள்கையோடு இன்றைக்கு ஆட்சி புரியும் நமது தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றான கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள களைகளை அழித்து விரைவில் தேர்தல் நடத்தப்படும் என்ற அறிவிப்பை இன்று செயல்முறைப்படுத்தி வரும் அரசியல் மே மாதம் நடைபெறும் கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் .இச்சங்கமும் சேருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெறுகின்ற தேர்தலில் இந்தச் சங்கமும் நிச்சயமாக சேர்த்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 371 திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

371—

## டான்சி தொழிலாளர்கள் பிரச்சினை.

* 1444 திரு. ஆர். சிங்காரம் :
மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் டான்சி தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து தொழிலாளர்களுக்கு உதவ அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூரிலுள்ள டான்சி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் நிறுவனம் நஷ்டத்தில் இயங்கி வந்ததால் இந்நிறுவனத்தை மூட முடிவு செய்யப்பட்டது. எனவே அதில் பணிபுரியும் 52 தொழிலாளர்





களும் 20— 1— 1992 அன்று தன்விருப்ப ஓய்வு பெறும் திட்டத்தின்கீழ் ஓய்வு பெற விருப்பம் தெரிவித்ததின் பேரில், திருச்சி தொழிலாளர் துணை ஆணையர் முன்னிலையில் 27— 1— 1992 அன்று தொழிற் தகராறுகள் சட்டப்பிரிவு 12(3)-ன்கீழ் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அவ்வொப்பந்தத்தின் அடிப்படையில் அனைத்து தொழிலாளர்களும் தங்களுக்குச் சேர வேண்டிய பணப் பயன்களைப் பெற்றுக் கொண்டு 31— 1— 1992 அன்று பிற்பகல் முதல் பணியிலிருந்து ஓய்வு பெறுவதெனவும் ஒப்புக் கொள்ளப்பட்டு அந்த ஒப்பந்தம் அமல்படுத்தப்பட்டுவிட்டது.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் அதே நேரத்தில், அந்தத் தொழிலாளர்களுக்கு வேறு வேலைகள் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தொழிலாளர்கள் தன் விருப்பத்தைத் தெரிவித்துதான் அவர்கள் வேலையிலிருந்து ஓய்வு பெற்றிருக்கிறார்கள். எனவே அதைப்பற்றி எந்தவிதமான கேள்விக்கும இடமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பொறுத்தவரையில் அது இயங்க முடியாமல், நஷ்டத்தில் ஓடுகின்ற காரணத்தால்தான், வேறு வழியில்லாமல் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு செட்டில்மெண்ட்டுக்கு வந்திருக்கிறார்கள். வேறு வழியில்லாமல் அவர்கள் எழுதிக் கொடுத்து வந்திருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு வேறு வேலைகள் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அவர்களுக்கு உரிய வேலை வாய்ப்பு வரும்போது அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. தங்கமுத்து.

திரு. கு. தங்கமுத்து : தலைவர் அவர்களே அந்த 'டான்சி' நிறுவனத்தைச் சேர்ந்த எல்லா தொழிலாளர்களும் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் தான் அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இனிமேல் வருகின்ற வேலைகளில் ஏதாவது முன்னுரிமை கொடுத்து

[1992 மார்ச் 26

அவர்களைக் காப்பதற்கு இந்த தாயுள்ளம் கொண்ட அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு உரிய வேலைவாய்ப்புகள் வரும்போது அரசு இதுபற்றி கருணையோடு பரிசீலிக்கும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 372. திரு. வி. கே. சின்னசாமி, செல்வி கோ. மல்லிகா, திரு. ஆர். பி. பரமசிவம், திரு. ம. சின்னசாமி மற்றும் திரு. எம். தங்கவேல். மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

372—

பாமாயில் மரம் வளர்ப்பு

*5030 திரு. வி. கே. சின்னசாமி,
செல்வி கோ. மல்லிகா,
திரு. ஆர். பி. பரமசிவம்,
திரு. ம. சின்னசாமி.
திரு. எம். தங்கவேல்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பாமாயில் எண்ணெய் உற்பத்தி செய்ய பயன்படும் மரம் என்ன இனத்தைச் சார்ந்தது ?

(ஆ) அது எந்த நாட்டில் அதிகமாக உள்ளது ?

(இ) தமிழகத்தில் அம்மரத்தை வளர்க்க வேளாண் மைத்துறையிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு கு ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே,

(அ) பாமாயில் எண்ணெய் உற்பத்தி செய்யப்படும் மரம் 'பனை மரங்கள்' இனத்தைச் சார்ந்தது.



1992 மார்ச் 26]

(ஆ) இம்மரம் மலேசியா, இந்தோனேசியா மற்றும் தென் ஆப்ரிக்கா போன்ற நாடுகளில் அதிகமாக உள்ளது.

(இ) தமிழகத்தில் அம்மரத்தை வளர்க்க வேளாண்மைத் துறையிடம் ரூ. 24.89 கோடி செலவில் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனை மரம் போல் வளரும் மரம் என்றும், இதற்கு 29 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். வேளாண்மைத் துறை அதிகாரிகள் இதை வளர்ப்பதற்கான ஆய்வுகள் செய் திருக்கிறார்களா ? எப்படிப்பட்ட மண் வளத்தில் இந்த மரம் வளரும் என்பதை மாண்புமிகு அமைச்சர் தெரிவிப்பாரா ? இதை வளர்க்க தனியார் முன்வந்தால் அவர்களுக்கும் கொடுத்து, அதை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு பயிர்க் கடன் போன்றவைகள் கொடுப்பதற்கும், மரங்கள் வளர் பதற்கு சப்சிடி, லோன் போன்றவைகள் கொடுப்பதற்கும் அமைச்சர் ஏதும் திட்டம் வைத்திருக்கிறாரா ? மேலும் இது பனைமரம் போல் வளரும் என்றால், அந்த மரங்களில் ஏறு வதற்கு நாடார் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை மரமேறும் தொழிலாளர்களாகப் பயன்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா சமுதாய மக்க ளும் இப்போது மரம் ஏறுகிறார்கள். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, பனைமரத்தின் இனத்தைச் சேர்ந்ததுதான் இந்த பாமாயில் எண்ணெய் மரம் என்று குறிப் பிட்டேன். ஏற்கெனவே தமிழகத்தில் ஆடுதுறை நெல் ஆராய்ச்சி மையத்தில் இந்த மரங்கள் இருக்கின்றன. திருச்சி மாவட்டம் சிறுகமணியில் கரும்பு ஆராய்ச்சி மையத்தில் இது பயிரிடப்பட்டு வருகிறது. எனவே இதைப் பயிரிடுவதற்கு வேண்டிய நீர் வளமும் நிலவளமும் உள்ள தமிழகத்தில் பயிரிட தனியார் முன்வந்தால் அவர்கள் பயிரிடுவதற்கு அரசு ஆவன செய்யும்.

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் பாமாயில் மரம் வளர்ப்பதற்கு ஏற்ற கடற்கரை பகுதி, நமது அன்பு தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவியின் கோட்டையான புவனகிரி தொகுதியில் இருப்பதால் அம் மரங்களை அப்பகுதியில் வளர்ப் பதற்கு அரசு முன்னுரிமை கொடுக்குமா என அறிய விரும்பு கிறேன்.

[1992 மார்ச் 26

முற்பகல் 10.35

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எண்ணெய் பனை வளர்க்கும் திட்டத்தை, நான்கு திட்டங்களாக தமிழகத்திலே செயல் படுத்துவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அரசு முடிவு எடுத்திருக்கிறது. எண்ணெய் பனை வளர்க்கும் திட்டத்திற்கு மத்திய அரசின் உதவியை மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் நாடியிருக்கிறார்கள். அதன் காரணமாக மத்திய அரசிடமிருந்து வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். தமிழகத்திலே எந்தப் பகுதியிலே நீர் வளமும், நில வளமும் உள்ளதோ அந்தப் பகுதியிலே வளர்ப்பதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவருடைய கேள்வி அவருடைய புவனகிரித் தொகுதியில் வளர்க்க முன்னுரிமையைக் கொடுப்பீர்களா என்று கேட்டிருக்கிறார்கள். அதைப் பரிசீலிக்கிறீர்களா, இல்லையா என்று சொன்னால் போதும்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : பரிசீலிக்கப்படும்.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாமாயில் கிடைக்காத சமயத்தில் நம்முடைய இதய தெய்வம் அவர்கள் திறமையாக, தைரியமாக வெளி நாட்டிலிருந்து வரவழைத்து ஏழையெளிய மக்களுக்குக் கொடுத்து தீபாவளியை கொண்டாட வைத்தார்கள். அப்படிப்பட்ட ஏழையெளிய மக்கள் உபயோகிக்கின்ற இந்த பாமாயிலை கூடிய விரைவில் இந்த ஆண்டே இதற்கு வேண்டிய செயல் பாட்டை எடுத்துக்கொண்டு செயல்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' வந்தோர்க்கு நாம் அடிமை ; வந்தோர் பொருளுக்கும் சந்தையா நம் நாடு?'' என்று சிலிர்த்தெழுந்த சிங்கத் தமிழன் சிதம்பரனார் வழி வந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்திலே எண்ணெய் பனையை உற்பத்தி செய்யும் என்ற சீரிய கொள்கையில் திட்டங்களை செயல் படுத்தி வருகிறார்கள். இந்தத் திட்டங்களை விளக்குவது கடமையாகக் கருதுகிறேன். எண்ணெய் பனையை வளர்க்கின்ற திட்டத்திற்கு ரூ. 24.89 கோடியை செலவிட புரட்சித் தலைவி அவர்கள் முன் வந்திருக்கிறார்கள். முதற்கட்டமாக 250 ஹெக்டேரில் அரசு பண்ணைகளில் ரூ. 4.94 கோடி



1992 மார்ச் 26]

செலவிட இந்த அரசு முடிவு செய்திருக்கிறது. இரண்டாவது
கட்டமாக விவசாயிகள் நிலத்தில் 1,500 ஹெக்டேர்
பரப்பில் ரூ. 16.79 கோடி செலவில் எண்ணெய்
பனை சாகுபடி செய்ய திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்
கிறது. மூன்றாவது கட்டமாக ரூ. 2.79 கோடி செலவில்
இரண்டு எண்ணெய் பனை விதை பண்ணைகளை அமைக்க
அரசு ஆவன செய்திருக்கிறது. அதோடு மட்டுமல்ல,
எண்ணெய் பிழிகின்ற ஆலையை தமிழகத்திலே நிறுவுவதற்கு
இந்த அரசு திட்டம் தீட்டியிருக்கிறது. நேற்று தமிழகத்தி
னுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எண்ணெய்
பனையை உருவாக்க ரூ. 1.07 கோடியை தந்திருக்கிறார்கள்
என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.
(மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த எண்ணெய் பனை மரங்கள் மலேசியா,
இந்தோநேசியா போன்ற நாடுகளில்தான் அதிகமாக இருப்ப
தாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால்
அதற்கான சீதோஷ்ண நிலை சரியாக இருந்தால்தான் வளரும்
என்று நான் நினைக்கிறேன். அப்படியானால் அந்த நாடுகளில்
இதை எப்படி வளர்க்கிறார்கள் என்ற முறையை ஏற்கனவே
அரசு அதிகாரிகள் அந்த நாடுகளுக்குச் சென்று ஆய்வு செய்
திருக்கிறார்களா? அப்படி இல்லையென்றால் மீண்டும் அதிகாரி
களை அனுப்பியோ அல்லது அமைச்சரே நேரில் சென்றோ
அது பற்றி ஆய்வு செய்து பரிசீலிப்பாரா என்று அறிய விரும்பு
கிறேன். இல்லையென்றால் சட்டமன்ற உறுப்பினர்களை
அனுப்பியாவது அதற்கு வேண்டிய முயற்சிகளை செய்வாரா
என்பதை அறிய விரும்புகிறேன். அல்லது சத்தியமூர்த்தி
போன்றவர்கள் உள்ள குழு சென்று அறிய ஆவன செய்வாரா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தமிழகத்திலே இந்த மரங்கள் வளர்க்கப்
பட்டு இன்றைய தினம் காய்க்கக் கூடிய நிலையில் இருக்கின்றன
என்று நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர்
சின்னசாமி அவர்கள் திருச்சிக்கு வருகிற வழியில் சிறுகமணி
பகுதியிலே உள்ள கரும்பு ஆராய்ச்சி மையத்திற்கு சென்று
வந்தால் அங்கே 60 மரங்கள் இன்றைய தினம் பூத்துக்
காய்த்திருக்கிற காட்சியை அவரால் காண முடியும். மதுரை
மாவட்டத்திலும் இருக்கின்றது. தஞ்சையிலே உள்ள ஆடுதுறை
நெல் ஆராய்ச்சி மையத்திலும் இருக்கிறது. எனவே வளர்க்
கின்ற பணிகளை நன்கு தெரிந்த அதிகாரிகளை தமிழகம்
பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1992 மார்ச் 26]

திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாமாயில் மரம் முசிறி தொகுதி, பெத்தனாம் பட்டி நேரு நினைவுக் கல்லூரியில் இருக்கிறது. அங்கே 100 மரங்களை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். முசிறிக்கு அருகே முசிறி-திருச்சி நெடுஞ்சாலையில் மண் வளமும், நீர் வளமும் உள்ள காவிரி படுகையில் இந்த மரத்தை வளர்க்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.40

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்காவிலிருந்து வந்த வல்லுநர்கள் திருச்சியின் அருகிலே உள்ள காவிரியினுடைய படுகைக் கரைதனில், இந்த மரங்கள் நன்கு வளரும் என்ற கருத்தினை தெரிவித்து இருக்கிறார்கள். எனவே, அந்த மரங்கள் வளர்ப்பது பற்றி அரசினுடைய ஆய்வில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பாமாயில் எடுக்கின்ற ஃபேக்டரி வைக்க வேண்டுமென்று சொன்னால், குறைந்தபட்சம் 10 ஆயிரம் ஏக்கரிலாவது கல்டிவேஷன் செய்தால் தான் முடியும் என்று மலேசியாவிலிருந்து வந்தவர்களும், பல நிபுணர்களும் சொல்கிறார்களே, நாம் 100, 200 மரங்களை வைத்தால் சரியான முறையிலே எண்ணெய் எடுக்கமுடியுமா ? ஆகையால், குறைந்த பட்சம் 10 ஆயிரம் ஏக்கரில் உடனடியாக அவற்றைப் பயிர் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கையாகவே, 500 ஹெக்டேர் மரங்களுக்கு தகுந்த அளவில் இந்த ஆலையை நிறுவ முடியும். இந்த அளவில் இன்றைய தினம் கேரள மாநிலத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆகையினால் தமிழகத்தில் 2250 ஹெக்டேரில் தனியார் பண்ணைகள் அமைப்பதற்கும், அரசாங்கம் 250 ஹெக்டேரில் வளர்ப்பதற்கும் திட்டங்கள் தீட்டி இருக்கிறோம் என்பதைத் தெரிவித்து இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 373, திரு. செ. து. வரதராஜன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.



1992 மார்ச் 26]

## சத்துணவுத் திட்டத்திற்கு நிரந்தர டிரஸ்ட்.

*4484 திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சத்துணவு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிலம் மற்றும் தொகை அன்பளிப்பாக பொதுமக்களிடம் பெற்று அதன் மூலம் நிரந்தர டிரஸ்ட் ஏற்படுத்தும் திட்டத்தை செயல் படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஏற்கெனவே ஒரு அமைப்பு இருப்பதால் இக்கேள்விக்கு இடம் இல்லை.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்தின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பொதுமக்களும் சமூக சேவை சங்கங்களும், தொழில் அதிபர்களும், திருக்கோவில்களின் உபரி நிதி மூலமாக நிரந்தர திட்டம் ஏற்பாடு செய்தால், பாத்திரங்கள் வாங்குவதற்கும், குழந்தைகள் அமர்வதற்கு பென்ச் போன்ற பொருட்கள் வாங்குவதற்கும், கட்டடம் கட்டுவதற்கும், அவற்றை ரிப்பேர் செய்வதற்கும் உதவியாக இருக்கும். அரசுக்கு செலவும் குறையும்; அந்த சத்துணவுக் கூடங்களும் மிகச் சிறப்பாக நடைபெறும். எனவே இதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நன்கொடையாளர்கள், தொண்டுள்ளம் படைத்தவர்கள் அளிக்கின்ற நிதியை பணமாகவோ அல்லது வங்கிக் காசோலையாகவோ அனுப்பலாம். அதைப் பெறுவதற்காக இந்த சத்துணவுத் திட்டம் உருவாக்கப்பட்டபோது 'தாரா' என்கின்ற அமைப்பு ஊரக வளர்ச்சித் துறையினுடைய கட்டுப்பாட்டிலே இயங்குகின்ற ஒரு அமைப்பு இருக்கிறது. அதிலே பணத்தை நன்கொடையாகவோ, காசோலையாகவோ அனுப்பி வைத்தால், அதை 'தாரா' என்கின்ற அமைப்பிலே போட்டு அதன் மூலமாக இந்த அரசு செலவழிக்கிறது என்பதைத் தெரியப் படுத்திக்கொள்கிறேன்.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரித்திர நாயகன் புரட்சித் தலைவர் ஆரம்பித்த சத்துணவுக் கூடத்தில் பொங்கல், தீபாவ

[1992 மார்ச் 26

ஆகிய நன்நாட்களில் இனிப்பு வழங்குவதைப்போல, தங்கத் தலைவி அவர்களுடைய ஆட்சியில் புரட்சித் தலைவர் அவர்களின் பிறந்த நாளன்றும், தமிழகத்தினுடைய தங்கத் தலைவி தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பிறந்தநாளன்றும் இனிப்பு வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆரம்பித்த இந்த சத்துணவுத் திட்டத்தை மிகச் செம்மையோடும் சீரோடும், சிறப்போடும் நடத்த வேண்டுமென்று இன்றையதினம் அதற்கு அரிய அறிவுரைகளை வழங்கி வருகிற மாண்புமிகு முதல்வர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் பிறந்த நாளன்று இனிப்புகள் வழங்குவதற்கு நிச்சயமாக இந்த இலாகா பரிசீலனை செய்யும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 374 திரு. வெ. தமிழரசு. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

374—

மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சாலை வசதி.

* 4290—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கல்லுக்கட்டு—பைத்தூர், கல்லுக்கட்டு—கீரிப்பட்டி வரை சாலை வசதி ஏற்படுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லுக்கட்டிலிருந்து பைத்தூருக்கும், கீரிப்பட்டிக்கும் இதுவரை அறவே சாலை வசதி இல்லாததால் கல்லுக்கட்டு குருவம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மலைவாழ் மக்களும், அவர்களுடைய 30-க்கும் மேற்பட்ட பள்ளிக் குழந்தைகளும், பிரசவத்திற்காக கொண்டு செல்லப்படும் தாய்மார்களும்



[1992 மார்ச் 26]

2 கிலோமீட்டர் ஆற்றோடையில் மணலில்தான் இதுவரையிலும் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய நலனுக்காக, குறிப்பாக, பிரசவத்திற்காக செல்லும் தாய்மார்களுடைய நலனுக்காக நம்முடைய தாயுள்ளம் கொண்ட தங்கத் தலைவி அவர்களுடைய ஆட்சியில் மீண்டும் சாலை ஏற்படுத்த பரிசீலனை செய்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லுக்கட்டு -பைத்தூர், கல்லுக்கட்டு-கீரிப்பட்டி வரை செல்லும் சாலைகளானது,சேலம் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியப் பகுதியில் அமைந்துள்ளது. இப்பகுதி பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் திட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட ஏற்காடு மலை, கல்ராயன் மலை மற்றும் அறநூற்கு மலைப் பகுதிகளில் அமையாத காரணத்தால், இப்பகுதி பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் எடுத்துச் செய்ய இயலாது. ஆனால் ஆத்தூர் ஒன்றியத்தின் மூலமாக வேறு திட்டத்தின் மூலமாக இதைப் பரிசீலிக்கலாம்.

முற்பகல் 10,45

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தாய் உள்ளம் கொண்ட தங்கத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் ஆத்தூரில் நீண்டநாள் மக்கள் தேவையான கால்நடை டிஸ்பென்சரியை அப்-கிரேட் செய்து கொடுத்துள்ள நம்முடைய புரட்சித் தலைவி அவர்களின் பொன்னான பாதங்களில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல 13 லட்சம் ரூபாய் செலவில் பெண்களுக்காக விடுதி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காகவும் அவர்களுடைய பொன்னான பாதங்களில் நன்றி கூறி, இந்தச் சாலை உள்ளாட்சித்துறை மூலமாவது அல்லது பொதுப்பணித் துறை மூலமாவது அமைத்துக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித்துறை, பொதுப்பணித்துறை, அமைச்சர்களுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்தால் நடவடிக்கை எடுப்பார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 375, திரு. வெ. நடேசன் பால்ராஜ்—இருக்கையில் இல்லை.

வினா எண். 376, டாக்டர் எ. கருப்புசாமி : மாண்புமிகு கைத்தறித் தொழில் துறை அமைச்சர்.

]1992 மார்ச் 26

376—

## பிளாஸ்டிக் தொழிற்சாலை.

*4319 — டாக்டர் எம். கருப்புசாமி— மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

குன்னூர் தொகுதியில் உலிக்கல் என்ற இடத்தில் பிளாஸ்டிக் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் மற்றும் அரசுக்கு சொந்தமான தோட்டப் பண்ணைகளிலும், தனியார் எஸ்டேட்களிலும் தேயிலை நாற்றங்கால்களை வைத்திருக்கிறார்கள். வருடந்தோறும் கோடிக்கணக்கான தேயிலை நாற்றுகளை உற்பத்தி செய்கிறார்கள். அந்தத் தேயிலை நாற்றுகளை உற்பத்தி செய்வதற்கு மிக அதிக அளவில் பிளாஸ்டிக் பைகள் தேவைப்படுகின்றன. மேலும் மலைப் பகுதியில் வாழ்கிற மக்கள் மழையிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கு பாலிதீனால் செய்யப்பட்ட உறைகளை அணிகிறார்கள். கிட்டத்தட்ட 30,000 மக்கள் தொகையுள்ள உலிக்கல் என்ற அந்த இடத்தில் ஒரு பிளாஸ்டிக் தொழிற்சாலை அமைத்தால், அதன் தயாரிப்புகள் நாற்றங்கால்களில் தயாரிக்கப்படும் தேயிலை நாற்றுகளுக்கும், மக்களுக்கும் உதவியாக இருக்கும். ஆகவே, அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழ் நாட்டில் சிறு தொழில்களை ஊக்குவிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு சலுகைகளை அளித்துள்ள இந்த நேரத்தில், பிளாஸ்டிக் தொழிற்சாலை அமைக்க ஆர்வமுள்ளவர்கள் முன்வருவார்களானால் அரசு அவர்களை ஊக்குவிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கிட்டத்தட்ட 71 கோடி ரூபாய் செலவில் 7,500 ஏக்கரில் தேயிலை பயிரிடப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் அதேசமயத்தில், அவ்வாறு 7,500 ஏக்கரில்



1992 மார்ச் 26[

பயிரிடப்படும் தேயிலைக்கு நாற்றங்கால்கள் அமைக்கப்படும் போது அதற்கு பிளாஸ்டிக் பைகள் தேவைப்படும். எனவே, அடுத்த வருடமாவது அரசின் சார்பில் அந்த இடத்தில் ஒரு தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 373 குறித்து மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வினாவான 373-ஆம் வினாவுக்கு விடை அளிக்கிறபோது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. செ. து. வரதராஜன் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் பிறந்தநாள், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய பிறந்தநாள் ஆகிய நாட்களில் இனிப்பு வழங்கப்படுமா என்று கேட்டார்கள். அதற்கு அண்ணா பிறந்த நாள் விழா, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பிறந்த நாள் விழா, சத்துணவு திட்டத்தைக் கொண்டுவந்த சரித்திர நாயகன் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். பிறந்த நாள் விழா, ஆகிய மூன்று பிறந்த நாள் விழாக்களிலும் இனிப்பு வழங்குவதைப் பற்றி அரசு நடவடிக்கையெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

375—

## சாதி சான்றுகள் பெறுவதில் தாமதம்.

*5009 — திரு. வெ. நடேசன் பால்ராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?—

(அ) நாங்குநேரி தொகுதி, ராதாபுரம் தொகுதியில் உள்ள காட்டுநாயக்கன் சமூக சிறுவர்களுக்கு பள்ளியில் சேருவதற்குரிய சாதிச்சான்றுகள் பெறுவதில் மிகவும் காலதாமதம் ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக சாதி சான்றிதழ் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

[1992 மார்ச் 26

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி—கட்டபொம்மன்
மாவட்டம், நாங்குனேரி, இராதாபுரம் மற்றும் அம்பாசமுத்திரம்
வட்டங்களில் காட்டுநாயக்கன் சாதிச்சான்று வழங்குவதில் தவிர்க்
கக்கூடிய தாமதங்கள் ஏதும் ஏற்படவில்லை. அனைத்து இனத்த
வர்க்கும் சாதிச்சான்றுகள் விரைவாக, தாமதமின்றி வழங்கப்பட்டு
வருகின்றன. மேலும் தாமதங்களை தவிர்ப்பதற்கு அனைத்து
சான்று வழங்கும் அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சியரால் அறி
வுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசும் அவ்வப்போது அனைத்து
மாவட்ட ஆட்சியருக்கும் சாதிச்சான்றுகள் தாமதமின்றி விரை
வாக வழங்குவதற்குத் தேவையான அறிவுரைகள் வழங்கி வரு
கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள்
நேரம் முடிவுற்றது.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி
இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்
பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக்குறிப்பு

### தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் தங்கள் கோரிக்கைகளை வலி யுறுத்தி உண்ணாவிரதம் இருந்து வருவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு தொடக்கப்
பள்ளி ஆசிரியர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர்
உண்ணாவிரதம் இருக்கும் நிகழ்ச்சி குறித்து அரசின் கவனத்திற்கு
கொண்டு வரவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் திரு.
ஜி. பழனிசாமி, திரு. ஆர். சிங்காரம், திரு. சி. ஞானசேகரன்
ஆகியோர் என்னுடைய கவனத்திற்குக்கொண்டுவந்திருக்கிறார்கள்
இந்தப் பிரச்சினையை அவையில் எழுப்ப அனுமதி அளிக்கிறேன்.
திரு. ஜி. பழனிசாமி .

முற்பகல் 10–50

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இன்றைக்கு தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள்
தொடர்ந்து 7 தினங்களாக உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்
கிறார்கள். 20 அம்சக் கோரிக்கைகளை அவர்கள் வைத்து, இந்த
உண்ணாவிரதத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். அதேபோன்று
தனியார் நடத்துகின்ற பள்ளிகளிலே பணியாற்றக்கூடிய ஆசிரி
யர்களும், கடந்த 3 தினங்களாக, தமிழக அரசினுடைய பள்ளி
களில் பணியாற்றக்கூடிய அந்த ஊழியர்களுக்கு வழங்கக்கூடிய
அடிப்படைச் சம்பளங்களை எங்களுக்கும் வழங்க வேண்டும் என்று
சொல்லி, அவர்களும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவே
மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், அவர்களுடைய கோரிக்
கைகளை பரிவோடு பரிசீலனை செய்து, இன்றைக்கு ஏற்பட்டு





இருக்கிற விலைவாசியையும் கணக்கிலே கொண்டு, அதே சமயத்
தில், அவர்களுக்கு அமைக்கப்பட்ட அந்த சம்பளக் கமிஷனிலே
கூட அவர்களுக்கு சரியாக நிவாரணம் கிடைக்கப்படவில்லை
என்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள்—
அமைச்சர் அவர்கள் அதை ஆராய்ந்து, அவர்களோடு பேசி,
சுமூகத்தீர்வு காணவேண்டும் என்று சொல்லி அமைச்சர் அவர்
களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி
அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, உங்களது அனுமதியோடு ஒரு
விளக்கத்தை நான் தர விரும்புகிறேன். இன்றையதினம் ஆசிரி
யர்கள், பல்வேறு சங்கங்களைச் சேர்ந்தவர்கள், கோரிக்கைகளை
வைப்பதும், அதேபோன்று உண்ணாவிரதப் போராட்டத்தில்
ஈடுபடுகின்ற நிகழ்ச்சிகளையும் பத்திரிகை வாயிலாகவும், நண்பர்
கள் மூலமாகவும், அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து
கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதுபற்றி ஒரு விளக்கத்தை
இந்த அரசின் சார்பிலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு
கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவா எம்.ஜி.ஆர். அவர்கள்,
முதலமைச்சராக இருந்தபோது, அந்த 10 ஆண்டுக்காலத்தில்,
கல்விக் கொள்கை என்ற அடிப்படையில், ஆசிரியர்களுடைய
நலன்களை அரசு பார்த்துக்கொள்ளும், குழந்தைகளுடைய நலன்
களை ஆசிரியர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும் என்கிற அடிப்
படையில், ஆசிரியர்கள் சங்கங்களுடைய பிரச்சினைகளை
முடிந்த அளவு அந்த 10 ஆண்டுக் காலத்தில் நாம் தீர்த்து வந்
திருக்கிறோம். அதற்குப் பிறகு வந்த தி.மு.க. ஆட்சியில் ஆசிரி
யர்கள் கோரிக்கை வைத்தார்களா அல்லது இதுபோன்ற
போராட்டங்களிலே ஈடுபட்டார்களா என்பதை எல்லாம் பார்க்கிற
போது, கேட்பதற்கே அச்சப்பட்டுக் கொண்டிருந்த நிலைமை
யைத்தான், அந்த 2 ஆண்டுக் காலத்தில் நாம் பார்த்து இருக்
கிறோம். குறிப்பாக ஒரு பிரச்சினையை நான் இந்த மாமன்றத்
திற்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பல்கலைக்கழக
மானியக் குழு, கல்லூரி ஆசிரியர்களுக்கு சம்பளத்தை உயர்த்தித்
தந்தது. அதை ஏற்றுக்கொண்ட அன்றைய தி.மு.க. அரசு அந்
தச் சம்பளத்தை ஆசிரியர்களுக்கு நேரடியாகத் தரவில்லை. அது
மட்டுமல்ல, அப்படி உயர்த்தித் தந்த அந்தச் சம்பளத்தில் பெரும்
பகுதி மத்திய அரசே தந்தது. மத்திய அரசு தந்த அந்தப்
பணத்தை ஆசிரியர்களுக்குத் தராமல், வேறு வகையான செலவை
அவர்கள் செய்துவிட்டார்கள். ஆனால் சம்பளம் வழங்கிய
தாக ஆசிரியர்களிடத்திலே கையெழுத்தை வாங்கிக் கொண்
டார்கள். ஆசிரியர்களும், சம்பளம் வாங்காமலே வருமான வரி
கட்ட வேண்டிய ஒரு அவல நிலைமையை அன்றைக்கு நாம் பார்த்
தோம். அப்படிப்பட்ட நிலைமையிலேகூட, ஆசிரியர்கள்

அதைப்பற்றி, எதிர்த்து பேசுவதற்குக்கூட அச்சப்பட்டுக் கொண்டோ அல்லது கேட்பதிலே பிரயோசனம் இல்லை என்றோ நினைத்துக்கொண்டு இருந்தார்கள். ஆனால், இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, மறுபடியும் நூற்றுக்கணக்கான கோரிக்கைகளை எங்கள் முன்னாலே வைத்திருக்கிறார்கள். அவைகள் எல்லாம் பரிவோடு பரிசீலிக்கப்பட்டு வருகின்றன, ஆசிரியர்கள் போராடினாலும். போராடாவிட்டாலும். அவர்களுடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக ஒரு கட்டுப்பாடு எங்களுக்கு இருக்கிறது. இன்றைக்கு இருக்கிற நிதிநிலை பற்றாக்குறை காரணமாக, நிதி சம்பந்தமான கோரிக்கைகளை நாங்கள் இந்த நேரத்திலே நிறைவேற்ற முடியாத நிலையில் இருக்கிறோம், நிதி சம்பந்தப்படாத பிரச்சினைகளைப் பரிவோடு பரிசீலித்து. தக்க நடவடிக்கை எடுப்பதற்கு தயாராக இந்த அரசு இருக்கிறது என்பதைத் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆசிரியர்கள்பால், மிகுந்த அனுதாபத்தோடு செயல்படுகிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன் (மேசையைத்தட்டும் ஒலி),

## 3, விதி 110இன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை,

## தமிழகத்தில் மின்வெட்டு நீக்கப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 110இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவைக்கு ஓர் அறிவிப்பை வெளியிட அனுமதி கோரியுள்ளார்கள், அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்,

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் ஈடில்லா தொழில் வளர்ச்சிக்கும், தொழில் பெருக்கத்திற்கும் மின்சாரம் இன்றியமையாதது என்பதை நன்கு உணர்ந்த இந்த அரசு, பொறுப்பேற்ற நாள் முதல், மின் உற்பத்தியை அதிகரிப்பதில் முன்னுரிமை கொடுத்து, நடவடிக்கைகளை மேற்கொண்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். கடுமையான சூழ்நிலையின் இடையே இந்த அரசு பொறுப்பேற்றபோது, உயர் அழுத்த தொழிற்சாலைகளின் மின் உபயோகத்தில் 25 விழுக்காடு மின்வெட்டும், மின் சுமையில், அதாவது மேக்சிமம் டிமாண்டில் 30 விழுக்காடு மின்வெட்டும், அமுலில் இருந்து வந்தது, இதனால், தொழிற்சாலைகளின் உற்பத்தித்திறன் வெகுவாக பாதிக்கப்பட்டதோடு, உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விலையும் கணிசமாக அதிகரித்தது,





மின் ஆக்கிகள். அதாவது ஜெனரேட்டர்ஸ் மிக அதிக அளவில் உபயோகப்படுத்தப்பட்டதால், டீசல் நுகர்வும். அதா வது டீசல் கன்சம்சனும் அதிகரித்து, பல பிரச்சினைகளுக்கு வழி வகுத்தது, இயற்கை ஒரு புறம் உதவாத நிலையில், மற்றொரு புறம் அனல் மின் நிலையங்களை இயக்குவதற்குத் தேவையான நிலக்கரி கிடைக்காது ஓரிரு நாட்களுக்கு மட்டுமே நிலக்கரி கையிருப்பு உள்ள அவல நிலை இருந்தது,

மக்கள் நலனில் தீவிர ஆர்வம் கொண்ட இந்த அரசு எடுத்துக்கொண்ட ஆக்கபூர்வமான நடவடிக்கைகளின் காரணமாக, இந்நிலை தற்போது முற்றிலும் மாற்றப்பட்டு ஒரு மாதத்திற்குத் தேவையான நிலக்கரி நம் கைவசம் தாராளமாக உள்ளது,

முற்பகல் 10—55

எண்ணூர், தூத்துக்குடி மற்றும் மேட்டூர் அனல் மின் நிலையங்கள் இந்த அரசு எடுத்துக்கொண்ட துரித நடவடிக்கைகளின் காரணமாக தற்போது நல்லமுறையில் இயக்கப்பட்டு தங்களுடைய முழுமையான உற்பத்தித் திறனை எட்டியுள்ளன, புனல் மின் சக்தி நிலையங்களும் சிறந்த முறையில் தங்கள் முழு உற்பத்தித் திறன் அளவுக்கு மின் உற்பத்தி செய்யத் தேவையான நீரையும் இயற்கை நமக்கு ஒரு வரப்பிரசாதமாக இந்த ஆண்டு அளித்துள்ளது, நாங்கள் எடுத்துக்கொண்ட சீரிய முயற்சிகளின் பலனாக சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு மின் உற்பத்தி சுமார் 10 விழுக்காடு உயர்ந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி),

மின் உற்பத்தியில் நாங்கள் எடுத்துக்கொண்ட ஆக்க பூர்வமான நடவடிக்கைகளின் காரணமாக மின் வினியோகத்தில் தற்போது அமலில் உள்ள மின் சுமையில் 10 விழுக்காடு மின் வெட்டையும் பவர் கட்டையும் இன்று முதல் முழுமையாக நீக்க ஆணையிட்டுள்ளேன், (மேசையைத் தட்டும் ஒலி), தமிழகத்தின் சரித்திரத்தில் இது ஒரு மாபெரும் திருப்புமுனையாகும் (மேசையைத் தட்டும் ஒலி), கோடை காலத்தில் மின் வெட்டு அதிகரிக்கப்படும் என்ற அறிவிப்புகளை எதிர்பார்த்த தமிழக மக்களுக்கு மின் வெட்டே இல்லை என்ற இந்தச் செய்தி தேனாக இனிக்கும் என நான் நம்புகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி),

## 4, கவன ஈர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து கவன ஈர்ப்பு திரு. சி. ஞானசேகரன் இருக்கையில் இல்லை.

## 5. அறிக்கை அளித்தல்.

### சட்ட விதிகள் ஆய்வுக்குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் மற்றும் தலைவர், சட்ட விதிகள் ஆய்வுக் குழு.

பேராசிரியர் க. பொன்னுசாமி, (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1991–92 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் நான்காவது மற்றும் ஐந்தாவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. அறிவிப்புகள்.

### (அ) முன்பண மானியக் கோரிக்கைகள். 1992–93—குறித்து (ஆ.செ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு, 1992–93 ஆம் ஆண்டில் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.

In pursuance of Clause 2 of Article 206 read with clause 3 of Article 203 of the Constitution of India, I, Bishma Naraian Singh, Governor of Tamil Nadu hereby recommend to the Tamil Nadu Legislative Assembly to make grants in advance for the demands for the financial year, 1992–93.

## 7. முன்பண மானியக் கோரிக்கைகள், 1992–93, வாக்கெடுப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992–93 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு, மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 24-3-1992 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் இரண்டாம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகையை, 1992–93 ஆம் ஆண்டிற்கான உடனடி செலவிற்காக மொத்தமாக ரூபாய் 2,487 கோடியே 19 ஆயிரத்திற்கு மேற்படாத தொகை அரசுக்கு முன்பணமாக வழங்கப்பெற வேண்டுமென்ற தீர்மானத்தை நான் மொழிகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க. (ஆம்).

மறுப்போர் இல்லை என்க. (இல்லை.).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி).

### நிறைவேற்றப்பெற்ற 1992–93 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்.

### A. வருவாய்க் கணக்கில் செலவு.

### 1992–93 ஆம் ஆண்டு உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்.

| | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | நிலவரித் துறை .. .. .. .. | 2,47,83 |
| 2. | மாநில ஆயத் தீர்வை துறை .. .. | 1,69,63 |
| 3. | மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிருவாகம் .. .. .. .. | 2,48,27 |
| 4. | பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிருவாகம் .. | 13,14,22 |
| 5. | முத்திரைத் தாள்கள்—நிருவாகம் .. | 80,41 |
| 6. | பத்திரப்பதிவு .. .. .. | 5,75,11 |
| 7. | மாநிலச் சட்டமன்றம் .. .. .. | 1,08,28 |
| 8. | தேர்தல்கள் .. .. .. .. | 83,50 |
| 9. | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். | 17,29,70 |

[1992 மார்ச் 26

| கோரிக்கை. (1) | (ரூபாய் ஆயிரத்தில்.) (2) |
|---|---|
| வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி. | |
| 10. பால் வழங்கு திட்டங்கள் .. .. | 1,72,11 |
| 11. மாவட்ட நிருவாகம் .. .. .. | 55,02,77 |
| 12. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிருவாகம் .. . .. .. | 2,98,46 |
| 13. நீதி நிருவாகம் .. .. .. | 13,60,61 |
| 14. சிறைச்சாலைகள் .. .. .. | 7,25,95 |
| 15. காவல் துறை .. .. .. .. | 90,79,58 |
| 16. தீயணைப்புப் பணிகள் .. .. | 7,43,55 |
| 17. கல்வி .. .. .. .. | 5,05,92,62 |
| 18. மருத்துவம் .. .. .. .. | 95,17,55 |
| 19. பொதுச் சுகாதாரம் .. .. .. | 61,23,33 |
| 20. வேளாண்மை .. .. .. | 2,07,00,82 |
| 21. மீனளம் .. .. .. .. | 4,99,29 |
| 22. கால்நடை வளர்ப்பு .. .. .. | 24,15,40 |
| 23. கூட்டுறவு .. .. .. .. | 29,84,42 |
| 24. தொழில்கள் .. .. .. .. | 5,31,77 |
| *25. சின்கோனா .. .. .. .. | .. |
| 26. கைத்தறியும் துணித்தொழிலும் .. | 20,27,59 |
| 27. கதர் கிராமத் தொழில்கள் .. .. | 2,52,31 |
| 28. சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் .. | 1,26,97,51 |

*வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதியொதுக்கம் ஏதும் காரப்படவில்லை.



1992 மார்ச் 26]

| கோரிக்கை— (1) | (ரூபாய் ஆயிரத்தில்.) (2) |
|---|---|
| A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி. | |
| 29. தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் .. .. .. .. | 16,87,42 |
| 30. சமூக நலன் .. .. .. .. | 1,34,58,90 |
| 31. பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் .. .. .. .. | 38,00,85 |
| 32 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சீர் மரபினர் முதலியோர் நலன் | 12,31,20 |
| 33 வீட்டு வசதி | 7,03,85 |
| 34 நகர்ப்பகுதி வளர்ச்சி | 68,40,48 |
| 35. நுகர்பொருள் வழங்கல் .. .. | 1,72,48,83 |
| 36. பாசனம் .. .. .. .. | 45,04,98 |
| 37. பொதுப் பணிகள் —கட்டிடங்கள் .. | 2,27,99 |
| 38. பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடமும் .. .. | 16,83,81 |
| 39. சாலைகளும், பாலங்களும் .. .. | 68,48,47 |
| 40. சாலைப் போக்குவரத்துப் பணிகளும். கப்பல் போக்குவரத்தும் .. .. | 3,67,90 |
| 41. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு .. .. .. .. | 13,29,10 |
| 42. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் .. .. .. | 1.56.79.17 |
| 43. பல்வகை .. .. .. .. | 60,41,33 |

[1992 மார்ச் 26

| கோரிக்கை.— (1) | (ரூபாய் ஆயிரத்தில்.) (2) |
|---|---|
| A. வருவாய்க்கணக்கில் செலவு—தொடர்ச்சி. | |
| 44. எழுதுபொருள்—அச்சுத் துறை .. | 9,78,50 |
| 45. காட்டுவளத் துறை .. .. .. | 12,11,91 |
| 46. இழப்பீடுகளும். ஒதுக்கீடுகளும் .. | 16,18,46 |
| 47. செய்தி—திரைப்படத் தொழில் நுட்ப வியல் .. .. .. .. | 2,03,95 |
| 48. ஊரகத் தொழில்கள் .. .. .. | 13,05,85 |
| 49. குடிநீர் வழங்கல் .. .. .. | 57,02,22 |
| 50. நகராட்சி நிருவாகம் .. .. | 23,03,06 |
| 51. சுற்றுலா .. .. .. .. | 32,74 |
| 52. தமிழ் வளர்ச்சி பண்பாடு .. .. | 1,85,90 |
| மொத்தம்— A, வருவாய்க் கணக்கில் செலவு, | 22.60.79.41 |
| B, வருவாய்க்கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு— | |
| 53. வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. | 3,36,38 |
| 54. தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு .. .. .. .. | 6,22,88 |
| 55. பாசனம் குறித்த மூலதனச் செலவு .. | 33,23,97 |
| 56. பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு .. .. .. | 16,79,39 |



992 மார்ச் 26]

| கோரிக்கை, (1) | (ரூபாய் ஆயிரத்தில்,) (2) |
|---|---|
| 3, வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு—தொடர்ச்சி, | |
| 57. சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு .. .. .. | 17,91,04 |
| 58. சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு.. .. .. .. | 18,11 |
| 59. காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு, | 12,92,23 |
| 60. ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு .. .. .. .. | 13,15 |
| 61. பல்வகை மூலதனச் செலவு .. .. | 8,33,21 |
| மொத்தம்—B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு .. .. ... ... | 99,10,36 |
| C. கடன்கள்—முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும் .. .. | |
| 62. மாநில அரசு வழங்குர் கடன்களும் முன் பணங்களும் ... .. .. .. | 1,27,10,42 |
| பெரு மொத்தம் .. | 24.87.00.19 |

(ஆ) நிதி ஒதுக்க (முன்னனி மானிய வாக்களிப்பு) சட்ட முன் வடிவு, 1992 (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னனி மானிய வாக்களிப்பு) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

8. சட்ட முன்வடிவுகள்

(அறிமுகம் செய்தல்)

(அ) நிதி ஒதுக்க (முன்னனி மானிய வாக்களிப்பு (சட்ட முன் வடிவு 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னனி மானிய வாக்களிப்பு) சட்ட முன் வடிவு, மாண்புமிகு நிதியமைச்சர்.

முற்பகல் 11-00

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னனி மானிய வாக்களிப்பு) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்,

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.



(இ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1991-92 (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1991-92 ஆம் ஆண்டின் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :

'In pursuance of clause (2) of Article 2 , read with Clause (3) of article 203 of the Constitution of India, I, Bhishma Narain Singh, Governor of Tamilnadu, hereby recommend to the Tamilnadu Legislative Assembly to make further grants to the demands for the year 1991—92.

9. இறுதி துணை நிதிநிலை அறிக்கை 1991-92, விவாதமும் வாக்கெடுப்பும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1991-92 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான மானிய கோரிக்கைகள் அடங்கிய 24-3-1992 ஆம் தேதியிடப்பட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள துணை மானிய கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1991-92 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள்; வெட்டுத் தீர்மானம் எண் 2. திரு. மா. சுந்தரதாஸ்.

Thiru M. Sundaradoss Sir to discuss the need to post administrative officers of the concerned Districts in the same District as far as possible I move—

that the allotment of Rs. 1000—
under demand No. 1 Land Revenue Department be reduced by Re. 1.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 4. திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வணிக வரித்துறைக் கட்டிடங்களுக்கு பராமரிப்பதற்கும் செப்பனிடுவதற்கும் ஆகும் செலவுகளைக் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும் நிர்வாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.50,89,000-இல் ரூ.1 குறைக்க வேண்டும்"

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 8. திரு சோ. இராசாராமன்.

திரு சோ. இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தேர்தலின் போது அரசு வாகனங்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டதைக் குறித்து விவாதிக்கவும் இத்தவறுகள் நடைபெறாது இருக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்தும்' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,43,09,000–இல் ரூ. 1 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 22. திரு. வி. கே. லட்சுமணன்.

திரு. வி. கே. லட்சுமணன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வி குறித்த மாநிலக் குழு என்ற அமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண். மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 94,44,95,000 இல் ரூ. 1 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண். 42 திருமதி ரமணி நல்லதம்பி,

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் தொகுதியில் ஆதிதிராவிடர்களின் வீடுகள் (அரசு கட்டித் தந்தவை) அனைத்தும் தளம்



இல்லாமலும் பூச்சுமானம் இல்லாமலும் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது குறித்து, விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"பழங்குடியினர்—ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ, 24,69,08,000-இல் ரூ, 1 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானமும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. பேரவை விதிகளின் படி இன்று இந்த விவாதமும், பதிலுரையும் ஒரு மணிக்கு முடிந்து வாக்கெடுப்பு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். இது தவிர இரண்டு சட்டமுன்வடிவுகள் நிறைவேற்றப்பட வேண்டும், எனவே, விவாதத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், திரு. மா. சுந்தரதாஸ்,

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் சார்பாக இந்தத் துணை மானிய கோரிக்கையில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன்வந்துள்ளேன். இப்போது தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு அறிக்கையை வைத்தார்கள், எலெக்ட்ரிசிட்டி, நம்முடைய நாட்டிலே கட் இல்லாமல் இயங்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இதற்காக பல கோடி ரூபாய் அந்த மானியக் கோரிக்கையிலே சப்ஸிடியாக கொடுக்கப்பட்டிருக்கிறது, சப்ஸிடி என்று சொன்னால் அது ரைட்-ஆஃப் மாதிரிதான் வருகிறது, சப்ஸிடி என்று சொன்னால் அதனுடைய மீனிங் பணம் வராது என்பதே. ஒரு இலாக்காவிற்கே இவ்வளவு பணத்தை கொடுப்பது அவ்வளவு சரியாக இருக்காது. ஆனால் இதற்குப் பதிலாக ஏறத்தாழ பெரிய விவசாயிகளுக்கெல்லாம் இனாமாக நாம் கரெண்ட் கொடுத்துக்கொண்டிருக்கிறோம், இனாமாக கொடுக்கின்ற கரெண்டை ரத்து செய்தால் ஏறத்தாழ 60 கோடி ரூபாய் அரசுக்கு இலாபம் வரும், இப்பொழுது அந்த பெரிய விவசாயிகள் மின்சாரத்தை எடுத்துக்கொண்டு அதே கனெக்ஷன்களிலே ஃபாக்டரிகளிலே உபயோகிக்கிறார்கள்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும்,

முற்பகல் 11–05

திரு. மா. சுந்தரதாஸ் : தலைவர் அவர்களே, அதே போன்று தொழிற்சாலைக்குக் கூட உபயோகிக்கிறார்கள், அதே போன்று கல்யாண மண்டபங்களிலும் உபயோகிப்பதாகச் சொல்

கிறார்கள். ஆனால், மின்சாரஇலாகா இதுஎதையும் செய்ததாகத்
தெரியவில்லை, இந்த அளவுக்கு சென்றுகொண்டிருந்தால்மின்சார
இலாக்காவுக்கு நட்டம்தான் அதிகமாக வந்தகொண்டிருக்கும்,
நாம் எந்த அளவுக்கு பணத்தை சப்ஸிடியாகக் கொடுத்தால் கூட
இந்த அளவுக்கு நட்டத்தை ஈடு செய்ய மக்களுடைய வரிப்
பணத்தை வீணாக்கக்கூடாது ; ஒரு சில கோடீஸ்வரர்களுக்காக
ஏறத்தாழ சிறிய விவசாயி 1L ஏக்கருக்குக் கீழே இருப்பவர்
களுக்கு இனாமாக மின்சாரம் கொடுத்தால் பிரச்சினை இல்லை.
ஆனால், நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம்
வைத்து இருப்பவர்களுக்கு எல்லாம் இனாமாக மின்சாரம்
கொடுத்தால் மக்கள் வரிப் பணம் தான் வீணாகும் என்பதைக்
கருத்தில் கொண்டு அத்தகைய விவசாயிகளுக்கு மின்சாரக்
கட்டணத்தைக் குறைக்கக்கூடாது என்று சொல்லிக்கொள்ள
கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அளவுக்கு நல்ல முறையில்
இயங்கிக்கொண்டிருக்கிற நம்முடைய மின்சார இலாக்காவைப்
பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, ஓவர் டிராப்ட் எடுத்ததற்காக பணம்
கட்ட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஓவர் டிராப்ட்
வருவது நமக்கு வருகின்ற டாக்ஸை ஒழுங்காக வசூல் செய்யா
மல் இருந்ததால் தான் ஓவர் டிராப்ட் எடுக்கிறோம், ரிசர்வ்
வங்கியிடமிருந்து. அதற்காகத்தான் நம்முடைய மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் முன்பு தெளிவாகச் சொன்னார்கள்.
சில ப்யூரோக்ரட்டுகள் கூட சரியான முறையில் இயங்கவில்லை
என்று, அப்படி இயங்கி இருந்தால் நிச்சயமாக இந்த டாக்ஸ்
எல்லாம் வந்து இருக்கும் என்பதை என்னுடைய கருத்தாக
நான் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, அந்த டாக்ஸை ஒழுங்
கான முறையில் பிடித்துக் கட்டியிருந்தால் இந்த ஓவர் டிராப்ட்
எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அதை இந்தத் துணை
மானியக் கோரிக்கையில் சேர்க்க வேண்டிய அவசியமும் இல்லை
என்று சொல்லிக்காட்ட விரும்புகிறேன்.

மின்சாரத் துறை இந்த அளவுக்கு செய்து கொண்டிருக்கும்
போது நாட்டில் கட் இல்லை என்று சொன்னாலும் கூட என்
னுடைய கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில்
1989 ஆம் ஆண்டுக்குப் பின்னால் எந்த வீட்டுக்கும் மின்
இணைப்புக் கொடுக்கப்படவில்லை. எப்போது கேட்டாலும்
மெட்டீரியல்ஸ் இல்லை என்று சொல்கிறார்கள். குறிப்பாகச்
சொன்னால் கோஸ்ட்டல் ஏரியாவில் மீனவப் பகுதிகளைப்
பொறுத்தவரையில் அங்கே 14, 15 வருடமாக துருப்பிடித்த
ஒயர்கள், கம்பிகள் தான் இருக்கின்றன. அதை மாற்றிக்
கொடுங்கள் என்று கேட்டால் கூட எப்போது கேட்டாலும்
எஸ்.ஈ. அவர்கள் சொல்லுகிறார்கள், எங்களிடம் மெட்டீரியல்ஸ்
இல்லை என்று. இத்தனை கோடிக்கணக்கான ரூபாயை
நாம் கொடுத்தும் கூட மெட்டீரியல்ஸ் இல்லை என்றுசொல்லி
15 ஆண்டுக் காலமாக துருப்பிடித்த கம்பிகளைக்கூட மாற்ற
முடியாத அவல நிலை இருந்து கொண்டிருக்கிறது.



அதேபோல் மின்சார இலாக்காவைப் பொறுத்தவரையில்
எப்போது பார்த்தாலும் ஒவ்வொரு நாளும் எங்கள் பகுதியில்
10, 15 தடவை மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. எந்த ஒரு
மருத்துவமனைக்கும் நிரந்தரமாக மின்சாரம் கொடுக்கப்படுவது
இல்லை. 3 பேஸ் கனெக்ஷன் கொடுத்து இருக்கின்ற இன்டஸ்ட்
ரிகளுக்குக் கூட 3 மணி நேரம், 4 மணி நேரம் மின்சாரத்தைக்
கட் செய்கிறார்கள். கேட்டால் அது சரியான முறையில் இல்லை.
மெட்டீரியல்ஸ் இல்லை. லைன்ஃபால்ட் என்று சொல்லி நடந்து
கொண்டிருக்கிறார்கள். அதற்காக தங்கள் மூலமாக நான
கேட்டுக் கொள்ளுவது எல்லாம் அதிகமான டிரான்ஸ்பார்மர்
களையும், மெட்டீரியல்களையும் கன்னியாகுமரி மாவட்டத்
திற்குக் கொடுக்க வேண்டும். அதற்குக் காரணம் என்னவென்று
சொன்னால், அங்கே பெரிய இன்டஸ்ட்ரிகள் கிடையாது. பெரிய
இன்டஸ்ட்ரிகள் வந்தால் 3 பேஸ் லைனில் எடுத்து விடுவார்கள்.
அங்கே விவசாயப் பம்பு செட்டுகளும் குறைவாகத்தான் இருக்
கின்றன. ஏறத்தாழ 5 ஆயிரம், 6 ஆயிரம் அப்ளிகேஷன் சவுத்
ஆற்காடு, செங்கற்பட்டு. வடாற்காடு மாவட்டங்களிலிருந்து
வருகிறது என்று சொன்னால் எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்
திலிருந்து 100 அப்ளிகேஷன் தான் வரும். அதுவும் ஒரு ஆண்டுக்கு
5 பேருக்குக் கூட கனெக்ஷன் கொடுக்கப்படுவது இல்லை என்ற
அவல நிலை கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்து கொண்
டிருக்கிறது. ஆகவே, எங்களுக்கு இருக்கிற முக்கியமான
பிரச்சினை வீட்டுக்குத்தான் கனெக்ஷன் கேட்கிறோமே தவிர
அங்கே இன்டஸ்ட்ரீஸ் இல்லை. விவசாயத்திற்கு அங்கே மின்
சாரம் அதிகமான செலவு இல்லை. ஆகவே தனித் திட்டமாகப்
போட்டு வீட்டுக்கு மின்சாரம் கொடுக்க அதிகமான நிதியை
எங்கள் மாவட்டத்திற்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். எங்கள் மாவட்டத்திற்கு 1989 ஆம் ஆண்டுக்குப்
பின்னால் எந்த வீட்டுக்கும் மின் இணைப்புக் கொடுக்கப்பட
வில்லை என்பது மிக மிக வேதனையான காரியமாக இருக்கிறது
என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.
கோவை மற்ற எந்த மாவட்டத்திலும் 30 நாட்களுக்குள் வீட்
டிற்கு மின்சாரம் கொடுக்கப்படுகிறது. ஆகவே எங்கள் மாவட்
டத்தில் உள்ள இந்த அவல நிலையை மாற்ற வேண்டுமென்றும்
அதிகமான மெட்டீரியல்ஸைக் கொடுக்க வேண்டும் என்றும்
கேட்டுக் கொள்கிறேன். இப்போது எஸ்.ஈ.யைக் கேட்டாலும்,
சி.ஈ யைக் கேட்டாலும் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்
களே தவிர, கொடுப்பது இல்லை. பிரையாரிட்டி
செக்டாரில் விவசாயத்திற்குக் கொடுக்கிறார்கள். அங்கே விவ
சாயம் இல்லை, பம்பு செட்டுகள் குறைவாகத்தான் இருக்கின்றன.
இன்டஸ்ட்ரீஸும் இல்லை. இவைகள் எல்லாம் இல்லாத காரணத்
தால் இதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அதிகமான மெட்டீ
ரியல்ஸைக் கொடுத்து எங்கள் மாவட்டத்தினுடைய மின்சாரத்
தினுடைய தரத்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

[திரு. மா. சுந்தரதாஸ்] [1992 மார்ச் 26

அதேபோல் அந்த மீனவப் பகுதிகளைப் பொறுத்தவரையில் அந்தப் பகுதிகளில் துருப்பிடித்த ஒயர்கள்—அவைகள் எல்லாம் காங்கிரஸ் காலத்தில் போடப்பட்டது. அதற்குப் பின்னால் மாற்றப்படவே இல்லை என்று சொல்லுகிறார்கள். அதற்காக அதிகமான ஒயர்களை சப்ளை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நஷ்டம் என்று சொன்னால் வெளிநாட்டில் இயங்குவது போல Public Participation in the Electricity Board மக்களுடைய ஷேர் வாங்கி ஏன் இதை நடத்தக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன். இதில் இந்த மின்சாரத்தில் மக்களுக்கு அதிகமான பார்ட்டிசிபேஷன் இருக்கிறது. இந்த நாட்டில் இருக்கின்ற ஒரு முக்கியமான ஒரு பப்ளிக் அண்டர்டேக்கிங் நம்முடைய தமிழ்நாட்டில் உள்ள மின்சார இலாக்கா. அது நஷ்டத்தில் இயங்குகிறபோது நம்முடைய பப்ளிக்கிலிருந்து ஷேர் வாங்கினால் அதிகமான பணம் மக்கள் கொடுக்க தயாராக இருக்கிறார்கள். ஆகவே, மின்சாரத்திற்கு சப்சிடியை கன்வர்ட் செய்வதற்குப் பதிலாக அதிகமான பணத்தை மக்களிடமிருந்து, ஷேர் ஆக வாங்கலாம் என்ற யோசனையை சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11—10

அதேபோல வெள்ளத்தைப் பொறுத்தவரையில் அதிகமான பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வெள்ளச் சேதம் என்று சொன்னால் ரோடுகளைச் சரியான முறையில் போடுவது இல்லை. வெள்ளம் வந்த உடனே, வெள்ளம் வரலாம், ஆனால் ஒரு சாலையும் இல்லை என்று தான் பல இடங்களிலிருந்து ரிப்போர்ட் வருகிறது என்று சொன்னால், Quality of the work is very poor in the Tamil Nadu அதை யாரும் மறுக்க முடியாது. உதாரணமாகச் சொன்னால் ஜே.வி.வி.டி.யில் வேலை செய்கிறார்கள் ஜெ.வி.வி.டி மூலம் வேலை செய்கிறபோது அந்த வேலை உண்மையிலேயே தரமானதாக இல்லை. அதற்குக் காரணம், ஜே.வி.வி.டி.-க்கு டெண்டர் கிடையாது. யாரோ ஒருவரிடத்திலே வேலையைக் கொடுக்கிறார்கள். வேலையைக் கொடுப்பதற்கு முன்பு சட்டமன்ற உறுப்பினர்களையோ, நாடாளுமன்ற உறுப்பினர்களையோ கேட்பதில்லை. காண்டிராக்டர்களுக்கு எந்த வேலையில் அதிக லாபம் கிடைக்குமோ அந்த வேலையை எடுத்து செய்ய வேண்டுமென்று லிஸ்ட் கொடுக்கிறார்கள். என்னுடைய மாவட்டத்திலே சர்வ சாதாரணமாக நடக்கின்ற சம்பவம் இது. இப்படிச் செய்யக் கூடாது என்று டெவலப்மெண்ட் கவுன்சில் மீட்டிங்கிலேயிருந்து கூட வெளிநடப்பு செய்து பார்த்தோம். அப்படியாவது அந்த அதிகாரிகள் திருந்துவார்கள் என்பதற்காக வெளிநடப்பு செய்தோம். அரசுக்கு எதிராக அல்ல. அதிகாரிகளுக்கு எதிராக. மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எதிராக, அங்கே இருக்கிற புராஜக்ட் ஆபீசருக்கு எதிராக, எல்லா எம்.எல்.ஏ.க்களும் வெளிநடப்பு



[1992 மார்ச் 26 [திரு. மா. சுந்தரதாஸ்]

செய்தோம். அதற்குப் பிறகாவது திருந்தினார்களா என்றால் அப்படியும் அவர்கள் இப்போதும் திருந்தவில்லை. கடந்த வாரம் கூட அவர்களிடம் சொன்னேன். நாங்கள் தோழமைக் கட்சிக்காரர்கள்; நாங்கள் அரசுக்கு எதிராகச் சொல்லமுடியாது என்றும் உங்களாலேதான் தவறுகள் நடக்கின்றன என்று சொன்னேன். நீங்கள், இந்த ஜே.வி.வி.டி. ஓர்க்கை கொடுக்கும் போதாவது எம்.எல்.ஏ.க்களையும், எம்.பி.க்களையும் கேட்டிருக்கிறீர்களா என்றால், இல்லை என்று சொன்னேன். நீங்களே தேவைப்படும்போது உங்கள் ஆட்களை வைத்து கான்ட்ராக்ட் எடுக்கிறீர்கள் என்று அவர்களிடம் சொன்னேன். அங்கே ஒரு புராஜக்ட் ஆபீசர் இருக்கிறார்.

அவரிடம், நீங்களும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகிய இருவரும் திறமையாக செயல்படவில்லை என்று சொன்னால் நாங்கள் யாரிடம் சொல்ல முடியும் என்று கேட்டேன். இதைப் போய் அமைச்சரிடம் எல்லாம் சொல்ல முடியுமா? இந்த ஒரு மாவட்டம் மட்டுமா இருக்கிறது? ஜே.வி.வி.டி. ஓர்க்கைப் பொறுத்தவரையில் குவாலிட்டியே கிடையாது. மக்களுக்கு டெண்டர் கொடுப்பதில்லை. நான் சொன்னேன், சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்ததற்குப் பின்னால், ஏப்ரலுக்குப் பின்னால், அடுத்த நிதி ஆண்டிலாவது எங்களைக் கேட்டுச் செய்யுங்கள் என்று சொன்னேன். அப்படி கேட்பார்கள் என்று எங்களுக்கு நம்பிக்கை இல்லை. ஏற்கெனவே என்னிடம் அதிகாரிகள் சொன்னார்கள். அதெல்லாம் எடுத்து முடித்துவிட்டார்கள் என்று. ஏதோ ஒரு ஓர்க் எடுக்கவேண்டுமென்று சொன்னாலுங்கூட, எடுப்பதிலேயே பிரச்சினை, ஊழல் இருக்கிறது என்று சொன்னால் எந்த அளவுக்கு இந்த வேலைகள் நடக்கும்? இதனால் ஒவ்வொரு முறையும் வெள்ளம் வரும் போது ரோடுகளைப் போடுவதற்கு நாம் அதிகமான பணம் ஒதுக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. எந்த ரோட்டை எடுத்தாலும், வெள்ளம் வந்துவிட்டால் ரோடெல்லாம் இடிந்து விடுகிறது. ஒரு வீடு இடியலாம்; ஒரு குடிசை இடியலாம், அதற்குப் பணமும் கொடுக்கலாம். ஆனால், எப்போது பார்த்தாலும் ரோடு இடிந்து விட்டது; ரோடு இடிந்து விட்டது என்று சொல்லி, வெள்ளத்திற்காக வருகின்ற பணத்தை ஏழை விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு அந்த அதிகாரிகள் தயாராக இல்லை. ஏலம் மட்டும் கொடுக்க முடியாது ரோடுகளை மட்டும் நாங்களே போட்டுக் கொண்டு இருப்போம் என்று அவர்கள் போட்டுக் கொண்டு இருக்கிறார்கள். எனக்குக் கிடைத்த தகவல்படி எல்லா இடங்களிலும் என்று சொல்ல வில்லை ஒரு சிலஇடங்களில் ஜே.வி.வி.டி.யைப் பொறுத்தவரை ரோடு போடாமலேயே பணம் எடுத்ததாக எனக்கு கன்னியாகுமரி மாவட்டத்திலேயிருந்து தகவல் வந்திருக்கிறது. ஆகவே இதையெல்லாம் போக்க வேண்டும். The quality of work must be maintained. அதிலே லோக்கலில் இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும்

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எவ்வித பொறுப்பும் கிடை
யாது. நாங்கள் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். அவர்
களுக்கும் பொறுப்பு கொடுங்கள். The responsibility
should be with the local peoples representatives also.
அப்போதுதான் அதிகாரிகளைக் கட்டுப்படுத்த முடியும். அதி
காரிகளை கட்டுப்படுத்த முடியவில்லை என்று சொன்னால்
அவர்கள் இஷ்டம்போல் எடுப்பார்கள், செய்வார்கள். அரசு 2
கோடி ரூபாயை ஜே.வி.வி.டி.-யிலே பணம் ஒதுக்கியிருக்கிறது.
அப்படி இருந்தாலும் நம்முடைய பிரச்சினைகள் முடிந்ததா
என்றால் இல்லை. ரோடு போடுகிறார்கள். ஒரு வெள்ளம்
வந்துவிட்டது என்று சொன்னால் மறுபடியும் நிச்சயமாக அந்த
ரோட்டை போடுவதற்கு பணம் கொடுக்க வேண்டியது இருக்
கிறது.

The quality of the work must be maintained. ஆகவே,
எம். எல். ஏ. எம். பி.-களுக்கு என்று ஒரு பொறுப்பைக்
கொடுத்தால்தான் இதை நல்ல முறையிலே செய்யமுடியும்.

அதே போல ஐ.ஆர்.டி.பி. லோன் கொடுக்கிறார்கள்.
ஐ.ஆர்.டி.பி. லோனைப் பொறுத்தவரையில் இப்போது பஞ்
சாயத்து பிரசிடெண்ட் சேர்மேன் இல்லாததால் அதிகாரிகளே
கொடுக்கிறார்கள். இப்போது எம்.எல்.ஏ.-க்களும் எம்.பி.-க்
களும்தான் மக்கள் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். ஆனால்
எங்கள் யாரிடமும் இது பற்றி கேட்பதில்லை. அதிலே ஒரு
" காலம் " கூட இருப்பதாகச் சொன்னார்கள். சட்டமன்ற
நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய பரிந்துரைகள் வேண்டு
மென்று கூட இருக்கிறது. ஆனால் யாரிடமும் கேட்பதில்லை.
பல மாவட்டங்களிலே இந்த நிலைதான் இருக்கிறது. பல
மாவட்டங்களிலே இருக்கிற உறுப்பினர்களைக் கேட்டேன்.
திரு. தங்கராசு அவர்கள்கூட இதைப்பற்றிச் சொன்னார்கள்.
அவர்களுடைய மாவட்டத்திலேகூட அவ்வாறு செய்வதில்லை
என்று சொன்னார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில். இது
பற்றி எங்களுக்குத் தெரியவே தெரியாது. 5 பேர்களுக்கு,
ஏழைகளுக்கு லோன் கொடுக்க வேண்டும் என்று சொன்னால்,
அங்கே இருக்கிற புராஜக்ட் ஆபீசர் சொல்கிறாராம். இவர்கள்
சொல்பவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமா என்று. இதை
யெல்லாம் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்பு
கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலே, படித்தவர்கள் எல்
லாம் இருக்கின்ற இடத்திலே, ஒரு வேளை காங்கிரஸ்காரர்கள்
அதிகமாக இருக்கிற காரணத்தினால் செய்யவில்லையா ?
அங்கே இருக்கிற அதிகாரிகள் எங்களை மதிக்க தயாராக இல்லை
இப்படிப்பட்ட பிரச்சினைகள் மக்களுக்கு இருக்கிறது என்பதை
அமைச்சர் அவர்களிடத்திலே நான் நேரடியாகச் சொன்னேன்.
அங்கே இருக்கின்ற புராஜக்ட் ஆபீசர், மாவட்ட ஆட்சித்
தலைவர் போன்றவர்கள் இவ்வாறு நடந்தால் நிர்வாகம்
எப்படி நல்ல முறையில் இருக்கும். ஐ.ஆர்.டி.பி. லோன்



கொடுத்தால், அதற்கும் கமிஷன் வாங்கினால் இந்த நாடு
எப்படி உருப்படும் என்று நான் கேட்கிறேன். நம்முடைய
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கின்றார்கள்.
ஐ.ஆர்.டி.பி. லோன் வாங்குவதற்கு புராஜக்ட் ஆபீசரையும்
பி.டி.ஓ.வையும் மக்கள் அணுகி மனு செய்யவேண்டுமென்று
சொன்னால் எந்த அளவுக்கு நம்முடைய மக்கள் முன்னுக்கு
வர முடியும் ? மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்
டுக்கொள்வது, நீங்கள் அந்த லிஸ்ட்டைப் பாருங்கள், எங்க
ளுடைய பரிந்துரைகள் யாருடைய மனுவிலாவது இருக்கிறதா
என்று பாருங்கள். யாரிடமாவது கேட்டு இருக்கிறார்களா
என்பதையும் பாருங்கள். ஒரு லெட்டர் கொடுத்துவிட்டால்கூட
அந்த புராஜக்ட் ஆபீசர் கேவலமாக, என்ன, இவர் சொன்
னால் கொடுக்க வேண்டுமா என்று கேட்கிறாராம். இந்த
அளவுக்குச் சொன்னால் எப்படி ? நாம் தோழமைக் கட்சியாக
இருப்பதால் நான் இதற்குமேல் சொல்ல முடியாது என்று சொல்
கிறேன். சந்தர்ப்பம் கிடைக்கும்போது மாண்புமிகு அமைச்சர்
அவர்களிடம் நான் நேரிலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.
அந்த அளவுக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற
கலெக்டர், புராஜக்ட் ஆபீசர் ஒழுங்காக இல்லையென்று
சொன்னால் நாங்கள் எங்கே போய் சொல்வது ?

Where are we to go, when the officials do not function properly ?
Each and everything cannot be taken to the notice of the Minister.
ஒரு மாவட்டத்தில் இருக்கிற அதிகாரிகள் நேர்மையாக இல்லை
யென்று சொன்னால் நிர்வாகம் ஒழுங்காக இருக்காது என்று
சொல்ல விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

அதேபோல், சாராயம் பற்றி சொல்ல விரும்புகிறேன்.
சாராயத்தைப் பொறுத்தவரையில் நல்ல சப்–இன்ஸ்பெக்டர்கள்
இருக்கின்ற இடங்களில் நிலைமை ஒழுங்காக, சாராயம் இல்லா
மல்தான் இருக்கிறது. சப் இன்ஸ்பெக்டர்கள், போலீஸ் அதி
காரிகள் சரியாக இல்லை என்கிற காரணத்தால்தான் சாராயம்
அதிகமாக வருகிறது. கேரள மாநிலத்திலிருந்தும், எங்களு
டைய பகுதியிலே உள்ள கொல்லங்கோடு பகுதியிலிருந்தும்
சாராயம் மெட்ராஸுக்கு வருவதாகச் சொல்கிறார்கள். கேர
ளத்திலே சாராயத்தை வடித்து இங்கு அனுப்புகிறார்கள் என்று
சென்னைக்கு வருகிறவர்கள் சொல்கிறார்கள். இதைத் தடுக்க
போலீசால் முடியாதா என்று கேட்கிறேன். நம்முடைய
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை முறைப்படி கவ
னிக்க வேண்டுமென்று சொன்னாலுங்கூட, அதை அதிகாரிகள்
தான் நல்ல முறையிலே செய்ய வேண்டும். அதிகாரிகளைத்தான்
நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போட முடி
யும். நல்ல சப்–இன்ஸ்பெக்டர்கள், இளைஞர்களாக இருக்கின்
றவர்கள் இருக்கின்ற பகுதிகளிலே நன்றாகத்தான் இருக்கிறது.

அதிகாரிகளோ, பிளையிங் ஸ்கோடோ, சப்–இன்ஸ்பெக்டர்களோ சரியாக இல்லையென்று சொன்னால், பல பகுதிகளிலே சாராயம் இருக்கத்தான் செய்யும். அதற்காக, என்னுடைய கருத்தாக என்ன சொல்கிறேன் என்றால், அரசியலுக்கு அப்பாற்பட்ட, பெண்களை அதிகமாகக் கொண்ட கமிட்டிகளைப் போட வேண்டும். ஏனென்று சொன்னால் சாராயம் குடிப்பதால், மிகவும் பாதிக்கப்படுகின்ற சமுதாயம். அந்த குடும்பத்தில் உள்ள பெண்கள்தான். ஆகவே, அவர்களைக் கொண்ட குழுக்களை அதிகமாகப் போட்டால், அந்தக் குழுவினுடைய தலைவி சொல்வதை அதிகாரிகள் நிச்சயமாக கேட்க வேண்டும் என்ற எண்ணம் வந்தால்தான் சாராயத்தை விரட்ட முடியுமேயல்லாமல் நாம் எவ்வளவு பணம் கொடுத்தாலும் சாராயத்தை நிறுத்த முடியும் என்று எனக்கு எண்ணம் இல்லை.

முற்பகல் 11–15

நம்முடைய Tamil Nadu Industrial Investment Corporation பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குப் பணம் . கொடுப்பதற்காக நம்முடைய மானியத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. ட்டிக்'கைப்பற்றி டெய்லி பேப்பரைப் பார்த்தால். ஏலம் போடுவதுதான் நடந்து கொண்டு இருக்கிறது இவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? லோனைக் கொடுக்கிறார்கள் அந்த லோனைக் கொடுத்ததற்குப் பின்னால் இந்த டி. ஐ. சி. (District Industries Centre) அல்லது டிக் நிறுவனம். இது நடக்கிறதா. அதனுடைய கஷ்டம் என்ன ? Why are these institutions not functioning properly குஜராத்திலேயும், மகாராஷ்டிரத்திலேயும் கேட்கிறார்கள் தமிழகத்திலே இருக்கின்ற அவர்களுக்கு இண்டஸ்ட்ரி என்றால் என்ன என்றே தெரியாது. டெவலப் செய்வதற்கு என்ன வழி என்று கேட்டால், அதற்கு அவர்கள் தயாராக இல்லை லோனைக் கொடுக்கிறோம். ஒரு கோடி லோன் கொடுத்துவிட்டோம் என்று சொன்னால், அவன் அந்தப் பணத்தில் கட்டியிருக்கிறானா, அந்தப் பணத்தில் இண்டஸ்ட்ரீ ஓடுகிறதா? அதனுடைய குறை என்ன என்று அதைக் கேட்பதற்கு ஒரு குழு அமைக்க வேண்டும் இல்லையென்றால் அந்த புரொடக்ஷன் சேல்ஸ் ஆகாமல் இருக்கிறது சேல்ஸ் ஆகவில்லை என்று சொன்னால் நம்முடைய அரசாங்கம் அதை விலை கொடுத்து வாங்க வேண்டும். கொடுத்தால்தான் டிக் லோன் கொடுக்கின்ற இண்டஸ்ட்ரீகள் நல்லமுறையில் நடக்கும். ஆகவே, நாம் பணத்தை அதிகமாகக் கொடுத்து, துணை மானியத்திலேயும் சரி, மானியக் கோரிக்கையிலேயும் சரி, பணத்தைக் கொடுத்தவுடன் நம்முடைய கஷ்டங்கள் தீர்ந்து விடுவதில்லை முதலமைச்சரவர்கள் மிகத் தெளிவான முறையிலே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இண்டஸ்ட்ரீயை வளர்க்க வேண்டும் என்பதில்



முனைப்புடன் கவனித்துக் கொண்டு வருகிறார்கள். ஆனால் பத்திரிகையிலே பார்த்தால் டிக் நிறுவனத்தினுடைய ஏலம் போடுகின்ற நிலையைத்தான் பார்க்க முடிகிறது. டிக் நிறுவனம் ஏலம் போடாமல் இருக்க வேண்டும் என்று சொன்னால், அந்த புரொடக்ஷனை நடத்துகின்றவர்களை அணுகி, உங்களுடைய குறை என்ன என்று கேட்டு, அதற்கு தேவையான பணத்தைக் கொடுத்து உதவ வேண்டும். அல்லாமல் அவர்களைப்போல், ஜால்ரா அடித்துவிட்டு, எல்லா அட்ஜஸ்ட்மெண்டும் நடப்பது எங்களுக்குத் தெரியும். நாகர்கோவில் டி.ஐ.சி. யிடத்திலே யாரும் போக முடியாது. அங்கே போனால் அங்கே இருக்கிற லோக்கல் ஆட்களை எடுக்கிறார்கள். இவர்களையெல்லாம் மாற்றி விடுவது நல்லது என்று கருதுகிறேன். இது நம்முடைய அமைச்சர், ஃபைனான்ஸ்-ன் கீழ் வருகிறது என்று நினைக்கிறேன். (குறுக்கீடு), சரி வராது என்றால், அந்த அமைச்சரவர்கள் இங்கே இருக்கிறார்கள். ஆனால் அங்கே லோக்கலிலே இருப்பவர்கள் வேலைக்கும் வருவதில்லை. யாராவது சொன்னால் .கோபப்பட்டு வெளியிலே அனுப்பி விடுவது ; எந்த லோனும் கொடுப்பதில்லை. இந்த லோன் கொடுத்தால் வாங்குவதற்கு சில அட்ஜஸ்ட்மெண்ட்தான் நடக்கிறதேயொழிய எந்த லோனையும் வாங்குவதில்லை, கடைசியிலே ஏலம் போடுவது. அதுகூடப் பரவாயில்லை என்று சொன்னாலும்கூட அங்கே இருக்கின்றவர்களை அந்த மாவட்டத்திலே இருப்பவர்களைப் போடுகிறார்கள். வெளி மாவட்டத்திலேயிருந்து போட்டால் அவர்களெல்லாம் பயந்தாவது வேலை செய்வார்கள். அந்த மாவட்டத்துக்காரர்களைப் போட்டால் அவர்கள்தான் அங்கே அதிகாரமாக இருக்கிறார்கள். அவர்களைக் கேட்டால், இந்த மாவட்டம் இல்லை என்றால் அடுத்த மாவட்டம் என்று சொல்கிறார்கள் கேட்கிறார்கள் ஒரு கேள்வி. எங்களுக்குத் திருநெல்வேலி மாற்றினால் -கேரளாவிலேயா இருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்த அளவிற்கு இருக்கின்ற அதிகாரிகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். டி.ஐ.சி. நிறுவனம்—அந்த அலுவலகம் ஒழுங்கான முறையில் இயங்குவதாக. அதிகாரிகள் இயங்குவதாகத் தெரியவில்லை. நாமே துணை மானியக் கோரிக்கையிலே அதிகமாகப் பணம் ஒதுக்குகிறோம் என்று சொன்னாலும்கூட. அத்தகைய நிறுவனத்தை நேரடியாகக் கண்காணித்தால்தான் நமக்குத் தொழில் வளம் வளரும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்,

வாட்டர் சப்ளை—குடிநீருக்கு அதிகப் பணத்தை ஒதுக்கி இருக்கிறோம், குடிநீரைப் பொறுத்தவரையிலும். நம்முடைய கிருஷ்ணா வாட்டர் எப்பொழுது வரும் என்று தெரியவில்லை, அதற்கான நடவடிக்கைளை முதலமைச்சரவர்களும், நம்முடைய அமைச்சரவையும் எடுத்துக்கொண்டு வருகிறது, ஆனால் 'ட்வாட்' போர்டைப் பொறுத்தவரையில் எங்கள் பகுதியிலே இந்த வருஷம் கால்வாசிகூட வேலை செய்யவில்லை, குறிப்பாகச்

சொன்னால், களியக்காவிளை கூட்டுக் குடிநீர்த் திட்டம், இரண்டே கால் கோடி ரூபாயில் 1989 ஆம் ஆண்டிலே முந்தைய ஆட்சியிலே அடிக்கல் நாட்டப்பட்டு, இதுவரை ஒரு வேலைகூட. தொடங்கப்படவில்லை, மக்கள் எப்படி நம்புவார்கள் எங்களை ? 1989–லே அடிக்கல் நாட்டப்பட்ட வேலைக்கு ஒரு காசு ஒதுக்கப் படவில்லை. வேலை துவங்கப்படவில்லை, கேட்டால் 1989 லே வேலை தொடங்குவதாகச் சொன்னீர்களே, வேலை ஏன் தொடங்கவில்லை என்று கேட்டால், சரியான பதில் வருவதில்லை. ஒரு குடம் தண்ணீர் இரண்டு ரூபாய் என்று களியக்காவிளை பகுதியிலே விற்கிறது, அதிகமான வறட்சியாக இருக்கிறது, இந்தப் பகுதியிலே வேலையைத் தொடங்கினால்கூட மக்கள் திருப்தியாக இருப்பார்கள், தண்ணீர் இல்லாமல் இல்லை, தாமிரபரணி ஆறு எங்களுடைய பகுதிகளுக்குச் சென்று கொண் டிருக்கிறது, 24 மணி நேரமும் எப்பொழுதும்—360 நாளும் தண்ணீர் கிடைக்கின்ற ஒரு நதி இருக்கிறது, அதில் இருந்துதான் தண்ணீர் எடுக்க வேண்டும், சோர்லிலே எடுக்கப் போகிறார்கள், ஆனால் வேலை தொடங்கப்படவில்லை என்று சொன்னால், நாம் ஏட்டிலே எழுதிக் கொண்டு, ஸ்கீம் இருக்கிறது என்று சொன்னால் மக்கள் நம்பத் தயாராக இல்லை. இப்பொழுது கேட்கிறார்கள் போனால் என்ன சார், சும்மாதான் சொல் கிறீர்களோ என்னமோ முன்னே கருணாநிதி தான் அடிக்கல் நாட்டுவதாகச் சொன்னார்களே, நாட்டினாரா, இல்லையா, தண்ணீர் வருகிறதா, வரவில்லையா என்று கேட்கும் நிலை இருக்கிறது. அதற்காகக் கேட்டுக்கொள்கிறேன். பணம் ஒதுக்குங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்படித் தவறாகப் பல செய்து கொண்டு வந்ததால் சங்கடம் ஏற்படுகிறது. அவர்களே என்ன செய்தார்கள் என்றால் பணமே ஒதுக்காமல் அடிக்கல் நாட்டி விடுவார்கள். பணமே ஒதுக்காமல் அடிக்கல் நாட்டிவிடும் நிலை. இதை அரசு ஏற்றுக்கொள்கிறது, கொள்கையளவில் ஏற்றுக் கொண்டது ; அடிக்கல் நாட்டி விடுகிறார்கள், நான் பார்த்திருக்கிறேன், கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டுதான் அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். அதற்கு நாம் என்ன செய்வது ? கொள்கையளவில் ஏற்றுக் கொண்டு கல்வெட்டுகள் நூற்றுக் கணக்கிலே தமிழ்நாட்டிலே போடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர்,





திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கையளவிலே ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதற்கான அடிக்கல்லும் நாட்டியிருக்கிற நிலையில் கண்டிப்பாக அரசாங்கம் அதற்கு நிதி ஒதுக்கி அதுபோன்ற திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–20

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரசிலே பணம் இல்லாதபொழுது, கொள்கையளவிலே அதற்காக 400 கோடி அல்ல, 4,000 கோடி 5,000 கோடி போட்டு விட்டால் அதற்கு யார் எங்கே போவது ? ஒன்றிரண்டு இல்லை. ஆயிரக்கணக்கில் உங்களுக்கு வேண்டு மென்றால் எல்லாவற்றையும் போட்டோ எடுத்துக்கொண்டு இங்கே நான் தருகிறேன். இந்தத் தடவை மட்டும் கூட அல்ல ; முதலில் இருந்தபொழுது பல்லாயிரக் கணக்கான ரூபாய்க் கணக்கிலே பலயிடங்களிலே கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப் பட்டது. கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று பல கல் வெட்டுகள் அதிலே அன்றைய முதலமைச்சர் கலைஞரே அதற்கு அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். கொள்கை அளவிலே யாரோ ஒரு சாதாரண அமைச்சர் போகவில்லை ; முதலமைச் சரே வந்து, அதற்கு பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து, விழா நடத்தி, கொள்கை அளவிலே இந்தத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

திரு. மா, சுந்தரதாஸ் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவருடைய முன்னாள் இனிய நண்பர். எனவே, என்னைவிட உங்களுக்குத்தான் தெரியும் அவரைப் பற்றி. அதுபற்றி நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால் நானே, அந்தக் கூட்டத்தில் இருந்தேன். கடந்த முறை நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, அந்த விழா நடந்தது. 1¾ கோடியாக இருந் ததுதான் இப்போது 2½ கோடியாக ஆகியிருக்கிறது. செயல் பாடுகள் தொடங்கவில்லை. தயவுசெய்து கொள்கை அளவில் எடுத்தால்கூட, என்னுடைய தொகுதி என்ற முறையிலாவது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பணத்தை ஒதுக்கித் தந்து செய்வீர்கள் என்று நம்புகிறேன். செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் ஒரு ரூபாய் விற்றது இரண்டு ரூபாயாக விற்கிறது என்ற காரணத்தினால் சொல்கிறேன், அவ்வளவு கஷ்டமாக இருக்கிறது என்ற காரணத்தினால் இதைச் செய்வீர்களென்று நம்புகிறேன் என்று சொல்லிக் கொண்டு, இந்த செக்ரடேரியட் சர்வீசிலே ஒரு பிரச்சினை—ஒரு ஜி.ஓ. வந்திருக்கிறது. வெள்ளைக்காரன் ஆட்சியிலே இருந்து, குரூப் 2 சர்வீஸ் மூலமாக, டைரக்டாகவே பி.ஏ. படித்தவர் களை எடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது ஒரு ஆணை போடப்பட்டிருக்கிறது. அது என்னவென்று சொன்னால், 5 ஆண்டுகாலம் மஃபசலிலே வேலை செய்கிறவர்களை 'செகர

டேரியட்'டிலே எடுக்க வேண்டுமென்று சொல்லி. டைரக்ட்
ரெக்ரூட்டிலே, அசிஸ்டண்ட் போஸ்ட் எடுப்பது, நிறுத்தப்
பட்டிருக்கிறது. இதிலே இரண்டு பாயிண்டுகளைச் சொல்லக்
கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாதிரி எடுத்தால், கிராமத்
திலிருந்து செக்ரடேரியட் சர்வீஸுக்கு வேலை செய்ய வருவதற்கு
வாய்ப்பில்லை. ஏனென்றால், கிராமத்திலே 5 ஆண்டுகள் வேலை
செய்துவிட்டு, இங்கே டவுனுக்கு வர மாட்டார்கள். சிடியிலே
இருக்கிறவர்கள்தான், மெட்ராஸ் சிடியை நாடுவார்கள். இரண்
டாவது, பி.ஏ. படித்தவர்கள் நேரடியாக வரும்போது—
நிச்சயமாக, உரிமையோடு சொல்வேன் ; 100 சதவிகிதம்
லஞ்சம் இல்லாத இலாகா, நம்முடைய செகரடேரியட்தான்.
யாரும் இதை மறுக்க முடியாது. அதை யாரும் நம்பத் தயாராக
இல்லை, ஏதோ ஒன்றிரண்டு இருக்கலாம். அதுபற்றி பிரச்சினை
இல்லை, Cent per cent I can assure
செகரடேரியட் ஸ்டாஃபுக்கு லஞ்சம் வாங்குவது என்றால் என்ன நம்முடைய
வென்றே தெரியாது. அந்த அளவுக்கு அவர்கள் வந்துவிட்டார்
கள். அவர்கள் சர்வீஸுக்கு நேரடியாக வருகிறார்கள். 'டீசன்ட்'
ஆக அவர்கள் வாழ்க்கையை ஓட்டி, டெபுடி செகரட்டரி,
ஜாயிண்ட் செகரட்டரி என்று ஆகி, ரிடையர் ஆகிப் போகிறார்
கள். ஆனால், 5 ஆண்டுக்காலம் கிராமத்திலே பணிசெய்தவர்
கள், இங்கு வந்து—செகரடேரியட்டுக்கு வரும்போது, சில
பிரச்சினைகள் வரும். செகரடேரியட் சர்வீஸ் என்பது, இப்
போதுவரை தூய்மையாக இருந்து கொண்டிருக்கிறது. அதைக்
களங்கப்படுத்தக் கூடாது. எனவே, அந்த ஜி.ஓ. தேவையில்லை.
நேரடியாக பி.ஏ. படித்தவர்களைத் தேர்ந்தெடுத்தால், எல்லா
மாவட்டங்களிலே இருக்கிற மக்களுக்கும் இங்கு 'ரெப்ரசென்
டேஷன்' இருக்கும். குறிப்பாக, இது ஒரு பிரச்சினை. இரண்
டாவது, நிர்வாகம் நல்ல முறையிலே நடக்கும். இதற்குப்
பதிலாக, 5 ஆண்டுகாலம் அநேக லோக்கலிலே வேலை செய்தவர்
களுக்கு—தப்பு, தண்டா பண்ணியவர்களுக்கெல்லாம். சிடியிலே
வந்து அவ்வாறு செய்யலாம் என்று அவர்கள் நினைக்கிறார்கள் ;
வந்தவுடனேயே அவர்கள் இந்த செகரடேரியட்டினுடைய
தூய்மையைக் கெடுக்கக் கூடாது என்பதற்காக, இந்த மாநிலத்
திலே இருக்கிற எல்லா மாவட்டங்களிலும் இருக்கிற மக்களும்
இங்கே பணியாற்ற வேண்டும் என்ற நல்ல எண்ணத்திற்காக
தயவுசெய்து நம்முடைய அவை முன்னவர் அவர்களைக் கேட்டுக்
கொள்கிறேன் ; இந்த ஜி.ஓ. வை வித்ட்ரா செய்ய வேண்டும் ;
பழையபடி. பி.ஏ. படித்தவர்களை. குரூப் 2 சர்வீசிலே எடுத்து
அவர்களே இங்கு செகரடேரியட்டிலே வர வேண்டும் ; அவர்கள்
தெளிவான முறையிலே, நல்ல முறையிலே லஞ்ச லாவண்யம்
இல்லாமல் இந்த நிர்வாகத்தை நடத்த வேண்டும் என்பதற்காகச்
சொல்கிறேன். நிச்சயமாக நம்முடைய முதலமைச்சர் அவர்
களும், அவை முன்னவர் அவர்களும், இந்த ஜி.ஓ. வை வித்ட்ரா
செய்து, பழையபடி அதை நடத்த வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.



165046

அதேபோன்று, படித்தவர்களுக்கு வேலை கிடைக்காத
காலம் இது. கேரளா அரசிலே. படித்தவர்களுக்கு 5 ஆண்டு
தளர்த்தி—35 என்று வைத்திருக்கிறோம் இங்கு. ஆனால் அவர்
கள் 40 ஆக்கியிருக்கிறார்கள். எனவே, இங்கு வேலை வாய்ப்பு
இல்லை. எனவே, 5 ஆண்டு காலம் கூட்டி, வேலைவாய்ப்புக்காக,
வயது வரம்பைத் தளர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். எல்லா கம்யூனிட்டிகளுக்கும், ஃபார்வர்டு காஸ்ட்,
ஷெடியூல்டு காஸ்ட், பேக்வார்டு காஸ்ட் ஆகிய எல்லா கம்யூ
னிட்டிகளுக்கும் 5 ஆண்டு காலம் தளர்த்தப்பட்டிருக்கிறது கேரள
மாநிலத்திலே. ஏனென்றால் வேலை வாய்ப்பு இல்லாத
காரணத்தினால், இங்கும், 15, 20 வருடங்களாக இண்டர்வியூ
கூட வருவதில்லை. பி.ஏ., எம்.ஏ., படித்தவர்களுக்கு. அதனால்
வேலை வாய்ப்பு இல்லை. ஆகவே, 5 ஆண்டு காலம் கூடுதலாக
இருந்தால், அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். தயவு
செய்து, அதைத் தளர்த்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்திலே ஸ்ட்ரைக்கிலே ஆசிரியர்கள் இருக்
கிறார்கள். எஜுகேஷன் டிபார்ட்மென்டைப் பொறுத்த
வரையில் ஒன்றிரண்டு பாயிண்டுகளைச் சொல்லி முடித்துக்
கொள்கிறேன். எஜுகேஷனைப் பொறுத்த வரையில் அதிக
மான பணத்தை நீங்கள் ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆனால்,
எங்கள் மாவட்டத்திலே இருக்கிற பிரச்சினை,
Aided Minority School இப்போதுள்ள அந்தப் பிரச்சினையிலே
ஸ்ட்ரைக்கிலே இருக்கிற ஆசிரியர்களும், மாண்புமிகு முதலமைச்
சர் அவர்களும் பேசி முடித்திருக்கிறார்கள். நான் கேட்டுக்
கொள்வது எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தமட்டில்
சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் ; கேரளாவிலும் சரி,
இங்கேயும் சரி எந்தவித 'ஃபிராடும்' கிடையாது. தேவையான
வாத்தியார்கள் இருக்கிறார்கள். நல்ல பள்ளிக்கூடங்கள் கட்டி
யிருக்கிறார்கள். அவர்கள் சம்பளம்தான் கேட்கிறார்கள்.

கேரளாவைப் பொறுத்த வரையில், 30 நாட்களுக்குள்—
ஜூன் மாதம் திறந்தவுடன்—டி.ஈ.ஓ., சி.ஈ.ஓ. வந்து, அதை
ஃபிசிகல் வெரிபிகேஷன் செய்கிறார்கள். இவ்வளவு டீச்சர்கள்
இருக்கிறார்கள் ; எவ்வளவு டீச்சர்கள் வேண்டும் என்று பார்த்துச்
சொல்கிறார்கள். ஆனால், தமிழகத்தைப் பொறுத்த
வரையில், ஏதோ ஒரு 'கிளான்ஸ்' ஆகத்தான் அதைக் கொடுக்
கிறார்கள். ஏதோ ஒரு 30 ஸ்டாப் கொடுத்தால் முடியாது ;
நம்முடைய அரசாங்க பள்ளிக் கூடங்களுக்கு கட்டிட வசதியில்லை
ஆனால், தனியார் நடத்துகிற பள்ளிக் கூடங்களுக்கெல்லாம்
நல்லக் கட்டிடம் வைத்திருக்கிறார்கள். 'லேப்' வைத்திருக்
கிறார்கள். நம்முடைய ஆசிரியர்களுக்கு ஊதியம் கொடுத்தால்
போதும். அதற்காக இதுவரையில்—ஆசிரியர்கள் போராட்
டத்திற்கு நாங்கள் ஒத்துக் கொள்வதாக, தயாராக இல்லை.
எங்களது மாவட்டத்திலே இருக்கிற ஆசிரியர்கள் போராட்டம்
முக்கியமானப் போராட்டம், நியாயமானப் போராட்டம்.



D
V 211,31'N92
N92.2-0'3

நாங்கள் 15 ஆண்டு காலம் வேலை செய்தோமே எங்களுக்கு ஊதியம் இல்லை என்று சொல்வது, நிச்சயமாக நியாயமான ஒரு கோரிக்கையாகும். ஆகையினால், தயவுசெய்து, வருகின்ற நிதியாண்டிலாவது டீச்சர்ஸ்—ஸ்டூடண்ட்ஸ் ரேஷியோ கணக்கை எடுத்துக் கொண்டு, அவர்களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்; நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எம். பெரியவீரன்.

முற்பகல் 11-25

திரு. எம். பெரியவீரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டுக்கான செலவின் முன்பணம் மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும் இங்கே இந்த மாமன்றத்தில் ஒரு அங்கத்தினராக அமரச்செய்த எங்களது புரட்சித் தலைவி முப்பெருந்தேவி புரட்சித் தலைவியினுடைய பொற்பாதங்களை பணிந்து இந்த மானியக் கோரிக்கையில் பேச முன்வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எம். பெரியவீரன். இது துணை மானியக் கோரிக்கை, முன்பணம் என்று சொன்னீர்கள். துணை மானியக் கோரிக்கை என்று சொல்லுங்கள்.

திரு. எம். பெரியவீரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கையின் மீது பேச முற்படுகிறேன். கடந்த துணை மானியக் கோரிக்கையின் மீது எனது தொகுதியான பெரியகுளம் தொகுதியில் கொடைக்கானல் பகுதியிலே பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் வீணாக எந்தவிதமான பயனும் அளிக்காமல் கிடக்கின்றன. அதை கடந்த 1966 ஆம் ஆண்டு மத்திய சர்க்கார் ஆடு வளர்ப்புப் பண்ணை என்று ஒப்படைத்துள்ளார்கள். ஆனால் இது வரைக்கும் அது எந்த பயனும் அளிக்காமல், அதிலே எந்த விதமான பயனும் இல்லாமல், நமக்கு எந்தவிதமான வருமான மும் இல்லாமல் சும்மாவே கிடக்கின்றன. அதை நம்முடைய தமிழக அரசு எடுத்து நிலமற்றவர்களுக்கு நிலமாகவோ அல்லது பாரஸ்ட் துறை மூலமாக அதிலே மரங்களை வளர்த்து நம்முடைய அரசுக்கு வருமானத்தை கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று கடந்த 1982 ஆம் ஆண்டு வராகநதி திட்டத்தின்கீழ் சோத்துப்பாறை அணை என்ற திட்டத்தைத் தொடங்கி இது வரையிலே 1984 ஆம் ஆண்டு துரிதமாக



நடைபெற்றுக் கொண்டிருந்த வேலை இப்போது 1989—90 முடிய எந்த பணிகளும் சிறப்பாக நடைபெறாமல் ரொம்ப தேக்க நிலையில் உள்ளன. அந்த பகுதியிலே உள்ள புஞ்சை நிலங்களை நஞ்சை நிலங்களாக மாற்ற வேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்களுடைய புண்ணிய காலத்தில் அதை ஏற்பாடு செய்து, அதில் காலதாமதம் இன்றும் நீடித்துக்கொண்டே இருக்கிறது. சுமார் 9 கோடி ரூபாய் செலவில் மதிப்பிட்டு இட்டு இன்று பல கோடி ரூபாய் செலவுக்கு மேலாக நீண்டுக் கொண்டிருக்கிற காலக் கட்டத்தை மாற்றி அதனை துரித மாக முடிப்பதற்கு அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல, பெரியகுளம் தொகுதியிலே புதிய பஸ் ஸ்டாண்ட் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அதிலே பேர்பாதி வேலைகள் முடிவடைந்து இன்னும் பேர்பாதி வேலைகள் முடிவடையாமல் உள்ளது. அதற்கும் உரிய தொகையை ஒதுக்கி துரிதமாக அந்த வேலைகளை செய்து முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று கொடைக்கானல் பகுதி சுற்றுலா மையமாக உள்ளதால் பல பகுதிகளிலேயிருந்து பல்லாயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து போகின்ற இடங்களில் குடிநீர் வசதி களும் தங்குமிட வசதிகளும் இல்லாமல் ரொம்ப மோசமான சூழ்நிலைகள் ஏற்பட்டுக்கொண்டு உள்ளன. அந்த பகுதி யினுடைய சுற்றுலா வளர்ச்சியை மனதிலே கொண்டு அந்த பகுதிக்கு வந்து செல்கின்ற மக்களுக்கு குடிநீர் வசதியும் அவர்களுக்குத் தேவையான வசதிகளும், அடிப்படை வசதிகளும் செய்து கொடுப்பதற்கு ஊட்டி போன்ற ஏரியாக்களிலே செய்து கொடுக்கின்ற நல்ல திட்டங்களை கொடைக்கானலுக்கும் செய்து கொடுக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று கொடைக்கானலிலே பஸ் ஸ்டாண்டிலே பஸ்கள் நின்று செல்வதற்கு இடவசதியில்லாமல் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டுள்ளனர். அங்கே நகரியத்தின் மூலமாக சுமார் ஒரு கோடி ரூபாய் திட்டத்தில் அந்த பஸ் ஸ்டாண்டை கட்டி நிறுவவேண்டும் என்று கடந்த முறை அந்த பகுதிக்கு சுற்றுப் பயணம் வந்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அன்றைக்கு ஆணை பிறப்பித்து உத்தரவிட்டார்கள். அந்த இடம் வந்து ஆர்.எம்.டிசி கட்டுப் பாட்டில் உள்ளதால் அங்கு இடம் பற்றாத காரணத்தினால் பிரச்சினையை உருவாக்கிக் கொண்டுள்ளனர். ஒன்று இதை நகரியம் மட்டுமே எடுத்துக் கொள்வதா அல்லது ஆர். எம் டி. சி. மூலமாக வைத்துக் கொள்வதா என்ற பிரச்சினை இருக் கிறது. இதிலே துரிதமாக முடிவெடுத்து அதை கொஞ்சம் விரிவாகக் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எம். பெரியவீரன்] [1992 மார்ச் 26

அதே போன்று கொடைக்கானல் ஒன்றியப் பகுதிகளிலே,
அந்த வட்டாரங்களிலே சாலைவசதிகள் இல்லாமல் இருக்கின்றது
சுதந்திரம் வந்த காலத்திலிருந்து, இதுவரை சுதந்திரம் வந்தது
தெரியாத மக்கள் அங்கே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்
என்று நான் சென்ற முறை கூட்டத்தொடரிலே பேசினேன்.

அதேபோன்று, அந்தப் பகுதியினிலே உள்ள மக்களுக்கு
பணிகள் செய்வதற்கு, வருமானங்கள் போதவில்லை என்ற
நிலை இருக்கிறது என்றாலுங்கூட, அந்த பகுதியிலே உள்ள
மக்களுக்கு வருகின்ற வருமானங்கள் இன்னும் நீட்டிக்கச் சில
வகைகளை மேற்கொள்ளலாம் என்று எடுத்துரைக்க விரும்பு
கிறேன். விஸ்கோஸ், குங்கிலியம் போன்ற மரங்கள் அங்கே
பல லட்சக்கணக்கான டன்னேஜ்கள் வரத்துகள் ஈட்டித் தரு
வதால் அந்த மரத்தை வளர்க்க சென்ற 1989 ஆம் ஆண்டு
போட்ட திட்டத்தின் கீழ் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்
கள். அந்த வருமானத்தின் அடிப்படையிலே இந்த ஆண்டுக்
கான செலவினக் கணக்குகளைக்கூட கொள்ளலாம். அந்த
கட்டைகளுக்கு ரேட்டை உயர்த்தி பல கோடி ரூபாய்களை
அதிலே ஈட்டச்செய்யலாம் எனக் கோடிட்டுக் கூறுகிறேன்.
அந்த வருமானத்தை வைத்துக்கொண்டு, அந்த மலைவாழ்
மக்களுக்கு, அந்தப் பகுதியிலே வாழ்கின்றவர்களுக்கு நல்ல
பணி செய்து, ரூரல் டெவலப்மெண்ட் ஸ்கீமிலே இந்த ஆண்டு
அந்தப் பணிகள் பூராவையும் செய்து முடிக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால், இந்தத் திட்டம்
ஏற்கெனவே நின்றுவிட்டது. இதை மிக விரைவில் முடிக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–30

அதேபோன்று எங்கள் இனத்தைச் சேர்ந்த குலாளர் குல
குயவர் மக்கள் மண்பாண்டம், பொம்மைகள் மற்றும்
செங்கல் சூளைகள், கட்டிட தொழில்கள் இவைகளை தான்
முக்கியமாகச் செய்கிறார்கள். இவர்கள் இந்தத் தொழிலை
புரிவதற்கு அரசு புறம்போக்கு குளங்கள், கண்மாய், ஏரி
குளங்களில் மண் எடுப்பதற்கு மிகவும் சிரமப்படக்கூடிய சூழ்
நிலை இருக்கிறது. காரணம் ஆங்காங்கே வளம் வாய்ந்த
வர்கள் ஆக்கிரமிப்பு என்ற முறையில் ஆக்கிரமிப்பு செய்து
கொண்டிருப்பதால் அவர்கள் அங்கே போய் மண் போன்ற
பொருள்களை எடுப்பதற்கு தடங்கலாக இருக்கிறார்கள். வரு
வாய்த் துறை அதிகாரிகளும், அந்தப் பகுதியிலுள்ள பெரிய
ஆக்கிரமிப்பாளர்களும் இவர்களை அங்கே போய் மண் எடுக்க
விடாமல் ரொம்ப சிரமப்படுத்துகிறார்கள். ஆகவே, அவர்
களுடைய வளர்ச்சிக்காக அங்கே போய் அவர்கள் மண் எடுக்க
முன்னுரிமை வழங்க வேண்டுமென்று அரசை கேட்டுக்கொள்
கிறேன்.



1992 மார்ச் 26] [திரு,எம், பெரியவீரன்]

அதேபோன்று அந்த சமூகத்தவர்களுக்கு அரசு சலுகை
களில் எந்த முன்னுரிமையும் இல்லை. அவர்களுக்கு கல்வித்
தகுதி மற்றும் வேலைவாய்ப்புகளில் சலுகைகள் இல்லை.
வேலைவாய்ப்புகளில் யாரும் இல்லாத காரணத்தால் யாரையும்
நாடி எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியாத நிலையில் இந்த
இன மக்கள் இருக்கின்ற காரணத்தால் எந்த வாய்ப்பும் இவர்
களுக்கு கிடைக்கவில்லை. இதை அரசு கவனத்தில் எடுத்து
நமது கழகத்தின் காவலர் முப்பெரும் தேவியார் ஆட்சிக் காலத்
திலே அவர்கள் இதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று பெரிய குளம் தொகுதி 100 ஆண்
டுக்கு மேலாக நகராட்சியாக இருக்கிறது. அது பெயர் பெற்ற
நகராட்சி. இத்தகைய பெயர்பெற்ற பெரியகுளம் தொகுதியில்
இருக்கிற அந்த நகராட்சி இன்றைக்கு ஒரு பஞ்சாயத்து
போன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஏன் என்றால்
அந்தப் பகுதியிலே வளர்ச்சிப் பணிகள் எதுவும் இல்லாமல்,
தார்ச்சாலைகள் இல்லாமல், பாதாளச் சாக்கடை இருந்தும்
கூட அது செயல்படாத காரணத்தினால் சாக்கடை நீர் ரோடு
வழிகளிலே போய்க்கொண்டிருக்கிற காரணத்தினால் இதை
மாண்புமிகு எனது அன்புக்குரிய அண்ணன் உள்ளாட்சித் துறை
அமைச்சர் அவர்கள் கவனத்திலே எடுத்துக் கொண்டு இந்த
நிதி ஆண்டிலே இதற்கு கொஞ்சம் நிதியை அதிகமாக ஒதுக்கி
இதை செப்பனிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதேபோன்று இன்னும் பல பிரச்சினைகள் உள்ளன.
குறிப்பாக கிராமப்புற சாலைகள் அமைத்தல் போன்ற பிரச்
சினைகள் உள்ளன. இவைகளை எல்லாம் அரசு கவனத்தில்
எடுத்துக்கொண்டு இந்த ஆண்டு கூடுதலாக நிதி ஒதுக்கி என்
பகுதி மக்களுக்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவு சொசைட்டிகள் மூலமாக ஐ.ஆர்
டி.. பி. கடன் வழங்குவதைப் பொறுத்தவரையில், சென்ற
ஆட்சியாளர்கள் அரசு அதிகாரிகளை வைத்துக் கொண்டு மக்
களிடம் போய் நீங்கள் மானிய கடனைப் பெற்று யாரும்
திருப்பிக் கொடுக்கவா போகிறீர்கள் ? மத்திய சர்க்கார்
ஏழைகளுக்கு தானே கடனாக கொடுக்கிறது. நீங்கள் திருப்பி
கட்ட வேண்டிய அவசியம் இல்லை, எங்களுக்கு ஆயிரம்
ரூபாய் கொடுத்தால் அதை நீங்கள் திருப்பிக் கட்ட வேண்டிய
அவசியம் இல்லை '' என்று கிராம அதிகாரிகளும், கிராம
சேவக்குகளும் எடுத்துரைத்ததன் காரணமாக அந்த ஆட்சி
யாளர்கள் காலத்திலே கடன் பெற்றவர்கள் மீண்டும் அதனை

திருப்பி செலுத்தாத காரணத்தினால் இன்று அந்த சொசைட்டி
கள் மூலமாக அந்த மக்கள் கடன் பெற முடியாத சூழ்நிலை
ஏற்பட்டு பெரியகுளம் தொகுதியிலுள்ள மக்கள் ரொம்ப சிர
மப்படுகிறார்கள். அந்தப் பகுதி மக்கள் அந்த ஐ.ஆர்.டி.பி.
கடன் வேண்டுமென்று பெயர்களை பதிவு செய்துவிட்டு,
அந்த கிராம நிர்வாக அதிகாரிகள் மத்தியிலே காசு துட்டு
களைக் கொடுத்துவிட்டு இன்றைக்கு என்னை ரொம்ப குறை
கூறிக்கொண்டுள்ளார்கள். இந்தப் பகுதியிலே சட்டமன்ற
உறுப்பினராக இருந்து நீங்கள் என்ன காரியம் சாதித்துவிட்
டீர்கள்? இந்த ஐ.ஆர்.டி.பி. லோனை கூட வாங்கிக் கொடுக்க
உங்களால் முடியவில்லையே என்று என்னை அவர்கள் குறை
கூறுகிறார்கள். அந்த அளவுக்கு நாங்கள் போய் அந்த சொ
சைட்டி மூலமாகவோ அல்லது பாங்க் மூலமாகவோ லோன்
கொடுப்பது பற்றி கேட்டால் உடனே அவர்கள் ஒன்றை சொல்
கிறார்கள். அதாவது கடன் வாங்கியவர்கள் யாரும் அதை
திருப்பி கட்டவில்லை. கட்டினால்தான் மீண்டும் கடன் வழங்க
முடியும் என்று எடுத்துரைக்கிறார்கள். முந்திய ஆட்சியாளர்கள்
ஆட்சியில் செய்த தவறுக்கு இந்த ஆட்சியாளர்கள் என்ன செய்ய
முடியும்? ஆகவே, இந்த லோனைப் பொறுத்தவரையில்
அமைச்சர் அவர்கள் சொசைட்டிகளுக்கு ஒரு கன்டிசன்
போட்டு இந்தக் கடனை முறைப்படி வழங்க ஆணைப் பிறப்பிக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பெரியகுளம் தொகுதியில் குடிதண்ணீர் பிரச்சி
னையைப் பொறுத்தவரையில், கடந்த 50 ஆண்டுகளுக்கு
முன்னால் இருந்த ஜனத்தொகைக்கு ஏற்றாற்போல் பெரிய
குளம் நீரை தேக்கி வைத்திருந்தார்கள். ஆனால் இப்பொழுது
ஜனத்தொகை பெரியகுளம் தொகுதியில் அதிகமாக, 1 லட்
சத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழ்கின்ற நிலைமை உள்ளதால்
அந்த மக்களுடைய நன்மை கருதி அந்த குடிநீரினை இன்னும்
கொஞ்சம் விரிவுபடுத்தி தர வேண்டுமென்று கேட்டு என்
னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : திரு. ஓ.எஸ்
அமர்நாத்.

*<u>திரு. ஓ.எஸ். அமர்நாத் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டிற்குரிய இறுதி
துணை மதிப்பீட்டில் பேச வாய்ப்பளித்தமைக்கு என்னு
டைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரை
யைத் துவங்குகிறேன்.



இதிலே சேர்க்கப்பட்டுள்ள மொத்தத் தொகையாக
ரூபாய் 2,300.60 கோடி வருவாய்க் கணக்கிலும், ரூபாய்
1308.26 கோடி மூலதன கடன் கணக்கிலும் சேர்க்கப்பட்
டுள்ளது.

(முற்பகல் 11-35)

இந்தத் துணை மதிப்பீட்டிலே ஒதுக்கப்பட்டுள்ள
தொகையிலே தமிழ்நாடு மின்சார வாரியம் செலுத்த வேண்
டிய கடன்களையும், வட்டி நிலுவைகளையும், அதற்கு அளிக்
கப்படும் உதவித் தொகையாக மாற்றும் பொருட்டு, ரூ.
17,69 கோடி ஒதுக்கி உள்ளதை நான் வரவேற்கிறேன்.
அதே நேரத்தில் கடன் நிவாரணத் திட்டத்திற்கு ஆகும் செல
வில் மாநில அரசின் பங்கினை தேசிய வேளாண்மை ஊரக
வளர்ச்சி வங்கிக்குத் திருப்பிக் கொடுப்பதற்காக துணை நிதி
நிலை அறிக்கையில் ரூ. 47.90 கோடி சேர்க்கப்பட்டுள்ளதை
நான் மனதார வரவேற்கிறேன்.

என்னுடைய மதுரை மாவட்டத்தில் மழை பொய்த்து
விட்டதால் குடிநீர் தட்டுப்பாடு கடுமையாக நிலவி வரு
கிறது. குறிப்பாக மதுரை கிழக்கு மற்றும் மதுரை நகரில்
உள்ள இதர பகுதிகளில் குடிநீர் பிரச்சினையைப் போக்கு
வதற்குரிய நல்லதொரு திட்டத்தை உருவாக்கித் தருமாறு
இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு மதுரை
நகரிலே ஒரு நாள் விட்டு ஒரு நாள் முறையாக குடிநீர் விநி
யோகம் செய்யப்படுகிறது. அப்படி குடிநீர் விநியோகம் செய்
கின்ற நேரத்திலே உயர்வான பகுதிகளிலே இருக்கிறவர்
களுக்கு குடிநீர் கிடைப்பதில்லை. தாழ்வான பகுதியில் குடி
யிருக்கிறவர்களுக்கு மட்டும்தான் தண்ணீர் கிடைக்கிறது.
மேடாக, உயர்வாக உள்ள பகுதிகளில் தண்ணீர் கிடைப்
பதில்லை. அதற்குக் காரணம் மோட்டார் பவர் மிகவும்
குறைவாக இருக்கிறது. மோட்டார் அழுத்தத் தன்மை குறை
வாக இருக்கிறது. அதனால்தான் தண்ணீர் ஏறவில்லை என்று
சொல்லுகிறார்கள். எனவே அதற்குரிய நடவடிக்கைகளை
மேற்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்
கிறேன்.

மேலும் நகர்ப் பகுதியில் குழாய் மூலம் குடிநீர் விநியோ
கம் இல்லாத பகுதிகளில் மாநகராட்சி அதிகாரிகள் லாரிகள்
மூலமாக குடிநீர் விநியோகம் செய்ய வேண்டுமென்றும், ஒவ்
வொரு வார்டுக்கும் இத்தனை லாரி தண்ணீர் கொடுக்க வேண்டு
மென்று நிர்ணயிக்கப்பட வேண்டுமென்றும், ஒவ்வொரு தெரு
விலும் குறிப்பிட்ட நேரத்தில் லாரிகள் மூலமாக முறை
யாக தண்ணீர் விநியோகம் செய்யப்பட வேண்டுமென்றும்
அரசு ஓர் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்றும் நான் மிகப்
பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை கிழக்குத் தொகுதியிலே சாலைகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. சாலைகள் குண்டும் குழியுமாக இருப்பதால் அதிகமான போக்குவரத்து வாகன விபத்துக்கள் நடக்கின்றன. ஆகையால் உடனடியாக இந்த அரசு இதில் கவனம் செலுத்தி, அதற்குரிய நடவடிக்கை எடுத்து, சாலைகளைச் சீர்படுத்தித் தரும்படியும், புதிய சாலைகளை ஏற்படுத்தித் தரும்படியும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் நடப்பு ஆண்டுக்கு நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்து, நிதி போதாததால் இன்றைக்கு துணை நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து, இதன்மூலமாக நிதி கோரப் படுகிறது. இந்த நிலையில் அரசு நிதியைப் பெறுகின்ற நல்லதொரு யோசனையாக ஒன்றைச் சொல்ல விரும்பு கிறேன். இன்றைக்கு தமிழகம் முழுவதும் மது—விஸ்கி— கடைகள் இருக்கின்றன. அவற்றிலே பார் வைக்க அனுமதி யில்லாமல், சட்டவிரோதமாக கடை உரிமையாளர்கள் பார் நடத்துகிறார்கள். காவல் துறை அதிகாரிகள் அவற்றைக் கண்காணித்து வழக்கு போடுகிறார்கள். இருந்தாலும் இதைத் தீவிரமாகக் கண்காணிக்க முடியாத நிலையில், இது அதிகமாக நடந்து வருகிறது. எனவே பார் பெர்மிட் என்று அனுமதித்து அதற்கு இவ்வளவு தொகை என்று நிர்ணயம் செய் தால் தமிழக அரசுக்கு நிதி கிடைக்கும் என்ற யோசனையைச் சொல்லி, இதை மாண்புமிகு அமைச்சரவர்களும், இந்த அரசும் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், நில மற்ற கிராமப்புற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும், நகர்ப் புற ஏழைகளுக்கும் இலவசமாக வேட்டி, சேலைகள் வழங்கு வதற்காக 41.56 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதை நிச்சயமாக வரவேற்கிறேன்.

முற்பகல் 11.40

தமிழகத்திலே புரட்சித்தலைவி அவர்களின் இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தில் இன்னும் பலருக்கு அவை வழங்கப்படவில்லை. என்ற குறையிருக்கிறது. அந்தக் குறையையும் நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்

முந்தைய ஆட்சிக் காலத்திலே, தொழில் பிரிவினருக்கு என்று ஸ்பெஷல் ஸ்கீம் ஒன்றை அறிமுகம் செய்து, தமிழ் நாடு தொழில் வளர்ச்சி முதலீட்டுக் கழகத்தின் மூலம் ஆட்டோ ரிக்ஷாக்கள், , சைக்கிள் ரிக்ஷாக்கள் போன்றவை வாங்கு வதற்கு சப்சிடி வழங்க முன்வந்து, அந்த சப்சிடியில் 10 சதவீதத்தை முன்பணமாகக் கட்டினால் போதும் என்ற திட்டத்தை அறிவித்திருந்தது. அந்தத் திட்டம் இப்போது கைவிடப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்தை மீண்டும் அறி



முகப்படுத்தி, தமிழகத்தில் உள்ள ஆட்டோ ரிக்ஷா, சைக்கிள் ரிக்ஷா ஓட்டுபவர்களுக்கும் கடன் வழங்கி உதவி செய்ய வேண்டும் என்று இந்த அரசை மிகப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை நகரை அழகு படுத்தும் திட்டத்திற்காக இந்த நிதிநிலை அறிக்கையில் எதுவும் சொல்லாமல் இருப்பது மிகவும் வருத்தத்திற்குரியது. சென்னை நகரை அழகு படுத்தும் திட்டத்திற்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மதுரை மாநகரம் மிகப் பழமையான, தொன்மையான, கோயில்கள் நிறைந்த நகரம். அந்த மதுரை நகரை அழகு படுத்த திட்டமொன்று அறிமுகப்படுத்தி, அதற்காக 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டு. வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. ஜி. பழனிசாமி.

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1991–92 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகள் மீது என்னுடைய கருத்துக்களை கூற நான் விரும்புகிறேன். இதிலே சென்ற ஆண்டைவிட அதிகமான நிதி ஒதுக்கீடுகளைச் செய்திருந்த போதிலும், அவைகள் போதுமானதாக இருக்குமா என்பதைப் பார்க்க வேண்டும். நேற்று கூட உள்ளாட்சி அமைப்புகளுக்கு 6 மாத காலத்திற்கு மேலும் தேர்தல்களைத் தள்ளி வைத்து தனி அதிகாரிகளைப் போட்டிருக்கிறார்கள். அரசாங்கம் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றினாலும், உள்ளாட்சி அமைப்புகள் மூலம்தான் சாதாரண மக்களும் பயன் அடையக்கூடிய நிலை ஏற்படும். உள்ளாட்சி அமைப்புகள்தான் அவற்றை நிறைவேற்ற முடியும். இங்கே இன்றையதினம் சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருந்த போதிலும், உள்ளாட்சி அமைப்பு களின் தேர்தல்களை உடனடியாக நடத்தினால்தான் நிர்வா கம் செம்மையாக இருக்கும்படியான வாய்ப்பு ஏற்படும்.

சென்னை மாநகராட்சியை எடுத்துக் கொண்டாலும், கோவை, மதுரை, மாநகராட்சிகளை எடுத்துக் கொண்டாலும், உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறவில்லை. சென்னையில் 14 ஆண்டுக்காலம், ராமர் வனவாசத்திற்கு சென்றதுபோல் தேர்தல் நடைபெறவில்லை. அதன் காரணமாக சென்னை நகர மக்கள் படுகின்ற துன்பத் துயரங்கள் சொல்லமுடிய வில்லை. அவர்களின் துயரங்களைத் தனி அதிகாரிகள் மூலமாக தீர்க்க முடியாது. கோவையை எடுத்துக் கொண்டாலும், 1981-ஆம் ஆண்டிலேயிருந்து தேர்தல் நடத்தப்படவில்லை. மதுரையிலும் அப்படித்தான் இருக்கிறது. மக்கள் நெருக்கமாக வசிக்கின்ற நகரங்களின் பிரச்சினைகளைத் தீர்க்க உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல்களை நடத்த அரசு உடனடியாக முன்வர வேண்டும்.

கிராமப்புற மக்களுக்கு குடிநீர் வழங்கவேண்டுமென்று சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு அதிக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. நான் சார்ந்திருக்கின்ற திருத்துறைப்பூண்டி நகரம் கடலோரப் பகுதி. அந்தப் பகுதியில் எங்கே தோண்டினாலும் உப்பு நீராகத்தான் கிடைக்கிறது. வேதாரண்யம்—பட்டுக்கோட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அமல் படுத்தாததால், திருத்துறைப்பூண்டி நகருக்கு ஆண்டுக்காண்டு வறட்சி வருகிறபோது, கோடைக்காலங்களில் வாகனங்கள் மூலமாகப் பேரூராட்சி தண்ணீர் வழங்குகிறது. இப்போது தண்ணீர்த் தட்டுப்பாடு வந்துவிட்டது. அங்கே வாகனங்கள் மூலம் இப்போது தண்ணீர் வழங்கப்பட வேண்டும். அஃதோடு மட்டுமல்லாமல், எங்கெங்கே வறட்சி ஏற்படும் என்று கருதப்படுகிறதோ அங்கேயெல்லாம் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்துக் குடிதண்ணீர் வழங்க வேண்டும்.

உழவர்களுக்கு இலவசமாக அல்லது மானியமாக வழங்கப்படக்கூடிய பொருட்கள் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. குறிப்பிட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு இவ்வளவுதான் வழங்கப்படும் என்று அரசாங்கம் சொன்னாலும், அந்த அறிவிப்பு வருவதற்குள் திரும்ப அந்த வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சென்றாலும், போதுமான அளவுக்கு விவசாயிகளுக்கு கடன் கிடைப்பதில்லை.

முற்பகல் 11.45

பொதுவாக அதைத் தெரிந்து கொண்டிருக்கக்கூடிய பெரிய விவசாயிகளே பல்வேறு நபர்களின் பெயரிலே போட்டு பெற்று வருகிறார்கள். சென்ற ஆண்டு கொடுத்ததைவிட நடப்பாண்டில் கொடுத்திருப்பது மிகவும் குறைவு. அதிலே பாதி குறைக்கப்பட்டிருக்கிறது. அதையும் நீங்கள் இனிமேல் தரவேண்டும். சிறு விவசாயிகளுக்கு கார்ட் மூலம் வழங்கி அதுமூலம் வழங்கப்படுவதாக வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை முழுமையாக அமல் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

தஞ்சை மாவட்டத்திலே எல்லா விவசாயிகளும் கரும்பு உற்பத்தி செய்கிறார்கள். கரும்பிலே நல்ல இலாபம் கிடைப்பதால் நெல் உற்பத்தியைச் செய்யமுடியாமல் கரும்பை விரும்பிப் போடுகிறார்கள். தஞ்சை மாவட்டம், நாகை-காயிதே மில்லத் மாவட்டங்களில் இருக்கக் கூடிய சீர்காழி, பூம்புகார், திருவாரூர், நன்னிலம் போன்ற பகுதிகளில் கரும்பு உற்பத்தி அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அந்தப் பகுதிகளுக்கு ஒரு சர்க்கரை ஆலை துவக்கப்பட வேண்டும். ஏற்கெனவே அறந்தாங்கியில் ஒரு சர்க்கரை ஆலை துவங்குவதாக இருந்தது. அந்த சர்க்கரை ஆலை என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. பக்கத்திலே வேதாரண்யத்திலே இருக்கிறது என்றாலும் அறந்தாங்கியில் ஒரு சர்க்கரை ஆலையைத்துவக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



வேட்டி, சேலைகளை வழங்குவதற்கு நமது அரசு ரூ. 41.36 கோடி ஒதுக்கியிருந்தது. பல்வேறு கிராமங்களில் இன்னும் வேட்டி சேலைகள் போய்ச் சேரவில்லை. கொடுப்பதற்குக் குறைவாக இருந்த காரணத்தால், கிடைக்காதவர்கள் அங்கேயுள்ள அதிகாரிகளிடம் தகராறு செய்திருக்கிறார்கள், என்னுடைய தொகுதியில், ஓவலூரில், வி.ஏ.ஓ.க்களுக்கும் வேட்டி சேலை கிடைக்காதவர்களுக்கும் தகராறு நடந்து, வேட்டி புடவை கிடைக்காமல் 13 பேர் நாகப்பட்டினம் கோர்ட்டில் வழக்கிலே சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். காரணம் வேட்டி, புடவை கேட்டதாலே, அவரை அடித்து, அவருடைய பையில் இருந்த பணத்தை பறித்ததாக, புக்குகளை பிடுங்கி விட்டார்கள் என்றும், வேட்டி புடவையைப் பறிக்க வந்தார்கள் என்றும் வி.ஏ. ஓ. கொடுத்த கம்ப்ளைன்ட் பேரில் வழக்குகள் போட்டு நாகப்பட்டினத்தில் கன்டிஷனல் பெயிலில் ஒரு மாதம் வழக்கிலே இருக்கிறார்கள். இப்படி விட்டுவிடாமல் முழுமையாக வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை நீங்கள் கொடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய வறட்சி நிலைமைகளை போக்கும் வகையில், குடிநீர் பஞ்சத்திற்கு தீர்வு காணுவதற்கு இந்த அரசு முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

அதே போன்று சிறுதொழில்கள், சிறுதொழில் பிரிவுகள் தஞ்சை மற்றும் நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டங்களில் இல்லை. குறிப்பாக இரண்டொரு சர்க்கரை ஆலையைத் தவிர வேறு சிறு தொழில்கள் இல்லை. டி.ஐ.ஐ.சி., மற்றும் 'சிப்காட்' போன்ற நிறுவனங்களின் மூலமாக சிறு தொழில்களைத் துவங்க அரசு முயற்சி எடுக்க வேண்டும். அங்கே நல்ல வைக்கோல் கிடைக்கிறது என்பதால் பேப்பர் தொழிற்சாலையைத் துவங்க நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. வைக்கோல் நிறையக் கிடைக்கிற காரணத்தால் காகித தொழிற்சாலையைத் துவங்க முடியும். அங்கே இருக்கக்கூடிய ஒவ்வொரு தாலுகாவிலும் 10 ஷெட்டுகளைக் கட்டி சிறுதொழில்களைத் துவங்க வாய்ப்புகளை ஏற்படுத்த முடியும். அந்தப் பகுதியிலே உள்ள விவசாயத் தொழிலாளர்கள், இரண்டு மூன்று மாத காலத்தில் விவசாய வேலைகள் முடிந்துவிடுவதால் வேறு வேலைகள் இல்லாத சூழ்நிலையில் தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் உள்ள பத்து இலட்சம் விவசாயத் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை வாய்ப்புத் திட்டத்தை நமது அரசு கொண்டு வர வேண்டும் என்று சொல்லி எனக்கு வாய்ப்பளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி அமைகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: திரு. ஆ. கு. சீனிவாசன்.

[1992 மார்ச் 26

திரு. ஆ. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இன்று கூடுதல் மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு தந்த செந்தமிழ்த் தாய் ஆகிய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு பெரணமல்லூர் தொகுதியின் சார்பில் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

''வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி''

என்பது வள்ளுவர் வாக்கு. உலகில் வாழும் அத்தனை ஜீவராசி
களும் மழையை நம்பிதான் வாழ்கின்றன. அது போன்று
தமிழகத்திலே உள்ள எல்லா ஜீவராசிகளும் ஏழையெளிய
மக்கள் உட்பட கங்கா தேவி ஆகிய புரட்சித்
தலைவியை நம்பிதான் வாழ்ந்து கொண்டிருக்கின்றன
என்ற முறையில் அவருடைய செங்கோலை நினைத்துதான் எல்
லோரும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதற்கிணங்க என்
னுடைய தொகுதி மிகவும் பிற்பட்ட தொகுதி ஆகும், அதில்
வாழும் மக்கள் ஏழை எளிய நலிந்த பழங்குடி மக்கள் வாழும்
பகுதியாக இருக்கிறது, அது வளர்ச்சி பெறாமல் இருக்கிறது.
அது வளர்ச்சி பெற வேண்டி, அந்தத் தொகுதிக்கு என்னென்ன
சிறு குறைபாடு உள்ளதோ அதையெல்லாம் நிவர்த்தி செய்ய
வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன்.
சென்ற தி.மு.க. ஆட்சியில் இடைத் தேர்தல் என் தொகுதிக்கு
வந்தது. அதில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஜெயித்து
விட்ட காரணத்தினால் அங்கே பல திட்டப்பணிகளை தி.மு.க
ஆட்சி வேண்டுமென்றே நிறுத்திவிட்டது. இப்போது அதை
யெல்லாம் வெற்றிகரமாக ஆக்க வேண்டுமென்று மக்கள் ஏக
மனதாக கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். நிறைவேற்றக்
கோருகிறேன்.

முற்பகல் 11.50

தெள்ளாறுஒன்றியம்பெரிய தொகுதியாக உள்ளது. அதை தேசூர்
பேரூராட்சியை மையமாக வைத்து நிர்வாக வசதிக்காக பிரித்து
அந்தப் பகுதி மக்களுக்கு வளர்ச்சிப் பணிகளைச் செய்து கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆகையி
னால் தேசூரை மையமாகக் கொண்டு ஒரு ஒன்றியம் அமைக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே சமயத்தில் பெரணமல்லூரில் மேல்நிலைப் பள்ளி உள்
ளது. அங்கே பெண் பிள்ளைகளும் ஆண் பிள்ளைகளும் 1,500
பேர் படிக்கிறார்கள். பெண் பிள்ளைகள் 10, 15 கிலோ மீட்டர்
வந்து படிக்கிறார்கள். அவர்களுக்கு மிகவும் கஷ்டமான சூழ்
நிலை இருக்கிறது. பெண் பிள்ளைகள் தங்கிப் படிக்க ஒரு ஹாஸ்
டல் வசதி செய்து தரவேண்டும் என்றும் தனியாக பெண்கள் படிப்
பதற்காக உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்றும் கேட்
டுக்கொள்கிறேன்.



1992 மார்ச் 26] [திரு. ஆ. கு. சீனிவாசன்]

சேத்துப்பட்டு பேரூராட்சியில் உயர்நிலைப் பள்ளி உள்ளது.
அங்கே 1500 மாணவர்களுக்கு மேல் படிக்கிறார்கள். அங்கே பெண்
பிள்ளைகளும், ஆண் பிள்ளைகளும் சேர்ந்து படிக்கிறார்கள்.
அங்கே இட வசதி இல்லாத காரணத்தினால் எல்லா மாணவர்
களும் 30 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள போளூருக்கும், ஆரணிக்
கும், செய்யாறுக்கும் செல்ல வேண்டி இருக்கிறது. அங்கே இட
வசதி இல்லாத காரணத்தினால் அவர்கள் படிப்பை நிறுத்தி விடு
கிறார்கள். ஆகையினால் அந்த உயர்நிலைப் பள்ளியை மேல்
நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
இன்னும் பல இடங்களில் உயர்நிலைப்பள்ளிகள்,— மன்சுராபாத்,
பெரியகளக்களூர், அல்லியேந்தல்மடம், பெரிய கொழப்பலூர்
ஆகிய இடங்களிலுள்ள உயர்நிலைப் பள்ளிகள் கட்டட
வசதி இல்லாமலே மாணவர்கள் மரத்தடியில் படிக்கும்
சூழ்நிலை இருக்கின்றது. அவற்றிற்கு கட்டட வசதி செய்து தர
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மக்கள் 4 கிலோ மீட்டர், 5 கிலோ மீட்டர் நடந்து வந்து
மெயின் ரோட்டுக்கு வந்து பஸ் ஏறும் சூழ்நிலையில் அவர்கள்
மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகையினால் ஆரணி— விண்ண
மங்கலம் நடுப்பட்டு வழியாக, பெரணமல்லூர் வழியாக வந்த
வாசி செல்ல 2 பஸ்களை விட வேண்டுமென்று மக்கள் கோரி
உள்ளனர். அதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டு
கொள்கிறேன். அதே சமயத்தில் மக்கள் பஸ்களில் இடம் இல்
லாத காரணத்தினால் பல கிலோ மீட்டர் நடந்துவந்து தான்
பல கிராமங்களுக்கு செல்கிறார்கள். சேத்துப்பட்டிலிருந்து செய்
யாறு செல்ல வேண்டுமென்று சொன்னால் பஸ்சில் இடம் இல்லை
என்று சொல்லி பஸ்களை நிறுத்தாமல் போய்விடுகிறார்கள்.
சேத்துப்பட்டு நமத்தோடு பெரணமல்லூர் வழியாக செய்யாறுக்கு
மேலும் டவுன் பஸ்கள் இரண்டு விடவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதற்கு அடுத்து, பெரிய கொழப்பலூரில் சப் ரிஜிஸ்டிரார்
ஆபீஸ், மார்க்கெட் கமிட்டி போன்ற அலுவலகங்கள் இல்லை. அவை
அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கின்றது.
அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியில் பல வளர்ச்சிப் பணிகள்
மிகவும் நல்ல முறையில் நடந்து வருகிறது. அதே சமயத்தில்
பெரணமல்லூர் நகரிலும், சேத்துப்பட்டு நகரிலும் பி.டி.ஓ. ஆபீஸ்
கள் உள்ளன. பல அரசு அலுவலகங்களில் 200, 300 அதி
காரிகள் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு வீட்டுவசதி இல்
லாத காரணத்தினால் அவர்கள் 30, 40 கிலோ மீட்டர் தூரத்தி
லுள்ள நகரங்களில் தங்கிதான் தினமும் காலை 10 மணிக்கு
வந்து மாலை 5 மணிக்குச் சென்றுவிடுகிறார்கள். அவர்கள் அங்கே
தங்குவதற்கு வசதி இல்லாததினால் மேலும் வளர்ச்சிப்
பணிகளைச் செய்வதற்கு அவர்களுக்கு வசதி இல்லாமல் உள்ளது.
ஆகையினால் அவர்கள் தங்குவதற்கு ஹவுசிங் போர்டு வீடுகளை

[திரு. ஆ. கு. சீனிவாசன்] [1992 மார்ச் 26

எங்கள் தொகுதிக்கு, சேத்துப்பட்டுக்கும், பெரணமல்லூருக்கும்
கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு
இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்த
மைக்காக நன்றி கூறி இதை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

முற்பகல் 11—55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஆர்.
சிங்காரம்,

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே. இந்த விவாதத்தில் கலந்து கொள்வதற்கு
வாய்ப்பளித்த தங்களுக்கு மனமார்ந்த, இதயமார்ந்த நன்றி
யைத் தெரிவித்துக் கொள்கிறேன், நேற்று, அன்றொரு நாள்
நடந்த கொடுமையான சம்பவத்தைப் பற்றி, நம்முடைய
தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் தாக்கப்
பட்டது குறித்து அனைவரும் நினைவுகூர்ந்தார்கள். நான்
ஏதாவது சான்ஸ் கிடைக்குமா என்று பார்த்தேன், கிடைக்க
வில்லை, இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள நான்
ஆசைப்படுகிறேன்,

அந்த கொடுங்கோல் ஆட்சியில் அன்றைக்கு அண்ணா
திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் நாங்கள் எல்
லோரும் சேர்ந்து இந்தப் பகுதியிலிருந்த அந்த அம்மையாரை
காப்பாற்றினோம் என்பது அனைவருக்கும் தெரியும். ஒரு
சட்டமன்றத்தில் திடீரென்று ஏதாவது நிகழ்ச்சி நடக்கலாம்,
ஆத்திரப்பட்டு விவாதம் நடக்கலாம், அதைக் கட்டுப்படுத்துகிற
சக்தி பேரவைத் தலைவருக்கு இருக்க வேண்டும்.
அதே நேரத்தில் தமிழகத்தின் முதலமைச்சருக்கும் அந்த
பொறுப்பு இருக்கவேண்டும். ஆனால் 20 நிமிடம் நடந்த
அந்த அமளியில் செருப்புகள் வீசப்படுகின்றன, மைக்குகளைப்
பிடுங்கி அன்றைய எதிர்க்கட்சித் தலைவி. புரட்சித் தலைவி
தலையில் வீசப்படுகின்றன. குடுமி பிடித்து இழுக்கப்
படுகிறது, * * புடவையைக் கிழிப்பதற்கான
முயற்சியை மேற்கொள்கிறார்கள். இப்படிப்பட்ட கோரமான
(குறுக்கீடு) மிகக் கேவலமான செயல்களை 20 நிமிடம்
அவர்கள் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் இதிலே
என்ன வேடிக்கை என்று சொன்னால் அன்றைக்கு முதலமைச்
சராக இருந்த கருணாநிதி அவர்கள் அதைப் பார்த்துக் கொண்டு
ரசித்துக் கொண்டே இருந்தார். அதுதான் மிகப்பெரிய
வேதனை, இந்த நாட்டிலே முதலமைச்சர்கள்— திறமை
வாய்ந்த, சக்தி வாய்ந்த முதலமைச்சர்கள் இருந்த சிட்—
ஆசனம் இது. எண்ணிப் பார்க்கிறேன். பெருந்தலைவர்
காமராசர் அவர்கள் இருந்திருந்தால் அப்படி நடந்திருக்குமா?

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
இணங்க அகற்றப்பெற்றது.



1992 மார்ச் 26 ] [திரு. ஆர். சிங்காரம்]

நான் எண்ணிப் பார்க்கிறேன் புரட்சித் தலைவர் டாக்டர்
எம். ஜி. ஆர். அவர்கள் இருந்திருந்தால், எதிர்க்கட்சியாக
இருந்தாலும் அப்படி நடந்திருக்குமா? நடந்திருக்காது. ரெட்டி
யார் இருந்திருந்தால் இப்படி நடந்திருக்குமா என்றால் நடந்
திருக்காது....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
கல்வி அமைச்சர் அவர்கள்.

* மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் சார்பில்
ஓரிரு அமைச்சர்கள் தவறாகப் பேசிய நேரத்தில் எங்களுடைய
புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் எழுந்து நின்று, தானே
மன்னிப்புக் கேட்டார்கள்.

திரு. ஆர். சிங்காரம் : துணைத் தலைவர் அவர்களே,
அதைத்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) சட்டமன்ற உறுப்
பினர்கள் தவறு செய்தால் அது யாராக இருந்தாலும் திருத்த
வேண்டுமென்ற முறையில் சுட்டிக்காட்டி, திருத்திக்
கொள்கிற அளவில் நம்முடைய எம். ஜி. ஆர். அவர்கள்
புரட்சித் தலைவர் அவர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால்
20 நிமிடம் இங்கே நடந்த நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டே
இருந்ததுதான் மிகப் பெரிய வேதனை. அப்படிப்பட்ட
முதலமைச்சரா இந்த நாட்டைக் காப்பாற்ற போகிறார்
என்று, அன்று முதல் அவர் மீது எனக்கு ஏற்பட்ட வெறுப்பும்,
தமிழகத்தினுடைய இன்றைய முதலமைச்சர் டாக்டர்
புரட்சித் தலைவி அவர்கள் மீது ஏற்பட்ட விருப்பும் தான்
நான் இந்த அரசை, புரட்சித் தலைவி அவர்கள் எடுக்கிற
அத்தனை நடவடிக்கைகளையும் பாராட்டிக்கொண்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இங்கே நம்முடைய புரட்சித்தலைவி
அவர்களை அன்றைக்குத் தாக்கியபோது அம்மா, அம்மா என்று
அலறினார்கள். அப்படி அன்று அவர்கள் அம்மா, அம்மா
என்று அலறியது இன்று இந்தத் தமிழகமே இந்த அம்மை
யாரைப் பார்த்து அம்மா, அம்மா என்று வாழ்த்துகிறது.

ஆகவே, அம்மா, அம்மா என்று அலறிய அந்த வார்த்தையை
இந்த தமிழக மக்கள் அத்தனைபேரும் எல்லோரும் சேர்ந்து
இன்று நம்முடைய புரட்சித் தலைவி அவர்களை அம்மா,
அம்மா என்று அழைக்கிறார்கள். அப்படிப்பட்ட புரட்சித்
தலைவி அவர்கள், கடந்த கால ஆட்சியில் நடந்த எந்தவொரு
நிகழ்ச்சியும், அப்போது ஏற்பட்டது போல இங்கு நடந்து
விடாமல் மிகவும் ஜாக்கிரதையாக, உன்னிப்பாக பார்த்துக்
கொண்டிருக்கிறார்கள்.

நான் இன்னும் சொல்லப்போனால் முதலமைச்சருக்கு திறமையான நிர்வாகம் தெரியுமா என்று கேட்டவர்கள் வியப்பில் ஆழ்கிற அளவில் இன்றைக்கு நிர்வாகம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. (மேசையைத், தட்டும் ஒலி) காரணம், இங்கே ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப்படுகின்றன. நான் ஒவ்வொரு நாளும் தினம் தினம் பத்திரிகையில் பார்த்து நடக்கிற கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள், எல்லாவற்றையும் பார்த்து ஒத்திவைப்புத் தீர்மானங்களை அந்த ஆட்சியிலும் கொடுத்திருக்கிறேன். இந்த ஆட்சியிலும் கொடுத்திருக்கிறேன். இதிலே இருக்கிற வேறுபாட்டைத் தெரிந்து கொள்ள வேண்டும். பழைய உறுப்பினர்களுக்குத் தெரியும். ஆனால் புதிய உறுப்பினர்களுக்குத் தெரியாது. ஒத்திவைப்புத் தீர்மானம் பேரவைத் தலைவர் அறையில் கொடுக்கும்போது அவர் முதலமைச்சரைக் கேட்பார். அவர் உடனடியாக அந்த நிகழ்ச்சி என்ன நிகழ்ச்சி என்று தெரிந்து, திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் பாதிக்கப்பட்டிருந்தால் அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ள மாட்டார். அதற்கு மாறாக அதை மழுப்பி விடுவார். ஆனால் இன்று எந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தாலும். எதற்கும் உடனடியாக பதில் சொல்கிற பாணி, தைரியம், தெம்பு. சக்தி படைத்த முதலமைச்சராக நம்முடைய புரட்சித்தலைவி அவர்கள் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உடனடியாக நாட்டில் நடக்கின்ற அத்தனை நிகழ்ச்சிகள் பற்றியும் தனக்குச் செய்திவரவேண்டும் என்று உத்தரவிட்டு இருக்கிறார்கள். அதன் காரணமாக, அத்தனை நிகழ்ச்சிகளும் முதலமைச்சருடைய இல்லத்திற்கே சென்று அங்கே தயார் செய்து, தயாராக வருகின்ற முதலமைச்சர் இது உண்மையா, பொய்யா என்பதைப் பரிசீலித்து, அது ஆளும் கட்சியா, எதிர்க்கட்சியா என்று எல்லாம் வித்தியாசம் பார்க்காமல், யாராக இருந்தாலும் அதை உடனடியாகத் தட்டிக் கேட்கின்ற, பதில் சொல்கின்ற முதலமைச்சராக நம்முடைய முதலமைச்சர் இருக்கிறார்கள்.

நண்பகல் 12-00

அதுமட்டுமல்ல. இங்கே வருகின்றபோது, இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளலாமா, வேண்டாமா என்று கேட்டால், எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்வார்கள். உடனே நமக்கெல்லாம் ஆச்சரியமாக இருக்கும். எப்படி பதில் தயாரிப்பார்கள் என்று. ஆனால் உடனே பதிலைத் தயாரித்து, அதற்குப் பதில் சொல்கின்ற பாணி, நம்முடைய முதலமைச்சரை மிஞ்சுகின்ற அளவிற்கு யாருமே இல்லை என்பது என்னுடைய கருத்தாகும். அந்த அளவிற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மிக சக்தி வாய்ந்த முதலமைச்சராக திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.



இன்றைக்குக் கூட மின்சார கட் 10 சதவீதம் என்பதை தள்ளுபடி செய்து விட்டார்கள். ஆகவே, அந்த அளவிற்கு மிகத் திறமையாக, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, இங்கே நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு அமைச்சருடைய போர்ட்போலியோவிலும், இங்கே அவர்கள் பதில் சொல்கின்றபோது, அதிலே சில கிளாரிபிகேசன்கள் கொடுத்து, இப்படிச் சொல்லுங்கள் இப்படிச் சொல்லுங்கள் என்று சொல்கிறார்கள் என்று சொன்னால் அந்த விஷயங்களை எல்லாம் 'தரோ'-ஆகப் படித்து. ஹோம் ஓர்க் செய்து, ஒவ்வொருநாளும் வருகின்ற நிகழ்ச்சிகளை தன்னுடைய வீட்டிலே இருந்து கொண்டு. அதிகாரிகளைப் பார்த்து, அமைச்சர்களைப் பார்த்து, இங்கே அனைத்து பதில்களையும் தயார் செய்து. வருகிற முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர். ஆகவேதான், நாம் எல்லாம் அவர்களை புரட்சித் தலைவி என்று சொல்கிறோம். புரட்சிகரமான ஆட்சியைச் செய்கின்ற காரணத்தால்.

நான் ஒரு கோரிக்கையை ஆதி திராவிட மானியக்
கோரிக்கையிலே சொன்னேன். ஆதி திராவிடர்களுக்காகக் கட்
டப்படுகின்ற தொகுப்பு வீடுகள் எல்லாம் சரியானதாக
இல்லை. அதற்குத் தொகை போதவில்லை என்று சொன்
னேன். உடனடியாக, முதலமைச்சர் அவர்கள், இனிமேல்
கட்டப்படுகின்ற வீடுகள் சரியானதாக கட்டப்படும், என்
பதைச் சொல்லி விட்டு, உடனடியாக தமிழ்நாட்டில் இருக்கிற
அத்தனை ஜே,வி.வி.டி. ஓர்க்கை நிறுத்திவிட்டு. சம்பந்தப்
பட்ட அதிகாரிகளையும், அமைச்சர்களையும் கூப்பிட்டுப்
பேசி, 2500 ரூபாய் கிராமங்களுக்கும். 5 ஆயிரம் ரூபாய் நக
ரத்தையொட்டி இருக்கிற பகுதிகளுக்கும் உயர்த்திக் கொடுத்த
பொறுப்பு, ஒரு திராணி, தெம்பு, தைரியம் நம்முடைய
முதலமைச்சருக்குத் தான் உண்டு, ஆகவே, எந்த விஷயத்தைச்
சுட்டிக்காட்டினாலும். உடனடியாக அதைத் தட்டிக் கேட்
கின்ற, 'உடனடியாக அதை மாற்றிக் கொள்கிற, உடனடி
யாக அதை திருத்திக் கொள்கிற, உடனடியாக அதை
உணர்ந்துகொள்கிற பண்பும், பாசமும் மிகுந்த முதலமைச்சர்
நம்முடைய முதலமைச்சர்.

முதலமைச்சராக இருக்கலாம், ஆனால் பாசத்தோடு இருக்க வேண்டும். ஒரு உணர்வோடு இருக்க வேண்டும், நல்ல காரியம் நடக்க வேண்டும் என்ற உணர்வோடு இருக்க வேண்டும். நீதி இருக்க வேண்டும். நேர்மை இருக்கவேண்டும், நியாயமாக நடக்கவேண்டும் என்கிற உணர்வோடு இருக்க வேண்டும், அப்படி இருந்தால்தான், ஆட்சியைச் செம்மையாக நடத்த முடியும்,

[திரு. ஆர். சிங்காரம்] [1992 மார்ச் 26

அதுமட்டுமல்ல. விவசாயிகளுடைய போராட்டங்களை நாம் எல்லாம் நடத்தினோம், அனைத்திந்திய அண்ணா தி.மு.க., காங்கிரஸ் மற்ற இயக்கங்கள் எல்லாம் நடத்தியிருக்கிறோம். ஆனால், கடந்த கால ஆட்சியிலே 10 ஆயிரம் ரூபாய் தள்ளுபடி என்று சொல்லி விட்டு, 10 ஆயிரம் ரூபாயைத் தள்ளுபடி செய்யாமல், ஏதோ பத்திரிகையிலே விளம்பரம் கொடுத்துவிட்டுப் போய்விட்டார்கள், நம்முடைய அரசுதான் அதையும் 70 கோடி ரூபாயை தள்ளுபடி செய்ததாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

நம்முடைய அனைத்திந்திய அண்ணா தி.மு.க. தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்ட அனைத்து விஷயங்களில் பெரும்பகுதியை முடித்துவிட்டு. விவசாயிகளுடைய கடனை நீங்கள் முடிக்கவில்லையே என்று நான் ஒரு கேள்வியிலே துணைக் கேள்வி கேட்டபோது, உடனடியாக முதலமைச்சர் அவர்கள் எழுந்து, நிச்சயமாக அனைத்து விளக்கங்களையும் சொல்லி விட்டு அந்த வட்டி, அபராத வட்டி கோரிக்கை பற்றி பரிசீலிக்கப்படும் என்று சொன்னார்கள், இன்று தமிழ்நாட்டில் உள்ள அத்தனை விவசாயிகளும் மகிழ்ச்சிக் கடலிலே ஆழ்ந்திருக்கிறார்கள், அப்படி, எந்த விஷயங்களைச் சுட்டிக்காட்டினாலும். உடனடியாக அதைச் செய்கின்ற, அதைப் பரிசீலிக்கின்ற தைரியம் படைத்த, முதலமைச்சர் தான் நம்முடைய முதலமைச்சர். அப்படிப்பட்ட முதலமைச்சரை— நேற்றைக்கு கிடைக்காத சான்ஸ். நேற்று எனக்கு அந்த சான்ஸ் கிடைக்கவில்லை. ஆகவே. அப்படிப்பட்ட முதலமைச்சரை— நான் மனதாரப் பாராட்டுகிறேன்,

இதிலே ஒன்று, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள், அவர்களைப் பொறுத்தவரையில். சொல்கிறேன், இந்த உள்ளூர் வரி. லோக்கல் செஸ், ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்ட வரி, அது 304 பர்செண்டாக உயர்த்தப்பட்டு இருக்கிறது, விவசாயிகள் மத்தியிலே மிகப் பெரிய அதிருப்தி ஏற்பட்டு இருக்கிறது, பரவலாக. இங்கே இருக்கிற ஆளும் கட்சி, எதிர்க்கட்சி தோழமைக் கட்சி, என்று எல்லோர் மத்தியிலும். அதே நேரத்திலே விவசாயிகள் மத்தியிலேயும்—304 சதவீதம் உயர்த்தப்பட்டு இருக்கிறது என்று சொன்னால். சற்று அதிருப்தி நிலவுகிறது, எனவே தயவு செய்து. நம்முடைய நாட்டினுடைய காவலாக இருக்கின்ற மாண்புமிகு நாவலர் அவர்கள். நிதியமைச்சர் அவர்கள் இதைப்பற்றி மீண்டும் நம்முடைய முதல்வர் அவர்களிடத்திலே பரிசீலனை செய்து, கலந்து பேசி. அதை ரத்து செய்வதற்கு, ஏதாவது வழிவகை உண்டா என்பதைப் பார்க்க வேண்டும். நிதி இல்லை என்பதை நான் பொறுப்போடு உணர்கிறேன். நான் மறுக்கவில்லை. பொறுப்பற்ற



1992 மார்ச் 26] [திரு. ஆர். சிங்காரம்]

முறையிலே நான் பேசவில்லை, இது விவசாயிகளை இவரு வாகப் பாதிக்கிறது, இங்கே நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள், எதையும் அழகாக செய்து முடிக்கின்ற நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள், அவர்களோடு கலந்து பேசி. இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்,

(பிற்பகல் 12-05)

விவசாயிகளுடைய பிரச்சினை என்பது நீண்ட நாளைய பிரச்சினை. ஆகவே வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்துவிட்டு. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னது போல். அதில் மீதிக் கடன்களை 3 ஆண்டுகளுக்கு கன்வர்ஷன்' கொடுத்தால், விவசாயிகளுடைய பிரச்சினை முடிந்துவிடும், அப்படிப்பட்ட சூழ்நிலையை நீங்கள் செய்தாக வேண்டுமென்று நான் பணிவன்போடு வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

வருகின்ற மே மாதத்திற்குள் கூட்டுறவுத் தேர்தலை நடத்துவதாக அறிவித்திருக்கிறீர்கள். மகிழ்ச்சி. கடந்த ஆட்சிக் காலத்தில் சேர்க்கப்பட்ட பினாமி உறுப்பினர்களை நீக்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அங்கே நிர்வாகத்தில் இருக்கிறவர்கள் எல்லாம் கடந்த ஆட்சியினுடைய சொந்தக்காரர்கள். ஆகவே அந்த சொந்தக்காரர்களையெல்லாம் சற்று ஆங்காங்கே மாற்றம் செய்து விட்டு அதன் பிறகு இந்த நிலையைச் செய்தால் நன்றாக இருக்குமென்பதையும் நான் பணிவன்போடு வேண்டி விரும்பி கேட்டுக்கொண்டு, இந்த சந்தர்ப்பத்தை அளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு, என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு, விடைபெறுகின்றேன், ஜெய்ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்கள் பேசும்போது குறிப்பிட்ட * * என்ற சொல் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1991–92 ஆம் ஆண்டின் இறுதித் துணை நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதத்தில் நான் கலந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

---

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்

** மாண்புமிகு
இணங்க அகற்றப்பெற்றது.

[திரு. சி. சுவாமிநாதன்] [1992 மார்ச் 26

இங்கே மதிப்பீடுகளின் தொகையாக ரூ. 2,300.60 கோடி
யும், மூலதனக் கடன் கணக்கு வரவிற்காக ரூ. 1308.26
கோடியும், இந்தத் துணை நிதிநிலை அறிக்கையின் மீது மாண்பு
மிகு அமைச்சரவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள்.
இந்த துணை நிதிநிலை அறிக்கையின்மீது மாண்புமிகு நிதி
யமைச்சரவர்கள் பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களுக்காக
பல சிறப்பான நிதியாதாரங்களைக் கொடுக்கின்ற வகையில்
உதவித் தொகைகளை எல்லாம் வழங்கியிருக்கிறார்கள். உழ
வர்களுக்கு உதவித் தொகை வழங்குதல், விதை நெல் மற்
றும் பயிர்ச்செடி பாதுகாப்பு, எண்ணெய்வித்துக்கள் போன்ற
வற்றுக்கு எல்லாம் இங்கே அதிக நிதியாதாரங்களைக் கொடுத்
திருக்கிறார்கள். சிறு, குறு விவசாயிகளுக்கு ரசாயன உர
உதவிக் கடன் நிவாரணத் திட்டத்திற்கு ஆகும் செலவில் மா
நில அரசின் பங்காக, 'நபார்டுக்குக்' கொடுக்கின்ற தொகை
யை இப்போது வழங்கியிருக்கிறார்கள். இயற்கை வெள்ளத்
தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு உதவித்தொகை
யாக இங்கே வழங்கி பல சிறப்பு அம்சங்களைச் செய்திருக்
கிறார்கள். அதேபோல் கரும்பு உற்பத்தியாளர்களுக்கும்
ஊக்கத் தொகையை வழங்கியிருக்கிறார்கள். நிலமற்ற கிரா
மப்புற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு இலவச வேஷ்டி,
சேலை கொடுக்கின்ற அந்த நல்ல திட்டத்திற்கும் உதவித்
தொகை கொடுத்திருக்கிறார்கள். மற்றும் தொழில்களுக்கு
பங்கு மூலதன உதவித் தொகையும், மாவட்டத் தொழில்
மையங்களுக்கு உதவித் தொகையும், குடிநீர் வழங்கும் திட்
டத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடும், ஆதிதிராவிடர் குடியிருப்ப
களுக்கு நிதி ஒதுக்கீடும் செய்து, நகராட்சி வளர்ச்சிக்கும்
நல்ல பல திட்டங்களை இந்தத் துணை நிதிநிலை அறிக்கை
யின் மீது கொடுத்து தமிழக மக்கள் பாராட்டுகின்ற வகையில்
நல்லதொரு நிதிநிலையினை இப்போது கொடுத்திருப்பதற்கு
என்னுடைய பாராட்டுதலையும், என்னுடைய நன்றியறி
தலையும் தெரிவித்துக்கொண்டு, இங்கே காங்கிரஸ் கட்சி
யின் சார்பில் கூட்டணி இயக்கம் என்கின்ற
வகையில் மக்கள் மன்றத்தில் பேசப்படுகிற அல்லது அவர்கள்
முணுமுணுத்துக் கொண்டிருக்கிற சில விவரங்களை உங்
களுக்கு ஆலோசனையாக சொல்வது என்னுடைய கடமை
என்று கருதுகிறேன்.

பிற்பகல் 12-10

உதாரணமாக இப்போது சர்க்கரை உற்பத்தியைப் பொறுத்
அளவில் நம்முடைய மாநிலம் தன்னிறைவு பெற்ற மாநில
மாக மற்ற மாநிலங்களுக்கு எடுத்து காட்டுகிற வகையில் மிகச்
சிறப்பான பல அம்சங்களை சர்க்கரை உற்பத்தி திட்டத்தின்
மூலம் தமிழகம் இந்திய நாட்டில் முன்னணியில் இருக்கிறது என்
பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனாலும் இந்தச் சூழ்நிலை



1992 மார்ச் 26] [திரு. சி. சுவாமிநாதன்]

யைப் பயன்படுத்திக் கொண்டு குறுங்குளத்தில் இருக்கிற கூட்
டுறவு சர்க்கரை ஆலை இயங்கவில்லை. கடந்த 2 ஆண்டுக்கால
மாக அந்த ஆலை சரிவர இயங்கவில்லை. அந்த ஆலையில்
பதிந்து இருக்கிற கரும்பு உற்பத்தியாளர்களுடைய கரும்பு
களை சக்தி சுகர்ஸ்ஸீக்கு அனுப்பி கொண்டிருக்கிற சூழ்
நிலையை குறிப்பாக அந்த மாவட்ட மக்களை வெகுவாகப்
பாதித்து இருக்கிறது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்
டிருக்கிறேன். சக்தி சுகர்ஸ் ஆரம்பித்து ஏறத்தாழ 2
ஆண்டுகள் ஆகிறது என்று கருதுகிறேன். சக்தி சுகர்ஸ்ஸைப்
பொறுத்தவரையில் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு அந்த
ஆலையினுடைய சொந்தக்காரர்கள், அவர்களுடைய பிரதி
நிதிகளை அனுப்பி வைத்து ஒரு டன் 400, 450 ரூபாய்க்கு, அவா
களே வெட்டிச் செல்லுகிற, எடுத்துக் கொண்டு செல்லுகிற
ஒரு சூழ்நிலை இங்கே இருக்கிறது. அதேசமயம் குறுங்குளம
சர்க்கரை ஆலையினைப் பொறுத்த வரையில் 339 ரூபாய்
கொடுப்பதற்குக் கூட அவர்கள் பல தவணைகளில் 50 சத
வீதம், 20 சதவீதம், 10 சதவீதம் என்று தவணை முறையில்
அவர்கள் கொடுக்கிறபோது அதை விவசாயிகள் முறையாக
பயன்படுத்த முடியாமல் ஒட்டு மொத்தமாக அவர்கள் பெறு
கிற கரும்புக்கு விலை கொடுக்காத ஒரு சூழ்நிலையில் அல்லல்
பட்டுக்கொண்டு இருப்பதோடு குறுங்குளம் சர்க்கரை ஆலை
யில் அவர்கள் பதிந்திருக்கிற கரும்பு 2500 டன் ஒரு
நாளைக்குப் பிழிகிற சக்தி இருந்தாலும்கூட, 2 ஆண்டுக்கால
மாக குறுங்குளம் சர்க்கரை ஆலை நிர்வாகிகள் அந்த ஆலையை
ஏதோ பழுது பட்டிருக்கிறது போன்ற ஒரு சூழ்நிலையை
உருவாக்கி அந்தக் கரும்புகளை சக்தி ஷுகர்ஸுக்கு
அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இதை அந்தப் பகுதியிலே
இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள்—ஏதோ அந்த ஆலையை
நடத்துகிறவர்கள் சக்தி ஷுகர்ஸுக்கு அதிக விலைக்கு
மறைமுகமாக விற்று அவர்கள் லாபத்தை சேர்த்துக்கொள்
கிறார்கள் என்கிற ஒரு சந்தேகப் பார்வை அந்தப் பகுதியிலே
இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் எண்ணி அதைப்
பார்த்துக்கொண்டிருக்கக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாகி
யிருக்கிறது. இதை நான் எதற்காக குறிப்பிடுகிறேன் என்று
சொன்னால், இன்றைக்கு அரசு ஒரு குறிப்பிட்ட விலையைச்
சர்க்கரை உற்பத்தியாளர்களுக்கு அல்லது கரும்பு உற்பத்தி
யாளர்களுக்கு நிர்ணயம் செய்கிறபோது தனியார் நடத்து
கிற ஆலைகளில் இன்றைக்கு 450 ரூ. ஒரு டன்னுக்கு
வழங்கி அவர்களே வயல்களுக்கு வந்து வெட்டி
எடுத்துச் செல்லுகிற ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறபோது,
பிரைவேட் செக்டாரில் நடத்துகிற அந்த ஆலை
அதிபர்களுக்கு கட்டுப்படி ஆகிறபோது கூட்டுறவுத் துறை
யில் நடத்திக் கொண்டிருக்கிற தம்முடைய ஆலைகளுக்கு
அது ஏன் கட்டுப்படியாகவில்லை என்ற சந்தேகம்
விவசாயிகள் மத்தியிலே மிகக் கடுமையாக ஏற்பட்டிருக்
கிறது.

[திரு. சி. சுவாமிநாதன்] [1992 மார்ச் 26

அதற்காகத்தான் ஒன்று அந்த கரும்பினுடைய விலையை
உயர்த்திக் கொடுக்க வேண்டும் அல்லது குறுங்குளம் ஆலை
யில் பதிவு செய்திருக்கிற விவசாயிகளுடைய கரும்பைக்
குறுங்குளம் ஆலையிலேயே அரைப்பதற்குரிய நல்ல சூழ்
நிலையை உருவாக்கி கொடுக்க வேண்டும். இல்லையென்றால்
குறுங்குளம் கூட்டுறவு சர்க்கரை ஆலை பற்றிய சந்தே
கங்கள் கிராமப்புற விவசாயிகளுக்கு இன்றைக்கு கடுமை
யாக இருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்குக்
கொண்டு வருவதற்காக நான் குறிப்பிடுகிறேன்.

அதேபோல நம்முடைய கூட்டுறவு வங்கிகளைப் பற்றி
இரு வேறு கருத்துக்களை கிராமப்புறங்களில் இருக்கிற விவ
சாயிகள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ரிசர்வ் வங்கி
யைப் பொறுத்த வரையில் கூட்டுறவு வங்கிகளாக இருந்
தாலும் அல்லது மாநில நிலவள வங்கியாக இருந்தாலும்,
அவர்களுக்கு 6 சதவீதத்திற்கு—6 சதவீத வட்டி விகிதத்
திற்கு ரிசர்வ் வங்கி, மாநில நில வள வங்கிக்கோ அல்லது மாநில
கூட்டுறவு வங்கிக்கோ கொடுக்கிறார்கள். அதை மாநில நில
வள வங்கி மாவட்ட கூட்டுறவு வங்கிகளுக்கு 2 சதவீதம்
வட்டியை உயர்த்தி 8 சதவீதத்திற்குக் கொடுக்கிறார்கள்.

பிற்பகல் 12-15.

8 சதவிகிதம் வாங்கிய மாவட்ட கூட்டுறவு வங்கிகள்
கூட்டுறவு சொஸைட்டிகளுக்கு 10 சதவிகிதம் கொடுக்கிறார்
கள். அதை கிராமப்புறத்திலே இருக்கின்ற கூட்டுறவு
சொசைட்டிகள் 12 சதவீதத்துக்கு கொடுத்து இந்த மூன்று
அடுக்கு முறையால் இன்றைக்கு விவசாயிகள் ரிசர்வ் வங்கி
யிலிருந்து 6 சதவீதத்திற்கு வாங்குகின்ற வட்டியை 12 சத
விகிதத்திற்கு மேலே விதித்து, அபராத வட்டி, கூட்டு
வட்டி என்று சொல்லி, ஏறத்தாழ 18 சதவிகிதத்திற்கு மேல்
விவசாயிகள் மேல் வட்டியைச் சுமத்துகின்ற ஒரு சூழ்நிலை
இந்த அரசுக்குத் தேவையா என்பதை தயவு செய்து சிந்தித்துப்
பார்க்கவேண்டும். அந்த 3 அடுக்கு முறையை மாற்றி ரிசர்வ் வங்
கியிலிருந்து வாங்குகின்ற அந்தக் கடன் தொகையை நேரடியாக
மாவட்ட கூட்டுறவு வங்கிகளுக்கு மாற்றினால் குறைந்தபட்சம்
2 சதவிகிதமாவது வட்டியைக் குறைத்துக் கொடுக்கின்ற ஒரு
சூழ்நிலை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஏற்படும். அந்த
இரண்டு அடுக்கு முறையிலே அந்த விவசாயிகளுக்கு நாம் கடன்
கொடுப்போமானால் மற்றும் நிர்வாக நடைமுறையில் செலவு
களைச் சிக்கனப்படுத்தினால் குறைந்தது 7, 8, 9 சதவிகிதத்திற்கு
விவசாயிகளுக்கு நாம் கடன்களை கொடுக்க முடியும். இங்கே
இரண்டு தினங்களுக்கு முன்பு மரியாதைக்குரிய கூட்டுறவுத்
துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது குறிப்



1992 மார்ச் 26] [திரு. சி. சுவாமிநாதன்]

பிட்டுச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
பெருந்தன்மையோடு விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி செய்
வதைப் பற்றி நான் யோசிக்கிறேன் என்று சொன்னவுடன்,
கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஏறத்தாழ 1200 கோடி
ரூபாய் நிலுவையில் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். விவசாயி
களைப் பொறுத்தவரையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்கள் 1980-ம் ஆண்டிலிருந்து பல்வேறு கட்டங்களில்
விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி செய்து வட்டியை எல்லாம்
தள்ளுபடி செய்து அன்றைக்கு வாழ்ந்திருந்த விவசாயப் பெருங்
குடி மக்கள் புரட்சித் தலைவர் அவர்களால் வாழ்த்தப்பட்டு
விவசாயிகளும் வாழ்ந்தார்கள் என்பதை நாம் நினைவிலே
கொள்ள வேண்டும்.

இன்றைக்கு நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்று
சொன்னால், 1200 கோடி ரூபாய் வட்டியும், அசலுமாக
நிலுவையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிடு
கின்றபோது அதிலே விவசாயிகள் கடனாக வாங்கியது
அநேகமாக 400 கோடிக்கு மேல் இருக்காது. மீதம் இருக்கின்ற
800 கோடி ரூபாயும் வட்டி, அபராத வட்டி, மற்றும் கூடுதல்
வட்டியின் மூலமாக இன்றைக்கு அந்த விவசாயிகள் மேல்
சுமையாக ஏற்றி வைத்து இருக்கிறார்கள். விவசாயிகளைப்
பொறுத்தவரையில் 5 ஆண்டுகள் அல்லது 10 ஆண்டுகளுக்கு
ஒரு முறை இப்படி நிதிநிலை நெருக்கடி ஏற்படுகின்றபோது
அதைக் கருத்திலே கொண்டு நம்முடைய மரியாதைக்குரிய புரட்
சித் தலைவியார் அவர்களும் பெரும் உள்ளத்தோடு வட்டிச்
சலுகைகளை அறிவிப்பதற்கு நான் யோசிக்கிறேன் என்று
சொல்லியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் விவ
சாயிகளுக்கு எந்தச் சூழ்நிலையிலும் இந்த 1200 கோடி
ரூபாயைக் கட்டுவதற்குரிய சூழ்நிலை தமிழகத்திலே இல்லவே
இல்லை. நம்மைப் பொறுத்தவரையில் இன்றைக்கு பெருந்
தன்மையோடு விவசாயிகளுடைய கடன் எதுவாக இருந்
தாலும் வரி வசூலாக இருந்தாலும் அல்லது எந்தத் துறையில்
இருந்தாலும் அவர்களுடைய கடனுக்கான ஜப்தி நடவடிக்கை
எடுப்பதில்லை என்று கொள்கை ரீதியான முடிவினை நாம்
ஏற்றுக்கொண்டு இருக்கிறோம். அந்த வகையில் வருகின்ற
போது நிச்சயமாக இதிலே பேப்பரிலே தான் 1200 கோடி
என்று நாம் எழுதி வைத்திருக்க முடியுமே ஒழிய அவர்களிட
மிருந்து நிச்சயமாக உறுதியாக அந்தக் கடன்களைப் பெறு
வதற்குரிய சூழ்நிலை இல்லை. கொள்கை ரீதியாகவும் நாம்
அவர்களை துன்புறுத்தப் போவதும் இல்லை. எனவே இந்த
குறைந்தபட்சம், வட்டி, அபராத வட்டிகளை தமிழக விவ
சாயிகளுக்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவியார்
அவர்கள் தள்ளுபடி செய்தால் அன்றைக்கு புரட்சித் தலைவர்
அவர்களை வாழ்த்தினார்களே அதே போல இன்றைக்கும்

[திரு. சி. சுவாமிநாதன்] [1992 மார்ச் 26

அவர்கள் வாழ்த்த கடமைப்பட்டிருக்கிறார்கள். எனக்கு
முன்பு உரையாற்றிய அருமை நண்பர் மாண்புமிகு சிங்காரம்
அவர்கள் குறிப்பிடுகின்றபோது சொன்னார்கள். விவசாயி
களுக்கு உள்ளாட்சி வரி என்று 2—ரூபாயிலிருந்து 10 ரூபாயாக
நாம் வைத்திருக்கிறோம். அது 300 சதவிகிதம் என்று கூட
அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

பிற்பகல் 12-20

விவசாயிகளைப் பொறுத்தவரையில் நீங்கள் 300 சதவீதம்
போட்டாலும், 400 சதவீதம் போட்டாலும் இப்படி வரி
போட்டிருக்கிறீர்களே என்று திரு திரு என்று முழிப்பார்
களே ஒழிய, அவர்களுக்கு கோஷம் போடுகிற சக்தி இந்த
மண்ணில் இல்லை. இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு
புரட்சித் தலைவியார் அவர்கள் இந்த நாட்டிலே இருக்கின்ற
அலுவலர்கள் அவர்களுடைய வேலை நிமித்தம காரணமாக
அவர்களுடைய வசதியின்மை காரணமாக அவர்
களுக்கு 1/4 மணி நேரம் நீட்டித்து 10 மணிக்கு
அலுவலகத்திற்கு வருகிறோம் என்று எல்லோரும் ஒட்டு மொத்த
மாகக் குரல் எழுப்புகிறபோது அதைப் பரிவோடு நம்முடைய
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டு அவர்கள்
10 மணிக்கு வருவதற்கு அனுமதித்து இருக்கிறார்கள். அது
போன்ற ஒட்டுமொத்தமான குரல் விவசாயிகள் மத்தியில் எழுப்ப
முடியாத சூழ்நிலையில்தான் இருக்கிறார்கள். இன்றைக்கு
அவர்களுக்கு பிரதிநிதியாக சட்டமன்றப் பேரவை உறுப்பினர்
களாக, அமைச்சர் பெருமக்களாக, நாடாளுமன்ற உறுப்பினர்
களாக வந்திருக்கக்கூடிய நாம் அவர்களுக்கு நல்ல உள்ளத்
தோடு அதை எண்ணிப் பார்த்து அந்த வட்டி சலுகையைக்
கொடுப்பதற்கு முறையான நடவடிக்கை எடுக்குமாறு மிகுந்த
அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கிராமப்புறங்களில் அடி மட்டத்தில் வேலை
பார்த்துக் கொண்டிருக்கிற அங்கன்வாடிப் பணியாளர்களைப்
பற்றி ஒருசில கருத்துக்களை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்
கிறேன். அங்கன்வாடிப் பணியாளர்கள் இன்றைக்கு எஸ்.எஸ.
எல்.சி. பாஸ் செய்தவர்கள், பெயில் ஆனவர்கள் மறுபடிய
அத்தனைபேரும் இன்றைக்கு பொறுப்பில் இருக்கிறார்கள. அந்த
அங்கன்வாடிப் பணியாளர்களைக்கொண்டு மொத்தமாக நம்
முடைய மத்திய அரசினுடைய நிதி ஆதாரத்தோடு இன்றைக்கு
ஒருங்கிணைந்த குழந்தைகள் சத்துணவுத் திட்டம் முறையாக
நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அந்த அங்கன்வாடிப் பணியாளர்கள் தமிழகத்தைப் பொறுத்
தவரையில் ஏறத்தாழ 75 ஆயிரம் பேர் இன்றைக்கு தமிழகத்தில்
பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். கோடியில் உட்கார்ந்து



1992 மார்ச் 26] [திரு. சி. சுவாமிநாதன்]

கொண்டு அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்
கிறார்கள். மத்திய அரசு 1986 ஆம் ஆண்டு அங்கன்வாடிப்
பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதில் ஒரு நிர்ணயத்தை
செய்து இருக்கிறார்கள்.

Non—matriculates and Non—matrleulates with five years honcrary work -Rs. 225 and Rs. 250, Non—matriculateds with 10 years honorary work-Rs. 275: Matriculates -Rs. 275 Matriculates witu five years honorary work-Rs. 300 Matriculates with 10 years honcrary wcrk Rs. 325

என்றும், ஹெல்ப்பர்களுக்கு 110 ரூபாய் என்றும் அன்றைக்கு ஒரு
விதி நிர்ணயம் செய்து அவர்கள் உத்தரவும் தாக்கீது செய்து
இருக்கிறார்கள் தமிழக அரசுக்கு. ஆனால் இன்றைக்கு அங்
கன்வாடிப் பணியாளர்களைப் பொறுத்தவரையில் 285 ரூபாய்
தான் பெற்றுக்கொண்டு இருப்பதாக அவர்கள் இங்கே கடிதத்
தின் மூலம் அறிவித்து இருக்கிறார்கள். அவர்களுடைய ஒரு
கூட்டத்திற்குச் சென்று அவர்களுடைய கோரிக்கைகளை கேட்ப
தற்கு வாய்ப்பு ஏற்பட்டபோது அவர்கள் உள்ளபடியே மனம்
நொந்து போய் அந்தச் சின்ன சின்ன குழந்தைகளை வளர்ப்பதற்
கும், அவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதற்கும் அவர்கள்
காலை 10.30 மணியிலிருந்து ஏறத்தாழ சாயங்காலம் 4-30 மணி
வரையில் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு ஸ்பெசல் அல
வன்ஸ் என்று சொல்லி 10 ரூபாய், 5 ரூபாய் என்று அதையும் இன்
றைக்கு மத்திய அரசு நிர்ணயம் செய்திருக்கிறது. அந்த நிதி
ஆதாரத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய அரசுக்கு எந்தவித
மான ஒரு இழப்பும் இல்லை. அப்படி இருக்கின்றபோது மத்திய
அரசு வழங்குகின்ற அந்த் நிதி ஆதாரத்தை வைத்து அவர்கள்
சொல்லுகிறபடி அதிகபட்சம் 325 ரூபாய் கொடுப்பதற்கும், அவர்
களுக்குரிய ஸ்பெசல் அலவன்ஸ் 5 ரூபாய், 10 ரூபாய் கொடுப்ப
தற்கும் இங்கே நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவியார்
அவர்களுடைய ஆட்சியில் முறையாக அவர்களுக்கு 325 ரூபாய்
கொடுப்பதற்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் முறையான
நடவடிக்கை எடுக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில்
கந்தர்வக்கோட்டை ஒன்றியத்திலுள்ள புதுநகர் மற்றும் கோமா
புரம் ஆகிய 2 கிராமங்களில் உயர்நிலைப்பள்ளிகள் ஆரம்பிக்கப்
பட்டு அதற்கு எந்தவிதமான ஆஸ்டல் வசதியும் இல்லாமல்
அங்கே படிக்கிற மாணவர்கள் மிகவும் அல்லல்படுகிறார்கள்.
ஆகவே, அந்த இரண்டு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் ஒரு பிற்
பட்டோர் நல விடுதி ஆரம்பிப்பதற்கு ஆவன செய்யுமாறு உங்
களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி. சுவாமிநாதன்] [1992 மார்ச் 26

பிற்பகல் 12-25 மணி

அதேபோல புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் புத்தாம்பூர் ஊராட்சியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு ஏற்கெனவே வெட்டுத் தீர்மானங்களும் மற்றும் பல்வேறு கோரிக்கைகளும் இந்த அவையிலே நான் வைத்து இருக்கிறேன். அதையும் நிறைவேற்றித் தருமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொண்டு, மொத்தத்திலே இந்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கையை வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1991—92 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகள் மீது நடைபெற்ற விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் 7 பேர்கள் கலந்துகொண்டு இங்கு சீரிய உரைகளை ஆற்றி இருக்கின்றார்கள். தங்கள் தங்கள் தொகுதிகளைப் பற்றிய பிரச்சினைகளையும், பொதுவாக அரசு மேற்கொள்ள வேண்டிய பிரச்சினைகள் பற்றியும், சிலபல குறைபாடுகளையும் சுட்டிக்காட்டியுள்ளார்கள். குறைபாடுகளெல்லாம் நீக்கப்படவேண்டுமென்பதையும் இங்கே தம்முடைய உரைகளிலே சுட்டிக்காட்டி இருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் நேற்று தன்னுடைய மன உணர்வை வெளிப்படுத்த வாய்ப்பு இல்லை என்று கருதி, இந்தத் துணை மதிப்பீடுகளுடைய நிழலிலே வந்து புகுந்துகொண்டு, தன்னுடைய உணர்வை வெளிப்படுத்துகின்ற அளவுக்கு, அவர் தன்னுடைய, கருத்துக்களை வெளிப்படுத்தியது மட்டுமல்லாமல், இன்றைக்கு தமிழகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய நிர்வாகத் திறமையைப் பற்றியும் அவர்களுடைய சீரிய தலைமையின்கீழ் இயங்குகின்ற இந்த அரசு எப்படிப்பட்ட பணிகளை ஆற்றி வருகிறது என்பதைப் பற்றியும் பாராட்டுரைகள் நல்கி, சிறப்புரையாக ஆற்றி இருக்கிறார்கள். பொதுவாக அனைத்து உறுப்பினர்களும் இந்த இறுதி நிதிநிலை அறிக்கையினுடைய முக்கியமான குறிக்கோளையும் நோக்கத்தையும் அறிந்துகொண்டு இதனை வரவேற்று, பாராட்டியிருப்பதற்காக அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே 62 கோரிக்கைகளின்மீது 83 வெட்டுத் தீர்மானங்களை அளித்ததன் வாயிலாகவும் மாண்புமிகு உறுப்பினர்கள் தொகுதிப் பிரச்சினைகளைப் பற்றியும், பொதுப் பிரச்சினைகளைப் பற்றியும் அரசாங்கத்தினுடைய கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவை கிட்டத்தட்ட எல்லா துறைகளைப் பற்றிய கோரிக்கைகளாகவும், எல்லா துறைகளைப் பற்றிய பிரச்சினைகளாகவும் இருக்கின்ற காரணத்தினால்,



1992 மார்ச் 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அவை அனைத்துக்கும் சேர்த்து நான் பதிலுரை இப்போது தரு
வது என்பது அல்லது 1.00 மணிக்குள்ளாக தந்து முடிப்பது என்
பது இயலாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள்
அத்தனைபேரும் நன்கு உணர்வார்கள். ஆனாலும்கூட வெட்
டுத் தீர்மானங்களின் மூலமாக அனைவரும் எடுத்துத் தெரிவித்து
இருக்கின்ற பொதுப் பிரச்சினைகள், குறிப்பிட்ட பிரச்சினைகள்
ஆகியவை பற்றி அந்தந்தத் துறையைச் சார்ந்தவர்கள் உரிய
நடவடிக்கையை முறைப்படி மேற்கொள்வார்கள் என்பதை
மட்டும் இந்த வாய்ப்பிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.
இறுதித் துணை மதிப்பீடுகள் என்கிறபோது அந்த அந்த ஆண்
டுக்கு வரவு செலவுத் திட்டங்களை நாம் தீட்டுகின்றபோது ஒதுக்
கீடு செய்யாத இனங்களுக்கு ஒதுக்கீடு செய்வதை நாம் மேற்
கொள்கிறோம் என்பதாகும். ஆண்டுக்காண்டு செய்து வருகின்ற
பணிகளைச் சுட்டிக்காட்டி, புதிய பணிகள், மேம்பாட்டு திட்டங்
கள், வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவைகளைப் பற்றியும்
குறிப்பிட்டுக் காட்டுவது துணை வரவு–செலவுத் திட்டத்திலே
மேற்கொள்ளப்படுகின்ற ஒன்றாக இருக்கிறது. சிலபல புதிய
பணிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்
படுகின்றபொழுது எதிர்பாராத செலவினங்களிலிருந்து சில
வற்றைச் செய்கின்றோம், எதிர்பாராத வகையில் வெள்ளம்
ஏற்பட்டுவிடுமேயானால் அதற்குப் பரிகாரம் தேடவேண்டு
மென்பதற்கு செலவு ஒதுக்கீடு செய்யவேண்டிய அவசியமும்,
வறட்சி நிலை ஏற்பட்டுவிடுமேயானால் அந்த வறட்சி நிலையைப்
போக்க புதிய ஒதுக்கீடு செய்யவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.
குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்ற
பொழுது விரைவான, தீவிரமான நடவடிக்கைகள் எடுப்பதற்
காக நிதி ஒதுக்கீடுகள் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.
இவற்றையெல்லாம் புதிய இனங்களாகக் கருதி நிதி ஒதுக்கீடு
செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. ஏற்கெனவே ஒதுக்
கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் போதுமானவையல்ல என்று தெரி
கின்ற நிலையிலே அவற்றைக் கூடுதலாக அளிக்கவேண்டிய
பொறுப்பும் அரசுக்கு இருப்பதன் காரணமாக இந்த துணை
மதிப்பீடுகளில் அவைகளெல்லாம் சேருகின்றன.

பிற்பகல் 12.30

குறிப்பாக இந்த ஆண்டிலே செய்து தீர வேண்டிய பணி
களுக்காக ஏற்கனவே செலவழிக்கப்பட்ட தொகைகளையும்,
இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக அந்தப் பணிகளை முடிப்பதற்குத்
தேவைப்படுகின்ற தொகைகளையும் உள்ளடக்கிய வகையிலே
தான், இந்தத் துணை மதிப்பீடு கோரிக்கைகள் இந்த அவையின்
முன் வைக்கப்பட்டிருக்கின்றன.

அது மட்டுமல்லாமல், துணை மதிப்பீடுகளினுடைய அளவு
ஆண்டுக்காண்டு உயர்ந்து வருகிறது என்பது கவலைக்குரிய
ஒன்றுதான். ஏனென்றால், துணை மதிப்பீடுகள் கூடுமான

வரையில் வரவு-செலவுத் திட்டத்திலேயே ஒரு ஆண்டுக்கான
வரவு இனங்களையும், செலவு இனங்களையும் குறித்து ஒரு
அரசு சிறப்பாக அமைந்து விடுமேயானால், அதிகமான இடர்ப்
பாடுகள் ஏற்படா. ஆனால், துணை மதிப்பீடுகளின் மூலமாக
புதிய புதிய இனங்களை எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம்
ஏற்படுகின்றபொழுதும், செலவினங்களை உயர்த்தி, செல
வழிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றபொழுது, நாம் கூடு
தலாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.
அப்பொழுது பற்றாக்குறை நிலையும் நமக்கு வளர்கிறது. ஆக,
இருக்கின்ற நிதி வசதியை வைத்து ஈடு கட்ட முடியாத ஒரு
சூழ்நிலையும் அரசுக்கு ஏற்படுகிறது. கூடுமானவரையில்
துணை மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்படுகின்ற தன்மைகள்
குறைகின்ற ஒரு நிலைமை ஏற்பட்டால்தான் நல்லது. அதற்
கான வகையிலே அரசு கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது.
என்றாலும்கூட, ஆண்டுக்காண்டு அது வளர்ந்து கொண்டு
தான் வருகிறது என்றாலும், அதனை ஓரளவுக்குக் கட்டுப்படுத்
தவும் நாம் முயற்சி செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

1987—88–இல் பொதுவாக இந்தத் துணை மதிப்பீடுகளிலே
மூவாயிரத்துச் சில்லறை என்று நாம் போட்டிருந்தாலும்கூட,
மொத்தத்திலே எல்லாக் கணக்குகளையும் இந்த மன்றத்தின்
முன் வைத்து, மன்றம் அறிகின்ற அளவிற்கு, மன்றத்தினுடைய
முழு ஒப்புதலையும் பெற வேண்டும் என்பதற்காகத்தான்,
எல்லாக் கணக்குகளும் தரப்பட்டிருக்கின்றன. இதிலே,
மூவாயிரத்துச் சில்லறை கோடி ரூபாய் வருகின்ற அளவிற்கு
வந்திருப்பதற்குக் காரணம், கொடுக்கல் வாங்கல் என்ற
முறையில் சரிக்கட்டுகின்ற கணக்குகளையும் இதிலே நாம்
சேர்த்திருக்கிறோம். இந்தச்சரிக் கட்டுகின்ற கணக்குகளெல்
லாம் வந்து சேர்ந்திருப்பதன் காரணமாக, மூவாயிரத்துச்
சில்லறை என்று ஆகின்றது. ஆனால், அவற்றிலே பலவற்றை
நாம் பெற்று, அதைத் திருப்பிச் செலுத்துகின்ற சூழ்நிலை
ஏற்படுகின்றபொழுது இந்த அவை மறுபடியும் புதிதாக நிதி
ஒதுக்கீடு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது. அது சரிக்
கட்டுதல் கணக்குகளாக இருக்கும். என்றாலும்கூட, இந்தச்
சரிக்கட்டுகிற கணக்குகளெல்லாம் இந்தப் பேரவையின் முன்
வைத்து பேரவை உறுப்பினர்களுடைய முழு ஆதரவையும் பெற
வேண்டும் என்பதற்காகத்தான் அவைகள் கணக்கிலே காணப்படு
கின்றன.

1987—88 இல் மொத்தமாக 2 துணை மதிப்பீடுகளின் மூல
மாக 919 கோடி 32 இலட்சம் ரூபாய் கேட்கப்பட்டது.
1988–89 இல் ரூ. 1,449 கோடி 82 இலட்சம் கேட்கப்பட்டது.
1989–90 இல் ரூ. 2,196 கோடியே 34 இலட்சம் கேட்கப்
பட்டது 1990–91 இல் ரூ. 1,470 கோடியே 63 இலட்சம்
கேட்கப்பட்டது. 1991—92 இல் ரூ. 3,640 கோடியே 44



இலட்சம் கேட்கப்பட்டிருக்கிறது என்றாலும்கூட நான் முதலிலே
சொல்லியபடி நாம் ரிசர்வ் வங்கியிடத்திலே இருந்து கடன்
வாங்குவதும், மறுபடியும் திருப்பிச் செலுத்துவதும்,
அது போன்று மின்சாரத் துறையிலே நாம் அவர்களுக்கு
உதவி செய்வதும், அவர்கள் தர வேண்டிய வட்டி
போன்றவைகளிலேயிருந்து ஈடுகட்டுகின்ற வகையிலே
பலவற்றை நாம் நீக்கி விட்டுப் பார்ப்போமேயானால் மற்ற
மற்ற ஆண்டுகளிலே இருக்கின்ற அதே துணை மதிப்பீடுகளிலே
எவ்வளவு தொகை வருகிறதோ அவ்வளவுதான் இந்த ஆண்டி
லும் கிட்டத்தட்ட, வருகிறது என்று நாம் கொள்ளலாம்.

1987–88-க்கு இறுதியாக புதிய இனங்கள் என்ற வகையிலே
மட்டும் கணக்குகள் சரிக்கட்டுகின்ற வகையிலே வராமல்,
புதிய இனங்கள் என்ற முறையிலே மட்டும் வைத்துப் பார்ப்போ
மேயானால் ரூ. 665 கோடியே 53 இலட்சம். 1987–88 துணை
மதிப்பீடுகள் மூலம் ஏற்பட்டது ஆக, இரண்டு துணை மதிப்
பீடுகள் அந்த ஆண்டு கொடுக்கப்பட்டன.

1988–89 இல் இரண்டு துணை மதிப்பீடுகள் 609 கோடியே
99 இலட்சம் ரூபாய்; 1989–90 இல் 2 துணை மதிப்பீடுகள்;
அதன் மூலம் 1,046 கோடியே 88 இலட்சம் ரூபாய்; 1990–91
இல் 3 துணை மதிப்பீடுகள் 946 கோடியே 7 இலட்சம்
இந்த ஆண்டு, 1991–92 இல் 2 துணை மதிப்பீடுகள்தான் போட்
டிருக்கிறோம். ஏற்கெனவே ரூ. 31 கோடியே 58 இலட்சத்
திற்கு முதல் துணை மதிப்பீட்டின் மூலம் இந்த அவையினுடைய
அனுமதி பெறப்பட்டது. இப்பொழுது இருக்கின்ற சரிக்கட்டு
கின்ற நிலையெல்லாம் போய், மொத்தத்திலே பார்ப்போமே
யானால். ரூ. 624 கோடியே 27 இலட்சத்திற்குத்தான் புதிய
இனங்கள் என்ற முறையிலே நாம் இந்தத் துணை மதிப்பீடுகளின்
மூலம் கேட்கிறோம். ஆனால், கணக்கு விவரங்களைப் பார்க்
கிறபோது. பல பேருக்கு பயமாகக்கூட இருக்கும். துணை மதிப்
பீட்டிலே மூவாயிரத்துச் சில்லறை கோடி கேட்டிருக்கிறீர்கள்
என்று பல பேர் எண்ணக் கூடும். ஆகவேதான். இந்த விளக்
கத்தைச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. சரிக்
கட்டப்பட்ட—அந்தந்தத், துறைகளோடு சரிக் கட்டப்பட்டத்
தொகைகளைச் சேர்த்து சொன்னதன் காரணமாகத்தான்,
அதனுடைய தொகை விரிவடைந்து பெருகியிருக்கிறது. இதனை
மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்
பதற்காகத்தான் இந்த விவரங்களை நான் குறிப்பிடுகிறேன்.

பிற்பகல் 12–35

மாண்புமிகு உறுப்பினர் திரு மு. சுந்தரதாஸ், அவர்கள் பேசுகிற
போது, இங்கே மின்சார விநியோகம் பற்றிச் சொன்னார்கள்.
பல்வேறு, துறைகளைப் பற்றிய கருத்துக்களையெல்லாம்;

மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தந்தத் துறைகளிலே செய்ய
வேண்டிய சீர்திருத்தங்களைப் பற்றியும், மேற்கொள்ள வேண்டிய
பணிகள் பற்றியும். இங்கே கோடிட்டுக் குறிப்பிட்டுக் காட்டி
னார்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு சுந்தரதாஸ் அவர்கள்
பேசுகிறபோது மின்சாரம் இலவசமாக அளிப்பதன் மூலமாக
ஏற்படுகிற சில பல தவறுகளைச் சுட்டிக் காட்டினார்கள் —அந்தத்
தவறுகள், அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வராமல் இல்லை.
நான் வரவு-செலவுத் திட்டத்தினுடைய பதிலுரை கூறுகிற
போது அவைபற்றிக் குறிப்பிட்டுச் சொன்னேன். மின்சாரத்
துறையைப் பொறுத்த வரையில். 706 கோடி ரூபாய் மொத்
தத்தில் ஈடுகட்ட வேண்டிய அளவுக்கு அரசுக்கு இழப்பு ஏற்படு
கிறது என்று நான் குறிப்பிட்டுக் காட்டினேன் மாண்புமிகு
உறுப்பினர் திரு சுந்தரதாஸ் அவர்கள் எடுத்துச் சொன்னது
மாதிரி, இதிலே இலவசமாகக் கொடுக்கப்படுகிற— சிலபல
இடங்களுக்குக் கொடுக்கப்படுவதை, துஷ்பிரயோகம் செய்
கிறார்கள் என்ற குறைபாடும் ஆங்காங்கே இருந்துகொண்டிருக்
கிறது. கிட்டத்தட்ட 10 லட்சம் பேர்களுக்கு. குடிசை வாழ்
மக்களுக்கு இலவசமாக மின்சாரத்தை அளிக்கிறோம் நல்லெண்
ணத்தின் அடிப்படையிலே, அவர்களுடைய வாழ்வு பொலிவாக
விளங்க வேண்டும் என்பதற்காகத்தான் தரப்பட்டது. அவர்கள்
குடிசைகளிலே ஒரு விளக்கு கொடுக்கலாம் என்ற அளவுக்குத்
தான் நாம் தந்தோம் என்றாலும் கூட. அதற்கு சுவிட்ச்
மற்றவையெல்லாம் போட்டு, ஒரு விளக்கு தந்திருக்கிறோம் என்
றாலும்கூட, இது அரசாங்கத்தினுடைய விளக்கு என்று கருதி.
அதை விடிய விடிய எரிய வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.
அதை அணைப்பது என்ற நோக்கம் சிறிதும் இல்லாமல் எரிய
விடுகிறார்கள். யார் வீட்டு மின்சாரமோ என்கிற எண்ணம்
ஏற்படுவது மட்டுமல்லாமல் அப்படிப்பட்ட குடிசையிலிருந்து
மின்சாரத்தைத் திருடி, பக்கத்திலே சிலபல தொழிற்சாலை
களுக்குப் பயன்படுத்தி—ஏனென்றால் அவற்றில் மீட்டர் வைக்
காத காரணத்தினால்—துஷ்பிரயோகம் நடக்கிறது. அவைகள்
எல்லாம் தடுக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். இதிலே
மிச்சப்படுத்துகிற தொகை, எதற்கு தேவைப்படுகிறது என்று
சொன்னால், கூடுமானவரை அந்த வகையிலே பார்க்கிற
போது, ஏழை எளியவர்கள், முடியாதவர்கள், தங்களுடைய
விவசாயத்தை மேற்கொண்டு நடத்துவதற்குத் துணையாக
இருக்கக்கூடிய அளவிலே இருக்க வேண்டும் என்பது தான்.
இப்படிப் பட்டவர்களுக்கு மின்சாரத்தை நாம்
சலுகையாகத் தருவதும், அவர்களை ஊக்கப்படுத்துவதாகவும்
இருக்க வேண்டும். இது இலவசம் என்பதற்கு மட்டுமல்லாமல்
ஊக்கம் தருகிற ஒன்றாக அமைய வேண்டும் அந்த நிலையைப்
பயன்படுத்தி. அவர்கள் மேலும் மேலும் வளர வேண்டுமென்ற
நோக்கத்தின் அடிப்படையில்தான். ஏழை. எளியவர்கள், முடி
யாதவர்கள். இதை இலவசமாக நாம் தராவிட்டால், அவர்கள்
தாங்க மாட்டார்கள்; தங்கள் தொழிலைச் செய்ய மாட்டார்





கள்; முடியாது என்ற நினைப்பு உள்ளவர்களுக்கு— தர வேண்
டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் சொன்னார்கள்.
மாண்புமிகு உறுப்பினர் சுந்தரதாஸ் அவர்களும். குறிப்பிட்
டார்கள். வசதி படைத்தவர்கள், தாங்கக் கூடியவர்கள், இது
ஒரு உற்பத்திப் பொருளாக இருக்கிற காரணத்தினால், ஒரு
யூனிட் ரூ 1.40 செலவழித்துத்தான் இந்தப் பொருள்—
மின்சாரம்— உற்பத்தியாக்கப்படுகிறது என்று எண்ணுகிறபோது,
வசதி படைத்தவர்களிடத்திலே கட்டணம் வசூலிப்பதில் தவறு
இல்லை என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். வேறுபல உறுப்
பினர்களும் இதை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள் அந்த
வகையிலே, அரசும் சிந்தித்துக் கொண்டிருக்கிறது. அதற்கான
முயற்சிகள் எடுக்கிறபோது, இந்த 706 கோடி ரூபாய் இழப்பில
நாம் எவ்வளவுக்கெவ்வளவு மிச்சப்படுத்துகிறோமோ, அவ்வள
வுக்கவ்வளவான தொகைகளை, நாம் எதிர்பார்க்கிற நல்ல
திட்டங்களுக்கு, வளர்ச்சித் திட்டங்களுக்கு, மாண்புமிகு உறுப்
பினர்கள் கூறுகிற பல்வேறு திட்டங்களுக்கு செலவழிக்க முடியும்
குறிப்பாகக் குடிநீர்ப் பிரச்சினை போன்றவைகளுக்கு நாம்
கூடுதலாக ஒதுக்கீடு செய்வதற்கு வசதி ஏற்படும் அதை மாண்பு
மிகு உறுப்பினர்களும் இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கிருஷ்ணா குடிநீர் திட்டத்தைப் பற்றியும் அவர்கள் குறிப்
பிட்டார்கள் அதை, இடையிலே ஒரு தொய்வு ஏற்பட்ட
நிலையிலிருந்து மாற்றி, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர்
புரட்சித் தலைவி அவர்கள். ஆந்திர முதலமைச்சர் அவர்களோடு
கலந்து பேசி, இந்தப் பிரச்சினையை ஓரளவுக்குக் கொண்டுவந்து.
1995 ஆவது ஆண்டுக்குள்ளாக சென்னை எதிர்பார்க்கிற
அத்தகைய குடிநீரைக் கொண்டு வந்து சேர்க்க முடியும். சென்
னைக்கு மட்டுமல்லாமல். சென்னையைச் சுற்றியிருக்கிற சுற்றுச்
சூழல்களிலேயுள்ள தொழில் வளர்ச்சிக்குப் பயன்படுத்துகிற
வகையிலேயும். குடிநீரைப் பெறுவதற்கான வசதிகளை ஏற்
படுத்த முடியும் என்ற முடிவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது
என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

அதேபோல், பல்வேறு உறுப்பினர்கள் குடிநீர்ப் பிரச்சி
னையைப் பற்றி எடுத்துப் பேசினார்கள். குடிநீர்ப் பிரச்சினையை
போக்க வேண்டும் என்பதிலே இந்த அரசு அதிக அக்கறை
கொண்டு, ஆர்வம் காட்டி. அதற்கான திட்டங்களைத் தீட்டி.
அவற்றை உடனுக்குடன் மேற்கொள்ள வேண்டுமென்று முயற்சி
களை மேற்கொண்டு வருகிறது. இந்த ஆண்டு எதிர்பார்க்கிற
பின்னாலே வருகிற விளைவுகளை முன்கூட்டியே, அறிந்து, அதற்
கேற்றபடி. நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றுதான்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்
கள் அத்தனைப் பேர்களையும் கலந்து அவர்களுடைய யோசனை

களையும் கேட்டு, ஆங்காங்கே குடிநீர் வாய்ப்பு வசதிகளைப் பெருக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்படி கூறியிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-40.

அண்மையிலே ரூ. 9 கோடியைக் குடிநீர்ப் பிரச்சினையை ஆங்காங்கு தீர்ப்பதற்கு ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அவ்வப்பொழுது ஒதுக்கிக் கொண்டும் வருகிறோம். எல்லாவற்றையும் விட, மிக முக்கியமாகக் கருதப்பட வேண்டியது வேறு பல திட்டங்களை நிறைவேற்றாமல் நாம் நிறுத்தி வைத்தாலும் கூட, குடிநீர்ப் பிரச்சினையைக் கட்டாயம் நிறைவேற்றித் தீர வேண்டும் என்கிற நோக்கத்தின் அடிப்படையிலேதான் ஆங்காங்கு தேவைப்படுகின்ற அளவுக்கு ஆழ்துளைக் கிணறுகள் போடப்படவும், ஆங்காங்கு குடிநீர் வசதிகளைப் பகிர்ந்து தரவும், ஒரு நாள் விட்டு ஒருநாள் தருகின்ற நீரைப் பகிர்ந்து தருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவும் ஆன தன்மைகளை மேற்கொள்ளலாம் என்று எல்லோருக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கிறது. என்பதையும் இந்த வாய்ப்பிலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதே மாதிரி, மதுரையைப் பொறுத்த வரையில் குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கிற தன்மைகளை மாண்புமிகு உறுப்பினர் திரு. அமர்நாத் அவர்கள் குறிப்பிட்டார்கள். மதுரையிலே உள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஒரு தனித் திட்டம் வகுக்கப்பட்டு அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். ஏனென்றால், சென்னைக்கு அடுத்தபடியான பெரிய நகரமாக அது இருப்பதன் காரணமாகவும், அதனுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சிலபல வழி முறைகளை மேற்கொண்டு, குடிநீர் ஆதாயம் கிடைக்கின்ற வாய்ப்புகளை நாம் காண வேண்டியிருக்கிறது. அந்த நிலைமைகள் சீர்படுகின்றபோது, மதுரையினுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதை நான் குறிப்பிட்டுக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல, கொடைக்கானலில் குடிநீர்ப் பிரச்சினை இருந்து வருகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியவீரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். சுற்றுலாத் தலங்களைப் பொறுத்த வரையில், அங்கு வருகின்ற மக்களுக்கு எந்தவொரு இடர்பாடும் ஏற்படக் கூடாது என்று கருதித்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடைக்கானல், ஊட்டி, போன்ற இடங்களுக்கும், வேறு பல மலை வாசஸ்தலங்களுக்கும் வருகின்றவர்களுக்கு எவ்விதக் கேடும் ஏற்படக் கூடாது என்பதற்காக குடிநீர்ப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் தந்து அந்தக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்ற திட்டங்களைத் தீட்டி இரு-



கிறார்கள் அந்த வகையில், கொடைக்கானலைப் பொறுத்த வரையிலும் மேற்கொள்ளப்பட விருக்கிற அந்தத் திட்டம் விரைவிலே முடியும் என்று கருதுகிறேன். குடிநீரைக் கொண்டு வருவதற்கான வழிகளிலே சில பல இடைஞ்சல்கள் எல்லாம் இருக்கின்றன அதை ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து கொண்டு வருவதற்கான இடத்தில் காட்டிலாக இடம் இருக்கிறது காட்டிலாகா நிலத்தைப் பெற்று அதன் வழியாக நாம் குழாய்களைக் கொண்டு வருவதற்கான அவசியம் ஏற்படுகின்ற காலத்தில் அதில் அவ்வளவு எளிதாக மத்திய அரசு அனுமதி அளிக்காததன் காரணத்தாலும் கால தாமதம் ஏற்படுவதன் காரணத்தாலும் நாம் எண்ணியபடி குடிநீரைக் கொண்டு வந்து சேர்க்க முடியாத இடர்பாடு கொண்டிருக்கிறோம். ஆனால் அதை வற்புறுத்தி அந்த இடத்திலே குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்த அளவுக்காவது குழாய்களைப் பதித்துக் கொண்டு வருவதற்கான அளவுக்காவது நமக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்பதைத்தான் மத்திய அரசை நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்,

உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் நடத்துவது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி, பழனிசாமி அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடக்க வேண்டுமென்பதும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்து அந்த உள்ளாட்சி மன்றங்களையெல்லாம் கவனிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்பதும் தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய முக்கிய நோக்கம் ஆகும். அவர் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே எவ்வளவுக்கெவ்வளவு விரைவிலே இந்தத் தேர்தலை நடத்த வேண்டுமோ அவ்வளவுக்கவ்வளவு விரைவிலே நடத்த வேண்டுமென்றுதான் எண்ணினார்கள். ஆங்காங்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், ஊராட்சி மன்றங்கள் ஊராட்சி ஒன்றியங்கள். நகராட்சி மன்றங்கள் மாநகராட்சி மன்றங்கள் ஆகியவற்றில் வீற்றிருப்பார்களானால் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டிய பிரச்சினைகள் எளிதாக்கப்படக் கூடும். ஆங்காங்கு பொதுமக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கிற அளவுக்கு பொதுமக்களுடைய பிரதிநிதிகளாக இருப்பவர்கள் தீர்ப்பதற்கு வசதி வாய்ப்பு ஏற்படும் என்று கருதித்தான். எவ்வளவுக்கெவ்வளவு விரைவிலே கொண்டு வர வேண்டுமென்று எண்ணுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு விரைவில் கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதிலே தகராறு எங்கே வந்தது என்று சொன்னால் இட ஒதுக்கிடு செய்கிற வகையிலே பெண்களுக்கு இவ்வளவு இடம் ஆதி திராவிடர்களுக்கு இவ்வளவு இடம், அவர்களுக்கு என்று தனித் தொகுதியா அல்ல மொத்தத்திலே ஒன்றா அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பிறகு அவர்களுக்கு அதை தருவதா என்று பல பிரச்சினைகள் இருக்கின்றபோது உயர் நீதிமன்றம் உச்சநீதிமன்றம் என்று சில பேர் சென்று வழக்காடியதன் காரணமா

நிறுத்தி வைக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. நமது ஆட்சி பொறுப்பு ஏற்றுக் கொண்டவுடனேயே சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டக் கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே ஆரம்பிப்பதற்கு ஒரு நான்கு நாட்களுக்கு முன்னாலயே இந்தத் தேர்தலை நடத்தி விடலாமா என்று கூட ஒரு நிகழ்ச்சி நிரல் வகுக்கப்பட்டது. அது முடியாததன் காரணமாகத்தான் தள்ளிப் போடப்பட்டது. எவ்வளவுக்கெவ்வளவு விரைவிலே நடத்த வேண்டுமோ அவ்வளவுக்கவ்வளவு நடத்துவதற்காகத்தான் அதற்கேற்றபடி மக்கள் எல்லோரும் ஒப்புக் கொள்கிறபடி அந்தச் சட்டத்திலே திருத்தங்கள் செய்து கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருந்துகொண்டு வருகிறது.

பிற்பகல் 12-45

அதே மாதிரி மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்கள் உள்ளாட்சி வரியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். கூடுதல் வரி போட்டிருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். கூடுதல் வரி போட்டிருப்பது என்பது இந்த அரசாங்கத்தினுடைய பற்றாக் குறையை நீக்குவதற்காகப் போடவில்லை. இது அரசாங்கத்துக் கும் வரவில்லை. 1972 ஆம் ஆண்டுக்குப் பிறகு அந்த வரியிலே ஒரு மாற்றமும் செய்யப்படவில்லை. தொடர்ந்து எந்த ஒரு மாற்றமும் செய்யப்படாமலே இருக்கிறது. 20 ஆண்டு காலமாக அந்தத் துறையின் மூலமாக பெறவேண்டிய வரி யினங்கள் வளரவில்லை. இந்த ஊராட்சி மன்றங்கள் 5 ரூபா யிலிருந்து 10 ரூபாய் வரை வரியை ஏற்றிக் கொள்ளலாம் என்று வாய்ப்புத் தந்திருக்கிறோம். அந்தந்த ஊராட்சி மன்றங்கள் ஊராட்சி ஒன்றியங்கள் கூட 5 ரூபாயோடு நிறுத்தினாலும் நிறுத்தட்டும் அல்லது 6 ரூபாய் வரையிலே போனாலும் போகட் டும். 10 ரூபாய் வரை போகலாம். 10 ரூபாய்க்கு மேலே போகக் கூடாது. குறைந்தது 5 ரூபாய் இருக்க வேண்டும் என்று சொல்லி யிருக்கிறோம். ஏற்கெனவே ரூ. $2\frac{1}{2}$ இருந்தது. அதை ரூ. 5 ஆக ஆக்கியிருக்கிறோம், ஒருபங்குதான் கூடுதலாகக் கேட் கிறோம். அப்படி கேட்கிறது எதற்காகப் பயன்படுகிறது என் றால் ஆங்காங்கு நடைபெறுகின்ற ஊராட்சி மன்றங்கள் ஒழுங் காக நடந்த ஊராட்சி ஒன்றியங்களை ஒழுங்காக நடத்த பல ஊராட்சி மன்றங்கள் ஒன்றியங்கள் இவைகளிலே தெரு விளக்குகள் போடப் பயன்படுகிறது. இப்பொழுது மின்சாரத் தொகை கட்ட முடியவில்லை. பல இடங்களிலே மின்சாரத் துறையினர் சட்டப்படி, விதிப்படி மின்சார இணைப்பை துண்டிக்க வேண்டிய அவசியத்திலே அமைந்து விடுகிறது. சாலை வசதிகளை சரியாகப் பராமரிக்க முடியவில்லை. நிர்வாக செலவுகளையும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பல நகராட்சி மன்றங்கள் பல ஊராட்சி ஒன்றியங்கள், பல ஊராட்சி மன் றங்கள் எல்லாம் அவதிப்படுகின்ற காரணத்தினாலேயே அவர்



களுடைய நிதி ஆதாரத்தை பெருக்குவதற்கும் அவர்களுக்கு மானியம் அளிப்பதற்கும் தனித் தனி முயற்சிகளை அரசு மேற் கொண்டிருந்தாலும் ஆங்காங்கே இருக்கின்ற பகுதிகளுக்கு நல்ல ஊக்கமும் ஆக்கமும் தரவேண்டும் என்றும் நல்ல வசதி வாய்ப்பு களை ஏற்படுத்த வேண்டும் என்றும் ஒரு கோடி ரூபாய் திட்டத்தை போட்டுள்ளோம். கூடுதலான பணிகள் நிறைவேற வேண்டும் என்ற தீர்மானத்தை நாம் நிறைவேற்றி வருகிறோம். என்றாலும்கூட ஆங்காங்கு அன்றாடம் ஏற்படுகின்ற செலவினங் களை ஈடுகட்டுவதற்கு பணம் இல்லாமல் திண்டாடுகிறார்கள். அதற்கு உதவி செய்கின்ற முயிற்சியாகத்தான் இது செய்யப் பட்டிருக்கிறது. 20 ஆண்டு காலத்திற்குப் பிறகு ஏற்படுகின்ற இத்தகைய சூழ்நிலைகளைப் பொதுமக்கள் தாங்குவார்கள் என்று நம்புகிறேன். ஆகவேதான் அந்தந்த ஊராட்சி மன் றத்தைச் சார்ந்தவர்களே முடிவு செய்து கொள்ளலாம் என்று சொல்லி 5 ரூபாயிலிருந்து 10 ரூபாய் வரையிலே உயர்த்திக் கொள்ளலாம் என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திரு ஆர். சிங்காரம்

<u>திரு. ஆர். சிங்காரம்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. வரியின் மூலமாக ஊராட்சி மன்றத்திற்கும் ஊராட்சி ஒன்றியத்திற்கும் நிதி வருகிறது என்பது எனக்குத் தெரியும். அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் சாதாரண ஒரு தெரு விளக்கு எரியவில்லை என்று சொன்னால், முதல்வர் சரியில்லை, சட்டமன்ற உறுப்பினர் சரி யில்லை, நிதி அமைச்சர் சரியில்லை என்று சாதாரண மக்கள் பேசுகின்ற காலத்தில் நீங்கள் 5 ரூபாயிலிருந்து 10 ரூபாய் வரை உயர்த்தலாம் என்று சொன்னாலும் அவர்கள் 10 ரூபாய் வரை தான் உயர்த்துவார்கள். அவர்களுக்கு பொறுப்பு இருந்தாலும் இல்லாவிட்டாலும், கெட்ட பெயர் நமக்கு வருகிறது. எந்த ஒரு சாதாரண நிகழ்ச்சி இன்றைக்கு நடக்காவிட்டாலும் முதல்வர் மீதுதான் குறைசொல்கிறார்கள். ஆட்சியின் மீதுதான் குறை சொல்கிறார்கள். அதை தூண்டிவிட்டு எதிர்க் கட்சிக் காரர்கள் பிரச்சாரம் செய்கிறார்கள் இப்படிப்பட்ட சூழ்நிலை இந்த ஆட்சியின் மீதுதான் வந்து சேர்கிறது. ஆகவேதான் யார் உயர்த்தினாலும் பலன் ஊராட்சி மன்றங்கள் அடைந்தாலும் கெட்ட பெயர் இந்த ஆட் கவர்ன்மெண்டுக்கு வராவிட்டாலும் சொல்கிறேன் விவசாயிகள் மத்தி சிக்கு வருகிறது. அதைத் தான் யிலே மிகப் பெரிய அதிருப்தியை ஏற்படுத்திவிடுகிறது. இதை மறுபரிசிலனை செய்ய வேண்டும் என்று நான் அதைத் தான் கேட்டுக் கொண்டேன்.

1992 மார்ச் 26]

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கெட்ட பெயர் வரக்கூடாது என்பதற்காகத்தானே இவ்வளவு நேரம் நான் வாதாடிக் கொண்டே இருக்கிறேன் இந்த காரண காரிய விளக்கங்களை எல்லாம் திறமை மிக்க செல்வாக்கு மிக்க, மக்களிடத்திலே நன்றாகப் பழகுகின்ற, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் போன்றவர்கள் ஆங்காங்கு தெளிவிப்பார்களேயானால், அவர் தெளிவுபடுத்தி யாரும் தெளிவடையவில்லை, என்றால் வேறு யார்தான் தெளிவடையப் போகிறார்கள். சில நேரங்களிலே மக்களைக் காண்கின்றபோது அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியதுதான். ஆகவே மக்கள் தெரிவித்துக் கொண்டிருக்கின்ற சிலபல தவறான எண்ணங்கள் இருக்குமேயானால் அதைத் திருத்த வேண்டியது நம்முடைய பொறுப்பு, ஆனால் அதிகக் கெட்ட பெயர் ஏற்படாது. அதற்குத்தான் நான் சொன்னேன் 1972லே போட்ட வரி. 1972.க்குப் பிறகும் அதே நிலையில் இருப்பதன் காரணமாக உங்களுக்கு விளக்கு கிடைக்கவில்லை, சாலை வசதிகள் கிடைக்கவில்லை. அரசாங்கம் அப்போது செலவழித்த பணத்தை விட பல மடங்கு அதிகமான அளவுக்கு கிராண்ட் ஆக இப்போது கொடுத்துக் கொண்டு வருகிறது. அவ்வளவு கொடுத்தும்கூட அந்தப் பகுதிகள் வளரமுடியாத அளவுக்கு இருக்கின்றன. ஆகவே உங்களுடைய பங்கும் ஓரளவுக்கு இருக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் மக்களுக்குத் தெளிவுப்படுத்துவார்களேயனால், நம்முடைய மக்கள் ஏற்றுக் கொள்வார்கள், அவர்கள் ஏற்றுக் கொள்கின்ற மனப்பான்மையைக் கொண்டவர்களே தவிர மறுக்கின்ற மனப்பான்மைக் கொண்டவர்கள் அல்ல என்பதை நாம் நன்றாக உணர்வோம். அப்படிப்பட்ட பணிகளை அவர்கள் மிகச்சிறப்பாகச் செய்யலாம்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிச்சாமி அவர்கள் பேசுகின்றபோது, விவசாயிகளுக்கு ஓய்வு நேரம் அதிகமாக இருப்பதன் காரணமாக அவர்களுக்கு துணைத் தொழில் இருக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துச் சொன்னார்கள். இந்த அரசாங்கம் நீண்ட நெடுங்காலமாக சொல்லிக் கொண்ட வருகிறது. கிட்டத்தட்ட 365 நாட்கள் என்று கணக்கிடுவோமானால் ஒரு விவசாயிகளுக்கு 118, 120நாட்கள் தான் முழுவேலை கிடைக்கிறது என்றும் மீதி காலங்களிலே அவர்களுக்கு வேலை வாய்ப்பு அற்ற நிலைமைகள் இருக்கின்றன. விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்கின்ற தொழிலாளர்கள் போதிய வருமானம் பெற முடிவதில்லை விவசாயத்திலே ஈடுபட்டிருப்பவர்கள் துணைத் தொழிலைச் செய்கின்ற சூழ்நிலை ஏற்பட வேண்டும். அதற்கான வாய்ப்பு வசதிகளை அரசாங்கத்திடத்திலே பெறலாம் என்று தான் நீண்ட நெடுங்காலமாக சொல்லிக் கொண்டிருக்கிறோம்.



1992 மார்ச் 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பிற்பகல் 12–50

அதுமட்டுமல்ல, சிறு தொழில்கள் துறையின் மூலமாக புத்தகமே ஒன்று போட்டு, அதில் கிட்டத்தட்ட 800 வகையான தொழில்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தச் சிறு தொழில்களுக்கு அடிப்படையான பொருள்கள் என்னென்ன தேவை என்னென்ன என்பதையும் குறுப்பிட்டு, அதற்கு எவ்வளவு தொகை தேவைப்படும் என்பதையும் குறிப்பிட்டு அதற்கு கடன் வசதி மற்றவைகளைப் பெறுவதற்கு என்னென்ன, வாய்ப்புகள் என்பதை எல்லாம் போட்டு, அந்தப் புத்தகங்கள் எல்லாம் அச்சடிக்கப்பட்டுச் சிறு தொழில் இலாகாவில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆண்டுக்காண்டு புத்தகங்களை நாங்கள் கணக்கிட்டு கணக்கிட்டுப் பார்த்து அந்தப் புத்தகங்கள் எல்லாம் இருக்கின்றனவா இல்லையா என்று பார்க்க வேண்டியிருக்கிறதே தவிர மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று, விவசாயிகள் அவற்றை வாங்கிப் படித்துப் பயன்படுத்துகின்ற அளவுக்கு சூழ்நிலைஇல்லை, முயன்றால் எவ்வளவோ சிறு சிறு தொழில்களை உருவாக்க இயலும். அவைகளை எல்லாம் அவர்கள் பயன்படுத்துகின்ற முறையில் அவர்களுக்கு ஊக்கம் தருவதற்காகத் தான் மாவட்டம் தோறும் இருக்கிற தொழில் துறை அதிகாரிகளும் மற்றவர்களும் முயன்று வருகிறார்கள். ஆகவே, துணைத் தொழில்களைச் செய்யாவிட்டால் ஒரு நாளும் விவசாயம் வளராது. ‘உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்களவும் மிஞ்சாது, என்பது ஆயிரம் ஆயிரம் ஆண்டுக் காலமாக இருந்து வருகிற பழமொழிதான்.

உலகம் முழுவதும் நாம் பார்ப்போமேயானால்கூட, அக்ரிகள்சரல் கன்ட்ரி என்று சொல்லப்படுகின்ற, விவசாயத்தை நம்பி வாழ்கிற எந்த நாடும் பொருளாதாரத்தில் வளர்ந்திருக்கவில்லை. விவசாயத்தோடு வசதி வாய்புகளில் மிகுந்து நின்றது என்ற வரலாறு உலகம் முழுவதுமே கிடையாது. நம்முடைய நாட்டில் நூற்றுக்கு 70 பேர் விவசாயத்தை நம்பி வாழக்கூடிய நிலைமையிலேயும், 10 பேர் அவர்களுக்குத் துணையாக இருந்து தொழில் புரிய வேண்டியவர்களாகவும் இருக்கிறார்கள், 20 பேர் தான் வேறு பல தொழில்களில் இருக்கிறார்கள்.

இதே நிலைமையிலே நாம் பார்ப்போமேயானால் அமெரிக்காவைப் பொறுத்த வரையில் அங்கே 27 கோடி மக்கள் வாழ்கிறார்கள் என்றாலும், அங்கேநூற்றுக்கு 2 போர் தான் விவசாயத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். மற்ற நூற்றுக்கு 98 பேர் குண்டூசி செய்வதிலிருந்து அணுகுண்டு செய்கின்றது வரையில் இருக்கின்ற தொழிற்சாலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு பேருடைய உழவு அந்த அமெரிக்கா முழுவதையும் காப்பாற்றி, மிகுப் பொருள்களை, மிகுதியாக உற்பத்தி செய்கின்ற கோதுமை போன்றவைகளை பிற நாடு

## இறுதி துணை நிதிநிலை அறிக்கை, 1991-92

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1992 மார்ச் 26

அங்கு இருக்கிற விவசாயிகளைக் காப்பாற்றித் தீரவேண்டிய அவசியம் ஏற்படுகிற காரணத்தால் தான் சக்தி சுகர்ஸக்கு, அந்த சர்க்கரை ஆலைக்கு கரும்புகளை மாற்ற வேண்டிய அவசியம் நமக்கு ஏற்படுகிறது. இல்லாவிட்டால் கூட்டுறவு சர்க்கரை ஆலையை விட்டு விட்டு ஒரு தனியார் ஆலையை ஆதரித்து அதை வளர்க்க வேண்டுமென்ற எண்ணம் அரசைப் பொறுத்தவரையில் இருக்க நியாயமில்லை. கூட்டுறவு சர்க்கரை ஆலை சரியாக நடைபெற வேண்டுமென்பதுதான் அரசாங்கத் தின் நோக்கம். அது ஏன் வேலை செய்யவில்லை என்பதற்கான குறிப்புகள் இப்போது என்னிடம் இல்லை. ஆனால் அதை வேலை செய்ய வைப்பதற்கும் அந்த இலாபகரமாக ஆக்குவதற்கும், முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அப்படி எடுக்கும்போது அந்தப் பகுதியில் இருககிற விவசாயிகளுடைய கரும்பு அங்கே பயன்படுத்தப்படுகின்ற நிலைமை ஏற்படும்.

தனியார் விலை அதிகம் கொடுத்து வாங்குகிறார்கள் என் றால் அதனால் ஆலை நடத்துகிறவர்களுக்குத்தான் நட்டம் ஏற்படுமே தவிர, உற்பத்தி செய்கிறவர்களுக்கு நட்டம் இல்லை ஆனால், உற்பத்தி ஆகிற கரும்பை உற்பத்தி செய்கிறவர்கள் எங்கேயாவது விற்றுத்தீர வேண்டும். அவர்களே சொல்லிய மாதிரி அந்தக் கரும்புகளை கூட்டுறவு சர்க்கரை ஆலை வாங்கு வதாக இருந்தால் ரூ.399க்கு வாங்கும். சக்தி ஆலை ரூ. 400, ரூ. 500 என்று கொடுத்து வாங்குகிறது என்றால் விவசாயிகளுக்கு அது இலாபமாகத்தான் இருக்கும். சர்க்கரை ஆலை நடத்து கிற நமக்குத்தான் நஷ்டம் ஆனால், அந்த கூட்டுறவு சர்க்கரை ஆலையைச்சிறப்பாக நடத்த உதவ வேண்டும். அது ஏன் இயங்கவில்லை என்பதை தனியாகத்தான் ஆராய வேண்டும். அதற்கான பிரச்சனைகள் எல்லாம் ஆராய்ந்து தக்க முடிவினை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேறு பல பிரச்சனைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் பல ரும் இங்கே எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள் என்றாலும் இத வரையிலும் பல மானியக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட் டிருக்சின்றன. அவ்வப்போது அந்தந்தத் துறைக்குப் பொறுப் பான அமைச்சர்கள் அதற்கான காரண காரிய விளக்கங்கலை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் பல மானி யக் கோரிக்கைகள் இந்தத் திங்களிலும் அடுத்த திங்களிலும் வ இருக்கின்றன. அவற்றிலும் பல்வேறு பிரச்சனைகளை நீங்கள் எழுப்புகின்றபோது உரிய அமைச்சர்கள் எடுக்கப்பட்டிருக்கி கடவடிக்கைகன் பற்றியும் எடுக்கப்படவிருக்கின்ற நடவடிக்கை கள் பற்றியும் மேற்கொண்டிருக்கிற குறிக்கோள்கள், கொள்கை கள் பற்றியும் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துச் சொல்வா கள். இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களில் கூறியிருக்கிற அத்தனைக் கருத்துக்களுக்கும் நான் இப்போது



1992 மார்ச் 26]

பதில் சொல்லுகிற சூழ்நிலையில் இல்லை. ஆனால் அந்தக் கருத்துக்கள் எல்லாம் அரசினுடைய கவனத்திலே கொள்ளப் பட்டு, அவற்றின்மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எல்லாம் முறைப்படி எடுக்கப்படும் என்பதை மட்டும் எடுத்துச் சொல்லி, இந்த இறுதி துணை மதிப்பீடுகளை நிறைவேற்றித் தருமாறு இந்த அவையினரை நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு மணிக்கு முன்னால் முடித்துக் கொடுத்த மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் பேரவை உறுப்பினர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள் கிறேன். ஏனென்றால் எனக்கு இருக்கிற அதிகாரத்தைப் பயன் படுத்தாத அளவுக்கு முடித்துக் கொடுத்திருக்கிறீர்கள். நீங்கள் முடித்துக் கொடுக்கவில்லை என்றால் ஒரு மணிக்கு நான் முடித் தாக வேண்டும். இப்போது விவாதம் முடிவுற்றது; வாக்கெ டுப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எச். எம். ராஜு தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

திரு. எச். எம். ராஜு : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எச். எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதி யுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சோ. இராசாராமன் தன்னுடைய வெட்டுத் தீர் மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்பு கிறேன்.

திரு. சோ. இராசாராமன் இருக்கையில் இல்லை. அவ ருடைய வெட்டுத் தீர்மானம் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

திரு. வி. கே. லட்சுமணன் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

திரு. வி.கே. லட்சுமணன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திருமதி ரமணி நல்லதம்பி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

திருமதி ரமணி நல்லதம்பி இருக்கையில் இல்லை. அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

1991-92 ஆம் ஆண்டிற்கு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 24-3-1992ஆம் தேதியிடப்பட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை 1991-92ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க. (ஆம்).

மறுப்போர் இல்லை என்க (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி) கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.



## நிறைவேற்றப்பெற்ற 1991-92ஆம் ஆண்டிற்கான கூடுதல் மானியக் கோரிக்கைகள்.

### A. வருவாய்க்கணக்கில் செலவு.

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| | 1 |
| 1 நில வரித் துறை— | |
| 3 மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிருவாகம் .. | 32,59 |
| 4 பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிருவாகம் .. .. .. | 50,89 |
| 5 முத்திரைத்தாள்கள்—நிருவாகம்— .. .. | 80,59 |
| 7 மாநிலச் சட்ட மன்றம் .. .. .. | 24,88 |
| 8 தேர்தல்கள் .. .. .. .. | 10,43,09 |
| 9 மாநில ஆட்சி தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்— .. .. | 6,99,72 |
| 10 பால் வழங்குத் திட்டங்கள் .. .. .. | 23,71 |
| 11 மாவட்ட நிருவாகம் .. .. .. .. | 6,64,38 |
| 12 தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு இந்து சமய-அறக் கட்டளைகள் சட்ட நிருவாகம்— .. .. | 44,22 |
| 14 சிறைச்சாலைகள் .. .. .. .. | 2,19,20 |
| 15 காவல் துறை .. .. .. .. .. | 17,77,21 |
| 16 இயணைப்புப் பணிகள்— .. .. .. .. | 1,37,00 |
| 17 கல்வி .. .. .. .. .. .. | 94,44,95 |
| 18 மருத்துவம் .. .. .. .. .. | 12,46,73 |
| 19 பொதுச் சுகாதாரம் .. .. .. .. | 8,41,7[illegible] |

கோரிக்கை—தொடர்ச்சி

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

| | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| 20 | வேளாண்மை | 20,92,40 |
| 21 | மீன்வளம் | 1,15,65 |
| 23 | கூட்டுறவு | 87,92,19 |
| 24 | தொழில்கள் | 7,98,00 |
| 26 | கைத்தறியும் துணித் தொழிலும் | 52,60,57 |
| 27 | கதர்-கிராமத் தொழில்கள் | 1,56,76 |
| 28 | சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் | 12,07,37 |
| 29 | தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் | 3,07,36 |
| 30 | சமூக நலன் | 8 |
| 31 | பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் | 24,69,08 |
| 32 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற் படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் முதலியோர் நலன் | |
| 33 | வீட்டு வசதி | |
| 34 | நகர்ப்பகுதி வளர்ச்சி | 42,48,5 |
| 35 | நுகர் பொருள் வழங்கல் | 84,98 |
| 36 | பாசனம் | 9,67,71 |
| 37 | பொதுப் பணிகள்—கட்டிடங்கள் | 1,96,58 |
| 38 | பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவி களும் தளவாடமும் | 28,01 |
| 39 | சாலைகளும் பாலங்களும் | 26,45,34 |



A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

கோரிக்கை—தொடர்ச்சி

| | | (ரூபாய் ஆயிரத்தில்). |
|---|---|---|
| 40 | சாலைப் போக்குவரத்துப் பணிகளும், கப்பல் போக்குவரத்தும் | 3,41,08 |
| 41 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 8,28,16 |
| 42 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் | 87,49,80 |
| | | 16,82,00,89 |
| 43 | பல்வகை.. | 2,69,89 |
| 44 | எழுது பொருள் அச்சுத்துறை— | 91,46 |
| 45 | காட்டுவளத் துறை | 2,09,30 |
| 47 | செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல்— | 11,45,96 |
| 48 | ஊரகத் தொழில்கள் | 23,82,46 |
| 49 | குடிநீர் வழங்கல்— | 18,26,18 |
| 50 | நகராட்சி நிருவாகம் | 6,19 |
| 51 | சுற்றுலா— | 46,00 |
| 52 | தமிழ் வளர்ச்சி-பண்பாடு— | |
| | மொத்தம்— A. வருவாய்க் கணக்கில் செலவு | 22,97,98,93 |

B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு.

| | | |
|---|---|---|
| 54 | தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 12,74,31 |
| 55 | பாசனம் குறித்த மூலதனச் செலவு | 5,20,37 |
| 56 | பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூல தனச் செலவு | 6,88,39 |
| 57 | சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.. | 3 |
| 58 | சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 10,16 |
| 59 | காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 1,76,49 |

B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு— தொடர்ச்சி.

| | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| | கோரிக்கை—தொடர்ச்சி. | |
| 60 | ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு .. | 10,57 |
| 61 | பல்வகை மூலதனச் செலவு .. .. .. | 31,85,98 |
| | மொத்தம்—B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு. | 58,66,30 |

C. கடன்கள்—முன்பணங்கள் வழங்குதலும், கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

| | | |
|---|---|---|
| 62 | மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 81,70,08 |
| | பெரு மொத்தம் .. | 24,38,35,31 |

பிற்பகல் 1-00

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(அ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1992 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

8. சட்டமுன்வடிவு—அறிமுகம் செய்தல்—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, இதனைப் பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார். மாண்புமிகு நிதியமைச்சர்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1992ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

(ஆம்)

ஏற்போர் '' ஆம் '' என்க.

மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(பலத்த மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

10. 25—3—1989-ஆம் நாளைய நடவடிக்கைக் குறிப்புகளிலுள்ள செய்திகள் குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை உறுப்பினர்களுக்கு ஓர் அறிவிப்பு. 25-3-1992 அன்று, அதாவது நேற்று, பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. எம். ரங்கராஜன் அவர்கள் பேசும்போது, தாம் 25-3-1989-ஆம் தேதிய நடவடிக்கைக் குறிப்புகளை (Proceedings of the House) நூலகத்தில் பார்த்த பிறகு, 25-3-1992 அன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு முன்னவர் அவர்களும், ஏனைய பேரவை உறுப்பினர்கள் சிலரும் கூறியதற்கு மாறாக நிகழ்ச்சிகள் நடந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்று பேரவைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வந்து, மேலும், அவ்வாறு தவறாகத் தயாரிக்கப்பட்ட அந்த நிகழ்ச்சிகளை எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து எடுப்பதற்கு பேரவைத் தலைவர் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

நான் 25-3-1989-ஆம் தேதிய நடவடிக்கைக் குறிப்புகளை ஒப்பிட்டுப் பார்த்து, பேரவை விதிகளையும் பரிசீலித்து, இது குறித்து எனது தீர்ப்பினை வழங்குவதாக அறிவித்தேன்.

1989—90ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் பேரவைக்கு 25-3-1989 அன்று அளிக்கப்பட்டபோது, அந்த நடவடிக்கைக் குறிப்பில் கீழ்க்கண்டவாறு நிகழ்ச்சிகள் நடைபெற்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அன்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சி தலைவி அவர்களும், அன்றைய காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் துணைத் தலைவரான திரு. குமரி அனந்தன் அவர்களும் எழுப்பிய பிரச்சினைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. தொடர்ந்து அடைப்புக் குறிகளுக்குள் 3 இடங்களில் அன்றைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பட்ஜெட் உரையைப் பறிக்க முயற்சித்தார்கள் என்றும், பறித்து கிழித்து எறிந்தனர் என்றும், பேரவையில் வன்முறையில் ஈடுபட்டனர் என்றும், அன்றைய அவையில் நடைபெற்ற செயல்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை எல்லாம் அடைப்புக் குறிகளுக்குள் போடப்பட்டுள்ளன. இத்தகைய அடைப்புக்குறி விளக்கங்களுக்கு மத்தியில் அன்றைய முதலமைச்சர் கூறியதாக, '' மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அடியுங்கள், அடியுங்கள், முதலமைச்சரை அடிக்க வருகிறீர்கள் அல்லவா, அடியுங்கள்'' என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிற்பகல் 1—05

இது குறித்து நான் சில விளக்கங்களை அவைக்கு அளிக்க விரும்புகிறேன். ''HALSBURY'S LAWS OF ENGLAND'' என்ற புத்தகத்தில், அவை நடவடிக்கைக் குறிப்புகள்—''Proceedings of the House'' பற்றிக் கீழ்க்கண்டவாறுபொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது :—

"'Proceedings in Parliament' has been used to include matters connected with, or ancillary to, the formal transaction of business. A Select Committee of the Commons, citing and approving a Canadian dictum, stated in its report that it would be unreasonable to conclude that no act is within the scope of a member's duties in the course of Parliamentary business unless it is done in the House or a Committee of it and while the House or Committee is sitting" என்றும் மேலும்

"An exact and complete definition of 'Proceedings in Parliament' has never been given by Courts of law or by either House. In its narrow sense the expression is used in both Houses to denote the formal transaction of business in the House or in Committee. It covers both the asking of a question and the giving of written notice of such question, and includes everything said or done by a member in exercise of his functions as a member in a Committee of either House, as well as everything said or done in either House in the transaction of Parliamentary business" என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.



மேலும், கௌல் மற்றும் ஷக்தர் எழுதியுள்ள பாராளுமன்ற மரபுகள் மற்றும் நடைமுறைகள்'' என்னும் நூலில்

"A criminal act committed by a member within the House cannot be regarded as a part of the proceedings of the House, for purposes of protection........"

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நடைமுறைகளையும் விளக்கங்களையும் ஒட்டித்தான் பாராளுமன்ற நடவடிக்கைகள் அல்லது சட்டமன்ற நடவடிக்கைகளைக் குறிப்பு எடுப்பவர்கள், அவையில் பேசப்படுபவைகளைத் தவிர ஏனைய செய்கைகளை நடவடிக்கைக் குறிப்புகளாகக் குறிக்க மாட்டார்கள். இந்த அடிப்படை விதிகளின்படி, அன்றைய, அதாவது 25-3-1989-ஆம் தேதிய நடவடிக்கைக் குறிப்புகள் உள்ளனவா என்பதை ஒப்புநோக்கி சரிபார்த்தேன். மேற்கூறிய பொருள் விளக்கத்திற்கு மாறாக நடவடிக்கைக் குறிப்புகளின் முன்பகுதியில் பேரவையின் அன்றைய அதிகார பூர்வமாக வெளியிடப்படுகின்ற குறிப்பினையும் அன்றையதினம் பேரவைத் தலைவருக்கு வழங்கப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகள் பற்றிய பேரவை ஆவணங்களையும்—அதாவது இந்த ஆவணம், சரிபார்க்கும்போது அவையில் உறுப்பினர்கள் பேசியவை மட்டுமே நடவடிக்கைக் குறிப்புகளாகப் பதிவாவதற்குப் பதிலாக, செய்கைகள் பல நடந்ததாகப் பதிவாகியிருப்பது தெரிய வந்தது.

சாதாரணமாக இந்த அவையின் நடவடிக்கைக் குறிப்புகள் (Proceedings of the House) நாள் வாரியாக வெளியிடப்பட்டிருப்பதைப் பலரும் பார்த்திருப்பீர்கள். உறுப்பினர்களது பேச்சுக்கள், கேள்விகள், பதில்கள், விளக்கங்கள், குறுக்கீடுகள், அதற்கான பதில் குறுக்கீடுகள் இவைதான் அவை நடவடிக்கைகள் (Proceedings of the House) என இடம் பெறும். இவை தவிர, உறுப்பினர்களது செய்கைகள் என்ற வகையில், கரவொலி, சிரிப்பு, வெளிநடப்பு என்ற சொற்றொடர்கள்தான் இடம் பெறும். எக்காலத்திலும் உறுப்பினர்களது செய்கைகள் பற்றி, அவையில் இன்னின்ன நடந்தன எனக் குறிப்பிடுவது நடைமுறையில் இருக்கவில்லை. அதுவும் வெளிநடப்பு என்பது கூட அவை நடவடிக்கையாகாது. எனவே, அதனைக் கூட வெளிநடப்பு என பத்திரிகைகள் வெளியிடக்கூடாது என்ற தீர்ப்பை இதே அவையில் அதே முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி அவர்களே முதல்வராக இருந்த 6-3-1972 அன்று, வெளிநடப்பு என்பதுகூட '' அவை நடவடிக்கை அன்று '' என வாதிடப்பட்டுள்ளது. அப்பேர்ப்பட்ட அவையில், அவை உறுப்பினர்களின் செய்கைகள் என பலவற்றை இணைத்திருப்பது, அதுவும் அடைப்புக் குறிகளுக்குள் வெளியிட்டிருப்பது ஏன் என்ற ஐயம் எவருக்கும் இயல்பாகவே ஏற்படும்.

அதுவும் புரட்சித் தலைவி அவர்களது அணியினர் மட்டுமே பெரும் அமளியில் ஈடுபட்டதாகவும், அன்றைய முதல்வர் '' என்னை அடியுங்கள்.....அடியுங்கள் '' என்று கூறியது மட்

மே அவையில் பேசப்பட்டதாக அவைக் குறிப்பு வெளியிட்
டிருப்பது, திட்டமிட்டு சில உண்மைகளை மறைக்கச் செய்யப்
பட்ட செயலாகவே நான் கருதுகிறேன்.

மேலும் நேற்றையதினம் இந்த அவையில் பேசிய மாண்புமிகு
எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்
அவர்கள் அன்றைய அவையில் நடந்த நிகழ்ச்சிகளை இங்கே
விவரித்தார். அவ்வளவு ரகளை நடந்தபோது பேரவை நட
வடிக்கைக் குறிப்புகளை சுருக்கெழுத்து மூலம் எடுத்து வழங்கு
வோர் கொஞ்சம் கூட அடித்தல் திருத்தல் இல்லாது குறிப்
பெடுத்து, பேரவைத் தலைவருக்கு ஆவணமாக அனுப்பியுள்ள
னர் என்பதும் பெரும் வியப்புக்குள்ளதாக உள்ளது.

பேரவை உறுப்பினர்களே பார்க்கலாம். இதுதான்
அந்த நேரத்திலே நடந்த நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கிற பக்கம்.
இந்தப் பக்கமும் அடுத்த பக்கமும் எந்த அடித்தலும் இல்லாமல்
அவ்வளவு ரகளை நடந்த நேரத்தில் அவைக் குறிப்பில் சுருக்
கெழுத்தாளர்கள் எடுத்து அனுப்பியதாகக் கூறப்பட்டுள்ள பகுதி
யில் எந்த அடித்தலும் இல்லாமல்—இந்த அடைப்புக் குறிகளுக்
குள் இருக்கிற செய்திகளும் சேர்த்து பேரவைத் தலைவருக்கு
சுருக்கெழுத்தாளர்கள் கொடுத்த குறிப்பாகச் சேர்க்கப்பட்டு
உள்ளது.

ிற்பகல் 1-10

அதே பேரவைத் தலைவருக்கு ஏனைய சில நாட்களில் சிறு
சிறு குறுக்கீடுகள் நடந்த நாட்களின் நடவடிக்கைக் குறிப்புகள்
அனுப்பியதையும், அதே நாட்களில் கூட மீண்டும் அவை கூடிய
உடன் அனுப்பிய குறிப்புகளையும் பார்த்தபோது ஏராளமான
திருத்தங்கள் அல்லது நீக்கம் செய்யும் உத்தரவுகள் மேற்படி
பேரவைத் தலைவராலேயே இடப்பட்டுள்ளதைக் கோப்புகள்
மூலம் பார்க்க முடிந்தது. அன்றைய தினத்திலே கூட அது
முடிந்து கொஞ்ச நேரத்திற்குப் பின்னர் 11-30 மணிக்குத்
தொடங்கியதாகக் கூறப்படுகிற அந்த நிகழ்ச்சி நிரலில் இந்த
சிவப்புப் பகுதியில் இருக்கிற பகுதிகள் எல்லாம் அவைக் குறிப்
பிலே இருந்து நீக்கப்பட்ட பகுதிகள். அதற்குப் பின்னர்
நடந்த நிகழ்ச்சியில், இவ்வளவு பகுதிகள் சுருக்கெழுத்தாளரால்
எடுத்து அனுப்பப்பட்டு அவைகள் எல்லாம் பேரவைத் தலைவ
ராலேயே நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிற பகுதிகள்
இவ்வளவு இருக்கின்றன. அப்படி இருந்தும் கூட அந்த மிகப்
பெரும் அமளி நடந்தபோது நடைபெற்ற செய்திகள் பற்றிப்
பேரவைத் தலைவருக்கு அனுப்பிய குறிப்புகளில் இரண்டு பக்கங்
களில் எந்த அடித்தலும் திருத்தலும் இல்லாமல் இருக்கிறது
என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். எனவே எவ்வித
அடித்தல் திருத்தல் இல்லாது இந்தப் பேரவைக்கே களங்கம்



ஏற்படுத்தியுள்ள நிகழ்ச்சி நடைபெற்ற அவை நடவடிக்கைக்
குறிப்புகள் Proceedings of the House என—இதோ உள்ளதே
இது திட்டமிட்டு தீய நோக்கோடு, தாங்கள் செய்த ஜனநாயகப்
படுகொலையை மறைக்க சுருக்கெழுத்தாளர் மூலம் எடுக்காது
(மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அவர்களாகவே இடைச்
செருகலாக சேர்த்த பகுதி என்பதை உறுதியாகவும், தெளிவாக
வும் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு இடைச் செருக
லாக அவர்கள் சேர்த்த பக்கங்களில்தான் நாடாளுமன்ற மரபு
களுக்கும், நடைமுறைகளுக்கும், மாறாக அனைத்திந்திய
அண்ணா தி.மு.க.வினர் செய்கை என சிலவற்றை அவை நட
வடிக்கைக் குறிப்புகள் என ஆக்கியுள்ளனர். நான் ஏற்கெனவே
தெரிவித்த அந்த நாடாளுமன்ற விதிமுறைகளின்படி எது எதைச்
சேர்க்கக் கூடாதோ அதை எல்லாம் சேர்த்திருக்கிறார்கள்.
அவ்வாறு அவர்கள் இடைச் செருகல்களாக சேர்த்த நடவடிக்கைக்
குறிப்புகளுக்கு Proceedings of the House அன்றைய பேரவைத்
தலைவர் ஒப்புதல் அளித்து அவை நடவடிக்கைக் குறிப்பேடாக
வெளி வந்திருக்கிறது. எனவே அவை நடவடிக்கைக் குறிப்புகள்
என அன்றைய தினம் 25-3-1989அன்று நடந்ததாக வெளியிடப்
பட்டுள்ள இக்குறிப்புகள் அனைத்தும் நாடாளுமன்ற மரபுகள்
மற்றும் நடைமுறைகளுக்கு முற்றிலும் விரோதமானவை என்றும்
தீய நோக்கத்தோடும் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)
திட்டமிட்டு சிலவற்றை மறைப்பதற்காகவும் செய்யப்பட்ட
இடைச்செருகல் வேலை என்றும், மோசடி என்றும் எனது
தீர்ப்பினை வழங்குகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த
ஒலி).

மேலும் உண்மையிலேயே என்ன நடந்திருக்கும் என்பதை
உறுதிப்படுத்தும் சில ஆதாரங்களும், இடைச்செருகல் செய்யப்
பட்ட இதே ஆவணத்தில் இருந்தே என்னால் தெரிந்துகொள்ள
முடிந்தது. எவ்வித அடித்தல், திருத்தல் இல்லாது தங்கள்
நோக்கத்திற்கேற்ப சில பக்கங்களைச் சேர்த்துக் கொண்டவர்கள்
அன்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மாண்புமிகு
புரட்சித் தலைவி அவர்கள் அவையைவிட்டு வெளியேறிய பின்னர்
மீண்டும் பேரவை, அன்றைய பேரவை 11-30 மணிக்குக் கூடிய
போது காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் மட்டும் அவைக்கு வந்து
நியாயம் கேட்டுள்ளனர். என்னென்ன பொருள்களை எல்லாம்
தங்கள் கட்சியின் தலைவர்மீதும் மாண்புமிகு புரட்சித்
தலைவி அவர்களின்மீதும் எறிந்தனர் என்பதைக் குறிப்பிட்டு
நீதி கேட்டுள்ளனர். அந்தப் பகுதிகள் எல்லாம் நான் இப்போது
சொன்னேனே, அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்பட்ட பகுதி,
அந்தப் பகுதி அது. காங்கிரஸ் கட்சியினர் மட்டும் இங்கே
வந்து நாங்கள் நீதி கேட்கிறோம் என்று கேட்கிற பகுதிகள்,
அந்தப் பகுதிகள் எல்லாம் இருக்கின்றன. அப்போது நடை
பெற்ற நடவடிக்கைகள் அப்படியே சுருக்கெழுத்தாளர்களால்
எடுக்கப்பட்டு பேரவைத் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அதில் பேரவைத் தலைவர் எது எதை நீக்க வேண்டும் என
உத்திரவிட்டுள்ளாரோ அவை எல்லாம் அடித்தல் திருத்தலோடு
உள்ளது. ஏற்கெனவே உங்களுக்குக் காட்டினேன். பெரும்
ரகளை நடந்த போது எந்த ஒரு அடித்தல், திருத்தல் கூட
இல்லை. அதைவிட மிகச் சொற்ப அளவில் விவாதம் நடை
பெற்றபோது எண்ணற்ற அடித்தல், திருத்தல், வேடிக்கையாக
இல்லையா ! அவ்வாறு பேரவைத் தலைவருக்கு திருத்தங்கள்
செய்து ஒப்புதல் அளிக்க அனுப்பியுள்ள இக்கோப்பிலிருந்துதான்
அன்றைய தினம் இப் பேரவையில் என்ன நடந்திருக்கும் என்பதற்
கான ஆதாரம் கிடைத்துள்ளது. வேறு யாருடைய பேச்சிலே
இருந்தும் அந்த ஆதாரம் கிடைக்கவில்லை. அன்றைய தினம்
அவர்கள் தயாரித்து வைத்து இருந்த மாண்புமிகு வானளாவிய
அதிகாரம் படைத்த உறுப்பினர் ஒருவர் இருந்தாரே ! திரு. பி.
எச். பாண்டியன் என்று (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).
அவருடைய பேச்சுக் குறிப்புக்களைப் படித்தாலே போதும் ;
அன்றைய அவையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள்மீது
எத்தகைய தாக்குதல் நடந்து இருக்கும் என்பதைப் புரிந்
கொள்ளலாம். அந்த அளவுக்கு, அன்றைய பேரவைத் தலை
வரே அவைக் குறிப்பிலிருந்து நீக்கும் அளவுக்கு மோசமான
வார்த்தைகளைப் பயன்படுத்தியதோடு, நடந்த வன்முறைத்
தாக்குதலை நியாயப்படுத்தியும் பேசி உள்ளார். அவற்றில்
பலவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டு, அவர்களுக்கு
வேண்டிய சில பகுதிகளை மட்டும், எவ்விதப் பொருளும் தெரி
யாத அளவுக்கு இந்த நடவடிக்கைக் குறிப்பில் வெளியிட்டு இருக்
கிறார்கள்.

பிற்பகல் 1-15

திரு. பி. எச். பாண்டியன் பேசி உள்ளதைப் பார்க்கும்
போது, நிச்சயம் சில விரும்பத்தகாத நிகழ்ச்சிகள், அசம்பா
விதங்கள் நடந்து இருக்கும் என்பது தெள்ளத் தெளிவாகிறது.
அதோடு கூட, அன்றைய தினம் இதே அவையிலே இருந்த
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் என்ன நடந்தது
என்பதை ஒளிவு மறைவு இன்றி அப்படியே இங்கே பேரவை
உறுப்பினர்களுக்குத் தெரிவித்தார்.

சில பத்திரிகைகள், நான் இன்றைக்கு இந்த விளக்கத்தை
அளிக்க இருக்கிறேன் என்று நேற்று சொன்னதையொட்டி
பேரவைத் தலைவர் ஏதோ இன்றைய தினம் தன் தீர்ப்பை
வழங்குவதாகச் சொல்லியிருக்கிறார். அவர் பார்வைக்கு என்று
அன்றைய தினம் சில பத்திரிகைகள் வெளியிட்டு இருந்த சில
செய்திகளை, ''இடைச் செருகல்கள்'' என்று நான் சொன்னேனே
இதை அப்படியே வெளியிட வேண்டும் என்று அவர்கள் கேட்டுக்
கொண்டு, சில செய்திகளை இன்றைக்குப் பத்திரிகைகளில் வெளி



யிட்டு, ''இதெல்லாம் அன்றைக்கே வந்த செய்திகள்'' என்று
தெரிவித்து இருக்கிறார்கள். அந்தச் செய்தியும் அன்றைய
தினம் வந்துதான் இருக்கிறது. அதே நேரத்தில் பல பத்திரிகை
களில் வேறு சில செய்திகளும், படங்களும் வந்து இருக்கின்றன
என்பதை அவையின் கவனத்துக்கு எடுத்துக் கூறக் கடமைப்பட்டு
இருக்கிறேன்.

இதோ ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' பத்திரிகை. 26-3-1989ஆம்
தேதிய பத்திரிகை. அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த
மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள், அவையிலே ஏற்பட்ட
எல்லா அவமானத்தையும் தாங்கிக் கொண்டு குற்றுயிரும் குலையு
யிருமாக வெளியேறிய காட்சி இது. அதனைத்தான் நான் நேற்றே
குறிப்பிட்டேன். 'இருபதாம் நூற்றாண்டின் பாஞ்சாலி சபதம்
மேற்கொண்டு புரட்சித் தலைவி அவர்கள் இங்கே இருந்து வெளி
யேறினார்' என்ற அந்தப் படம். அதே போல் அவர் காரிலே
ஏறுகிறபோது அவரைப் பாதுகாப்பாக அன்றைய சட்டமன்ற
உறுப்பினர்கள் சென்று, அனுப்பி வைத்த படம் இது. அதன்
பிறகு இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையேகூட 'புரட்சித்
தலைவி அவர்கள் அடிபட்டார்' என்கிற தலைப்புச் செய்தியைக்
கொடுத்திருக்கிற அந்தச் செய்தி வந்திருக்கிற பத்திரிகை இது.
அதைப்போல அந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து பல்வேறு படங்
களை தினமலர் பத்திரிகை வெளியிட்டு இருக்கிறது. அதில்
வெளிவந்திருக்கிற செய்தி இது. எனவே சில செய்திகளை
அன்றையதினம் சில பத்திரிகைகள் வெளியிட்டன என்று மட்டும்
வெளியிடுவதாலே உண்மை மறைக்கப்பட்டு விடாது என்பதை
மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசை
யைத் தட்டும் பலத்த ஒலி).

இவ்வாறு எனக்குக் கிடைத்து இருக்கிற இந்த ஆவணங்களில்
இருந்தே கூட, நடக்காத நிகழ்ச்சிகளை 'இடைச் செருகல்களாக'
தெரிவித்து விட்டு, நடந்த ஒரு படுபாதக நிகழ்ச்சியை, மாண்பு
மிகு புரட்சித் தலைவி அவர்கள் மீது நடந்த 'கொலை வெறித்
தாக்குதலை' மறைத்து உள்ளனர் என்பது மிகத் தெளிவாகிறது.
நான் ஏற்கெனவே கூறியபடி. அத்தகைய கொலை முயற்சித்
தாக்குதல்கூட 'அவை நடவடிக்கை' என இருக்க வேண்டியது
இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம்,
மீண்டும் கௌல் & ஷக்தர் ஆகியோரின் பாராளுமன்ற மரபுகள்
மற்றும் நடைமுறைகள் என்ற நூலில் கூறப்பட்டுள்ள மராட்டிய
மாநில நிகழ்வு ஒன்றை மேற்கோளாகக் காட்டிட விரும்புகிறேன்.

I quote from page 198, paragraph 3 of Kaul and Shakhder.

" A criminal act committed by a Member within the House cannot be regarded as a part of the Proceedings of the House........ Thus, in Maharashtra, when a Member shouted at the operator to connect his mike to the loudspeaker, threw a paper-weigh in the direction of the loudspeaker operator and rushed to the Speaker and grabbed the mike in front of the Speaker......he was subsequently convicted under different sections of the Indian Penal Code and sentenced to rigorous imprisonment for six months ".

பிற்பகல் 1-20

ஒரு மைக் ஆப்பரேட்டரை நோக்கி பேப்பர் வெயிட்டை
வீசிவிட்டு, சபாநாயகர் மைக்கைப் பிடுங்கியதற்கே ஆறுமாத
கால்க் கடுங்காவல் தண்டனை என்றால், புரட்சித் தலைவியைக்
கொலையே செய்ய முயற்சித்த துச்சாதனர்களுக்கு எத்தனை
ஆண்டுக் கடுங்காவல் தண்டனை தரலாம் என்பதைப் பேரவை
யின் முடிவிற்கே விட்டுவிடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

மராட்டிய மாநில மேற்கோள் அடிப்படையில் அன்றைக்கே
ஒரு நியாயமான, ஜனநாயக ரீதியான அரசாக இருந்திருக்கு
மானால், உரிய கிரிமினல் நடவடிக்கையை எடுத்திருக்க வேண்
டும். இன்றைக்கும் ஒன்றும் மோசம் போய்விடவில்லை. (மேசை
யைத் தட்டும் ஒலி) நடந்த சம்பவம் ஒரு கொலை முயற்சி
யென்ற அடிப்படையில் இந்தியக் குற்றவியல் சட்டம் ஐ.பி.சி.
307 மற்றும் சி.ஆர்.பி.சி. 468-இன்படி நடந்திட்ட குற்றங்களுக்
கான தண்டனை ஏழு ஆண்டு வரையிலோ அல்லது பத்து ஆண்டு
வரையிலோ கடுங்காவல் தண்டனைக்கும் (மேசையைத் தட்டும்
ஒலி) ஏன் ஆயுள் தண்டனைக்கும் உரிய குற்றமாகையால்,
இப்போதும்கூட அந்தக் கொலை முயற்சி வழக்கை
அரசு விரும்பினால் தொடரலாம் என்பதை என் தீர்ப்பாகத்
தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

இந்த என் தீர்ப்பின் அடிப்படையை வைத்துக் கொண்டு,
ஏன் புரட்சித் தலைவி அவர்கள்மீதும் இதே அடிப்படையில்
ஏதேனும் வழக்குத் தொடர முடியுமே எனச் சிலர் கேட்கக்
கூடும். அதற்கு நான் இப்போது என் தீர்ப்பைக் கூறிவிடுகிறேன்.
முடியாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்
கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், அன்றையதினம்
புரட்சித்தலைவி அவர்கள் எழுப்பியது தனக்கு தனிப்பட்ட
முறையில் இழைக்கப்பட்ட கொடுமைக்கு எதிரான ஓர் உரிமைப்
பிரச்சினை என்ற வகையில், நான் ஏற்கெனவே கோடிட்டுக்



காட்டிய ஹவுஸ் ஆப் காமன்ஸ் மரபுப்படி அவரது அச்செய்கை
அவை நடவடிக்கை ( Proceedings of the House) என்று
ஆகிறது. அவையின் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கைக்காக
யார் மீதும், எச்சூழ்நிலையிலும் நடவடிக்கை எடுக்கவோ,
வழக்கு தொடரவோ முடியாது.

Constitution of India, Article 194, sub-section (2), " No member of the Legislature of a State shall be liable to any proceedings in any Court in respect of anything said or any vote given by him in the Legislature or any Committee thereof "

என்று குறிப்பிடுகிறது.

எனவே, புரட்சித் தலைவி அவர்கள் இங்கே எழுப்பியது
அவை நடவடிக்கைக்கு உட்பட்டது (Proceedings of the House)
என்ற அடிப்படையிலே எத்தகைய நடவடிக்கையும் எடுக்க
முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால்
புரட்சித் தலைவி அவர்களுக்கு எதிரான அன்றைய ஆளுங்
கட்சியினரின் நடவடிக்கைகள், அவையின் நடவடிக்கைகள்
( Proceedings of the House ) என எந்த விதிமுறையின்படியும்
ஏற்றுக்கொள்ளமுடியாத கிரிமினல் ஆக்ட்ஸ் எனத் தீர்ப்பளிக்
கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. டி. எம். ரங்கராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே,
பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய தீர்ப்பில்
பாயின்ட் ஆப் ஆர்டர் வராது.

*திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கிளாரிபிகேஷன். தாங்கள் தற்போது அளித்த
தீர்ப்பின் மூலம் 25-3-1989 அன்று அவைக் குறிப்புகள் திருத்
தப்பட்டிருக்கின்றன என்றும், முன்னாள் முதல்வர் அவர்கள்
இந்த அவையில் 25—3—1989 அன்று He has made a misleading
statement என்பதும் நிச்சயமாகத் தெரிகிறது.
பேரவை விதி 281 மற்றும் 283-ஐ பார்க்கிறபோது அவை நட
வடிக்கைகளை முன்னாள் பேரவைத் தலைவர் வெளியிடுகிறார்
என்பதும், "Any alteration must be made with the approval
of the House " என்பதும் நமக்கு நிச்சயமாகத் தெரிகிறது.

இந்த Alteration-னும் மற்றும் இங்கே சொல்லிய 'misleading
statement -'ம் முன்னாள் முதல்வர் அவர்களாலும், முன்னாள்
பேரவைத் தலைவர் அவர்களாலும் செய்யப்பட்டிருக்கிற
செயல்களாகும்.

செய்திகள் குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு



In this Connection, I would like to reger to the may's Parliamentary procedure 20th edition page 148, "To abstract any record or other document from the Custody of the clerk or to falsity or improperly alter any records of, documents presented to either House.. will constitute a contempt" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல்

"Deliberately misleading the House—The House may treat the making of a deliberately misleading statement as a contempt. In 1963 the House resolved that in making a personal statement which contained words which he later admitted not to be true, a former Member had been guilty of a grave contempt" என்று Profums's Case-ல் தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த அடிப்படையின் மூலம் நாம் பார்ப்போமானால் முன்னாள் பேரவைத் தலைவர் அவர்களும், முன்னாள் முதலமைச்சர் அவர்களும் have Committed contempt of the House.

பிற்பகல் 1–25

அதுமட்டுமல்ல. மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தர்மதேவதையாம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கொலு வீற்றிருக்கிற இம்மாமன்றத்தின் பெருமையைக் காப்பது தங்களுடைய தலையாய கடமையாகும். முன்னாள் பேரவைத் தலைவர் மீதும், முன்னாள் முதல்வர் மீதும் 'கன்டம்ட் ஆப் தி ஹவுசுக்கு' தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையை தட்டும் ஒலி) தாங்கள் அவ்விதம் எடுக்கும் எந்த நடவடிக்கையும் It is not barred by limitation

அதுமட்டுமல்லாமல், பேரவை விதி 286–லே சொல்லப்பட்டு இருக்கிற 'ரெசிடியுவரி பவர்சை' தாங்கள் உபயோகப்படுத்தி, முன்னாள் முதல்வர் மீதும், முன்னாள் பேரவைத் தலைவர் மீதும் 'கன்டம்ப்ட் ஆப் தி ஹவுசுக்காக' நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் சொல்லிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதே நேரத்திலே தாங்கள் குறிப்பிட்ட Article 194 of the constitution of India–ல் சுப்ரீம் கோர்ட் ஒரு தீர்ப்பை அளித்திருக்கிறது. அதையும் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சுப்ரீம் கோர்ட் மற்றும் அஸ்ஸாம் உயர்நீதிமன்றமும் இரண்டு தீர்ப்புகளை வழங்கியிருக்கின்றன.

"Though the normal procedure for the House to take cognisance of an alleged contempt is by regular contempt proceedings before

" itself, it is competent for the Speaker as the representative of the dignity of the House to take cognisance of a contempt committed in the House "

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, தாங்கள் அளித்த
தீர்ப்பின் பிரகாரம், முன்னாள் பேரவைத் தலைவர் அவர்
களும், முன்னாள் முதல்வர் அவர்களும், இந்தச் சட்டமன்றத்
திற்கு அவமரியாதை செய்திருக்கிறார்கள் என்பது தெள்ளத்
தெளிவாகத் தெரிகிறது.

அது மட்டுமல்லாமல், மற்றொரு தீர்ப்பிலே, Once a privilege is held to exist it is for the House to judge the occasion and its manner of exercise என்று சொல்லப்பட்டு இருப்பதால், தாங்கள் 'கன்டம்ப்ட் ஆப்தி ஹவுசுக்கு' ஆக்ஷன் எடுக்க வேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. ரங்கராஜன், நான் இதிலே,
நீங்கள் சொல்வதற்கே நான் வருகிறேன். நான் ஏற்கெனவே
வேண்டாம் என்றுதான் விட்டு இருந்தேன். நான் ஏற்கெனவே
சொல்லியிருக்கிற தீர்ப்பின்படி, நீங்கள் ஏற்கெனவே கேட்ட
படி, இந்த அவைக்குறிப்பை மாற்றம் செய்யவோ, திருத்
தவோ வேண்டும் என்று நீங்கள் கேட்டதற்காக, நீங்கள்
சொன்ன, இந்தக் கருத்துக்களை எல்லாம் கூட நானும் பரி
சீலித்துப் பார்த்தேன்.

ஏற்கனவே ஒரு அவையிலே நடந்த நிகழ்ச்சிகளுக்காக
நீங்கள் கேட்டுக்கொண்டதைப் போல, உரிமை மீறல் பிரச்
சினையாகக் கொண்டு வருவதற்கு வாய்ப்பு உள்ளதா என்பதை
யும் ஆராய்ந்து பார்த்தேன். ஒரு அவை முடிந்து, இன்னொரு
அவை, அந்தப் பிரச்சினைக்காக, உரிமைப் பிரச்சினை எடுத்
துக் கொண்டது ஒரே ஒரு முறையிலேதான் நடந்திருக்கிறது.
அது. 1977 ஆம் ஆண்டு, மறைந்த அன்னை இந்திராகாந்தி
அவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை, அப்படி
எடுக்கப்பட்டது தவறு என்று அடுத்து வந்த நாடாளுமன்ற
நடவடிக்கைகளாலும், இது இனி எப்போதும் முன் உதாரண
மாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்றும், அன்றைக்கு ஒரு
தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்ப்பு, அன்றைய
தினம் 1980 ஆம் ஆண்டு மக்கள் தீர்ப்பாகவும் இருந்தது
என்பதையும் மனதிலே கொண்டு, அதிலே நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று சொன்னால், நீங்கள் சொன்னபடி, எல்லா
வகையிலேயும், இது 'கன்டம்ப்ட் ஆப் தி ஹவுஸ்' என்று நட
வடிக்கை எடுக்கக்கூடிய பிரச்சினைதான் என்றாலும். இதற்கு
முன் உதாரணம் ஒரே ஒரு முறை நடந்து, அதுவும் அவ்வாறு
எடுத்து இருக்கக்கூடாது என்கிற அளவுக்கு, நாடாளுமன்றத்
திலே கூறப்பட்டு இருக்கிற காரணத்தாலே தான், அந்த

[பேரவைத் தலைவர்] [1992 மார்ச் 26

'கன்டம்ப்ட் ஆப் தி ஹவுஸ்' என்று நான் எடுத்துக் கொள்ளா
மல், அன்றையதினம் இதுதான் நடந்து இருக்கும் என்பதைக்
கூறி அதற்குப் பரிகாரம் இதுதான், ''இன்றைக்குக்கூட, அவர்
கள்மீது அரசாங்கம் விரும்பினால் உரிய கிரிமினல் நடவடிக்கை
கள் எடுக்கலாம்'' என்று என்னுடைய தீர்ப்பை வழங்கி இருக்
கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)
இதிலே வேண்டாம். என்னுடைய தீர்ப்பின் மீது வேண்டாம்.
நீங்கள் சொன்ன 'கன்டம்ப்ட் ஆப் தி ஹவுஸ்' என்று வருவதற்கு
ஒரே ஒரு உதாரணம், அதுவும் தவறான உதாரணம் நடந்
திருக்கின்ற காரணத்தால், அதை நான் எடுத்துக் கொள்ள
வில்லை என்பதைத் தெரிவித்தேன். திரு. மா. சுந்தரதாஸ்.

<u>திரு. மா. சுந்தரதாஸ் :</u> பேரவைத் தலைவர் அவர்களே,
அதேபோன்று, பார்லிமெண்டிலே செய்ததைப் போல, நாம்
திருப்பிச் செய்யக் கூடாதா என்ன? (குறுக்கீடு)....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு சட்டந்
துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :</u> மாண்புமிகு.
பேரவைத் தலைவர் அவர்களே,—நீங்கள் மிகத் தெளிவாக
துல்லியமாக,—தவறாக சென்ற 1989 மார்ச் 25, பிளாக்
டே-யிலே நடைபெற்ற அந்த நடவடிக்கைகள் நீக்கப்படுமா'
என்று இந்தச் சபை தெரிந்து கொள்ள விரும்புகிறது. அது
நீக்கப்பட வேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இப்போது நான் அளித்த
தீர்ப்பும் அப்படியே இருக்கிறது. அது தவறானது என்று
இருக்கிறது. அது தவிர, இந்த அவைக் குறிப்பு என்று அவர்கள்
தவறாக வெளியிட்டு இருப்பது எல்லாப் பகுதிக்கும் சென்று
இருக்கிறது. இது தவறு. இதிலே வெளியிடப் பட்டுள்ள
கருத்துக்கள் அனைத்தும் தவறானவை, மோசடியானவை,
சில இடைச்செருகலான ஆவணங்களாலே பதியப்பட்டவை
என்று நான் தெளிவாகத் தீர்ப்பு வழங்கியிருக்கிற போது,
அதன் அடிப்படையிலே இது அடிப்பட்டதாக ஆகிவிடுகிறது.
Infructuous ஆக ஆகிவிடுகிறது என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல்
நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. மா. சுந்தரதாஸ்.



1992 மார்ச் 26]

பிற்பகல் 1–30

<u>திரு. மா. சுந்தரதாஸ் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பாராளுமன்றத்தில் செய்தது போல் எதையும்
திருத்தி செய்யக் கூடாது என்று சொல்லி மாற்றி விடலாம்.
அதேபோல் நடந்த சம்பவம் தான் இதுவும். ஏனென்றால்
77-ல் அன்று டில்லியில் நடந்துதான் இங்கே 89-ல் நடந்திருக்
கிறது. அதேபோல் செய்தால் என்ன?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அது 80-ஆம் ஆண்டு,
திரும்பச் செய்கிறபோது இதை முன்னுதாரணமாக எடுத்துக்
கொள்ளக் கூடாது என்றும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்
கள். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :</u> மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொன்ன தீர்ப்பை
மனதார ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் ஒரு விளக்கம். இப்
போது 1989-ல் நடந்த நிகழ்ச்சி அப்படியே இருக்கிறபொழுது,
பின்னாலே வருகிறவர்கள் அதைப் படித்தால்—பின்னால் வரு
கிறவர்கள் படிக்க நிரம்ப வாய்ப்பு இருக்கிறது. அப்போது அது
உண்மை என்று தெரியுமே, அதற்கு என்ன பரிகாரம் என்பதனைத்
தாங்கள் விளக்க வேண்டும். நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று
நான் கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அதாவது இந்தப்
புத்தகத்தைப் பல இடங்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள்.
நம்மிடத்திலே இருக்கிற ரெக்கார்டுகளில் அன்றைய தினம்
பேரவை நடவடிக்கைக் குறிப்புகள் என்று இருக்கக்கூடிய இந்தப்
புத்தகத்தில் வெளியிட்டிருப்பது தவறான மோசடியான,
அதற்குப் பின்னர் இடைச் செருகல்களாகச் சேர்க்கப்பட்டது
என்கிற குறிப்புகளாக, இன்றைக்கு நான் வழங்கியுள்ள தீர்ப்பின்
அடிப்படையில் அப்படியே இருக்கும். அது தவிர, இந்தப் புத்த
கத்திலேயிருந்து அவர்கள் வெளியிட்டிருப்பதை நீக்குகிறோம்
அல்லது நடவடிக்கை எடுக்கிறோம் என்று எடுப்பதற்குரிய
வாய்ப்பு இல்லாத காரணத்தால் நமக்கு இருக்கிற ஆவணங்களின்
படி இவ்வாறு அவர்கள் வெளியிட்டிருக்கிற அந்த நடவடிக்கைக்
குறிப்புகள் என்பது தவறானவை, நடக்காதவை. பாராளு
மன்ற நடைமுறைகளுக்கும், மரபுகளுக்கும் மாறானவை
என்கிற செய்தி தெரிவிக்கப்படும். அந்தச் செய்தி இன்றைய
தினம் நான் அளித்திருக்கிற தீர்ப்பின் அடிப்படையில் எப்போதும்
அவைக் குறிப்பில் இருக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

[1992 மார்ச் 26

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சரவர் கள் கோரிய விளக்கம் என்னவென்றால், 1989 ஆம் ஆண்டில் அவைக் குறிப்பேட்டில் ஏற்றப்பட்ட சில பகுதிகள் தவறானவை மோசடி என்று தாங்கள் இன்று தீர்ப்பு அளித்திருக்கிறீர்கள். 1989 ஆம் ஆண்டு அசெம்பிளி புரோசீடிங்சைப் படிப்பவர்கள் எல்லோருமே 1992 அசெம்பிளி புரோசீடிங்சையும் படிப்பார் கள் என்று நாம் உத்தரவாதமாகச் சொல்ல முடியாது. எனவே 1989 ஆம் ஆண்டு அசெம்பிளி புரோசீடிங்சை மட்டும் படிப்பவர் கள் அந்த புரோசீடிங்சில் இந்தப் பகுதிகள் இருப்பதால் அவற்றையே உண்மை என்று எண்ணுவார்களே என்றுதான் சட்ட அமைச்சரவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு.இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு இந்தச் சட்டமன்றத் திலே நடைபெற்ற நிகழ்ச்சிகளை மாற்றியும், திருத்தியும், உண்மைக்குப் புறம்பாகவும் பதிவு செய்து வெளியிடப்பட்டு விட்டது. அவை அத்தனையும் மோசடியானவை என்று இன்றைக்கு நீங்கள் ஒரு மிகச் சிறந்த தீர்ப்பை வழங்கியிருக்கிறீர்கள். இன்றைக்கு இருக்கின்ற பிரச்சினை 1989 ஆம் ஆண்டு பதிவாகி ஆவணங்களாக இங்கே இருக்கின்றபோது, எதிர்காலத்திலே இதைப் படிக்கிறபோது, இவைகளை நடந்தவையாகத்தானே நம்புவார்கள் என்கிற பிரச்சினை நம் முன்னாலே நிற்கிறது. அப்படி இருப்பதை மாற்ற முடியாது. எக்ஸ்பஞ்ச் செய்ய முடி யாது திருத்த முடியாது என்று இருக்குமேயானால், இதை நான் ஒரு ஆலோசனையாகச் சொல்கிறேன். இன்றைக்கு நடைபெற்ற நடவடிக்கைகளை, அதன் மீது நடைபெற்ற விவாதங்களை, நீங்கள் அளித்த தீர்ப்புகளை, அதனுடைய இணைப்பாக ஒரு புதிய வெளியீடாக அச்சடித்து, அந்த 1989 ஆம் ஆண்டு நிகழ்ச்சி களுடன் இணைத்து வைக்கின்ற அந்த முறையை நீங்கள் அனு மதித்து, ஆணை பிறப்பித்தால், அதைப் படிக்கின்றபோதே அதனுடைய இணைப்பாக இதுவும் இணைந்துவிடும். அதையும் படித்துக் கொள்வார்கள். இதைப்பற்றி நீங்கள் தீர்ப்பு அளிக்க முடியுமா என்பதைத் தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சி கட்சித் தலைவர்.



1992 மார்ச் 25]

பிற்பகல் 1—35

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அளித்தத் தீர்ப்பின் மீது பலவிதமான கருத்துக்கள் இப்போது கூறப்பட்டிருக்கின்றன இதிலே உண்டான ஒரே சிரமம் என்னவென்றால் ஏற்கனவே இந்தப் புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டு, அன்றைய தினம் உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கும், நூலகங்களுக்கும் அனுப்பப்பட்டுவிட்டன. ஒன்றுக்கு இரண்டு புத்தகங்களாகச் சென்றிருக்கின்றன. எனவே முழுவதுமாக அவைக் குறிப்பிலேயிருந்து அகற்றிவிட்டேன் என்று சொல் வதன் மூலமாக மட்டுமே அவை, அவைக் குறிப்பிலேயிருந்து அகற்றப்பட்டு விட்டதாகவோ அல்லது புத்தகங்களிலேயிருந்து வெளியேறியதாகவோ சொல்ல முடியாது. ஆனால் அவை எல்லாம் அவை உரிமை மீறல் என்றாகும் என்று இப்போது குறிப்பிட்டீர்கள். நாங்கள் அப்போதே அவை உரிமை மீறல் என்று சொல்லி, நாங்கள் உரிமை மீறல் தீர்மானம் அன்றைய தினம் கொடுத்திருந்தோம். ஆனால் அது எடுத்துக்கொள்ளப்பட வில்லை. அதுவும் ரெவ்யூவிலே வருகிறது. யார் யார் எல்லாம் உரிமை மீறல் கொடுத்திருக்கிறார்கள் என்று அந்த உரிமை மீறலை எடுத்துக் கொள்வது இல்லை என்று அலுவல் நிர்ணயக் குழு முடிவு செய்து விட்டதாகவும் அதிலே குறிப்பிட்டிருக்கிறார் கள். அது எவ்வளவு தூரம் உண்மை அல்லது பொய் என்பது வேறு விஷயம். ஆனால் தீர்ப்பாகச் சொன்னார்களே தவிர அலுவல் நிர்ணயக் குழு கூடி, அந்த அலுவல் நிர்ணயக் குழு விலே அதை எடுத்துக்கொள்வது இல்லை. என்பதை யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை. நிச்சயமாக இரண்டு எதிர்க்கட்சிகளும் ஏற்றுக் கொள்ளவில்லை. அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகமும் ஏற்றுக் கொள்ளவில்லை. காங்கிரஸ் கட்சியும் ஏற்றுக்கொள்ள வில்லை. நாங்கள் அதிலே கலந்து கொள்ளவே கூட இல்லை. ஓரே ஒரு நாள்—4, 5 நாட்கள் கழித்து நடந்தபோது மட்டும் என்ன நடைபெற்றது என்பதை சொல்லும்போது தாக்கப்பட்டதாக எந்தக் கருத்தினையும் அவர் குறிப்பிட வில்லை. நிச்சயமாக இன்றைய தினம் இங்கே நின்று என்னாலே சொல்ல முடியும். அந்த அலுவல் நிர்ணயக் குழுவிலே அன்றைய முதல்வர் அவர்கள் தான் தாக்கப்பட்டதாகக் கூறவில்லை. அவர் சொன்னது ஒரே ஒரு வார்த்தை. என்ன சொன்னார் என்றால் என்னிடத்திலே இருந்த பட்ஜெட் உரையை காகிதங்களைப் பிடுங்கினார்கள் என்று சொன்னார். யார் பிடுங்கினார்கள் என்று கேட்டோம். அதற்கு அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் கை வைத்தார் என்றோ, பிடுங்கினார் என்றோ அவர் சொல்லவில்லை அவர் சொன்னது எல்லாம் பத்திரிகைகளில் முதலிலே வந்த செய்தி—இன்றைய தினம் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருக்கிற செங்கோட்டையன் அவர்கள் பிடுங்கினார் என்றும்

பத்திரிகைக்கு செய்தி கொடுத்திருந்தார்கள். நான் அதை
இல்லை என்று சொன்னேன். எப்படி உங்களால் அவ்வளவு
நிச்சயமாகச் சொல்ல முடிகிறது என்று என்னிடத்திலே கேட்டார்.
எனக்குப் பக்கத்திலேதான் அவர் அமர்ந்திருக்கிறார். எனக்கும்
அவருக்கும் இடையிலே ஆண்டி அம்பலம் ஒருவர் தான் இருக்
கிறார். நானும் அவரும் ஒரே வரிசையில் இருக்கிறோம். அவர்
எழுந்து செல்லவில்லை என்று சொன்னபோது 4, 5 படங்களை
எடுத்து என்னிடத்திலே காட்டினார். அதிலே ஒரு படத்திலே
கொஞ்சம் பின்னாடி 2 பேர்கள் அங்கே நின்று கொண்டிருக்
கிறார்களே அவர்களிலே ஒருவர் தான் பிடுங்கினார், அவர்
யார் என்று கேட்டார். யார் என்று எனக்குத் தெரியவில்லை.
ஆனால் நிச்சயமாக அது செங்கோட்டையன் அல்ல என்று
சொன்னேன். எப்படி உறுதியாகச் சொல்லுகிறீர்கள் என்று
கேட்டபோது அதில் முழுக்கைச் சட்டை அணிந்திருக்கிறார்.
செங்கோட்டையன் முழுக்கைச் சட்டை அணிந்தாலும்,
செங்கோட்டையன் எப்போதும் அதைச் சுருட்டிவிட்டுக் கொண்டி
ருப்பார். அதில் சுருட்டிவிடவில்லை. அதனால் அது செங்
கோட்டையன் அல்ல என்று சொன்னேன். எனக்கு நன்றாக
நினைவிருக்கிறது நடந்தது. இருந்தாலும்கூட இருக்கிற தவறு
களை அகற்றி ஆகவேண்டும். அன்றையதினம் அவை உரிமை
மீறலாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றாலும் அகற்றியாக
வேண்டும். அதற்கு இடம் இருக்கிறதா என்று கேட்டு இப்
பொழுதே நீங்கள் முழுமையாகத் தீர்ப்பு அளிக்க வேண்டிய
அவசியம் இருப்பதாக நான் கருதவில்லை. நாளை அல்லது
அடுத்தவாரம்கூட இதற்குத் தீர்ப்பு அளிக்கலாம். அதில் ஏற்பட்டு
விட்ட தவற்றை முழுமையாக நீக்குவது எப்படி? இப்படி
என்னிடத்திலே இரண்டு புத்தகங்கள் இருக்கின்றன. மற்ற
உறுப்பினர்களிடத்திலேயும் சென்றிருக்கும் மற்ற நூலகங்
களிலேயும் இருக்கும். இதையெல்லாம் எப்படி மாற்றி அமைப்
பது என்பது பற்றி இன்னும் கொஞ்சம் ஆழ்ந்து பரிசீலித்து
உங்களுடைய தீர்ப்பை நாளை அல்லது அடுத்த வாரத்தில்
அளிக்கலாம் என்று என்னுடைய கருத்தை நான் தெரிவிக்க
விரும்புகிறேன்.

*<u>திரு. சி. ஞானசேகரன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே பெண் என்றால் பேயும் இரங்கும்
என்பார்கள், ஆனால் பேயை விடக் கொடியவர்கள்
சட்டப் பேரவையை அதாவது இந்த அவையை அவமதித்து
குற்றம் இழைத்துள்ளதாக பாராளுமன்ற மரபுகளைச்
சுட்டிக்காட்டி இந்த இடத்திலேயே மாண்புமிகு உறுப்பினர்
திரு. ரெங்கராஜன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த சபையை
அவமதித்து இந்த நிகழ்வுகளை நடத்தியவர்களுக்கு இனி தேர்த
லிலே முன்னாள் முதல்வரும் முன்னாள் பேரவைத்



தலைவரும் நிற்க முடியாது என்ற நிலையை உருவாக்கித்தர
முடியுமா என்று உங்களை நான் இந்த அவையின் சார்பாக
கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு அவை
முன்னவர்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, 1989 மார்ச் மாதம் 25 ஆம்
தேதி நடைபெற்ற நிகழ்ச்சிகளிலே மாற்றங்களும் திருத்தங்
களும் மோசடிகளும் மற்றவைகளும் ஏற்பட்டன என்பதற்கு
இன்றைக்கு தீர்ப்பு வழங்கி இருக்கிறீர்கள். அதை அடியோடு
நீக்கிவிட்டு இந்தத் தீர்ப்புமட்டும் இருந்தால் நிலைமை புரியாது
ஆகவே மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்
அவர்கள் சொன்னமாதிரி அந்தப் பகுதியையும் போட்டு இன்
றைக்கு நீங்கள் அளித்த தீர்ப்பையும் போட்டு ஒரு தனி வெளி
யீடாக சட்டமன்றத்தின் சிறப்பான வெளியீடாக வெளியிட்டால்
பிரச்சினைகள் தீர்ந்துவிடும் இந்தத் தீர்ப்பு மட்டும் இருந்தால்
முதலிலே இருந்த நிலை தெரியாமல் போய்விடும். 1989-லே
நடைபெற்றதையும் போட வேண்டும். அந்தக் குறிப்பையும்
போட்டு இன்றைக்கு தாங்கள் அளித்த முழுத் தீர்ப்பையும்
சேர்த்து ஒரு பதிப்பாக வெளியிடலாம். அதுதான் இந்தப்
பிரச்சினைக்கு ஒரு தீர்வு தரும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா</u> : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இதையே தான் நான் மீண்டும்
உங்களுக்கு வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். 198
ஆம் ஆண்டு அசெம்பிளி புரொசீடிங்ஸ்சின் ஒரு மறு பதிப்பை9
தாங்கள் வெளியிட்டு ஏற்கெனவே அவர்கள் திருத்தி மாற்ப
மோசடி செய்த பகுதிகளை அப்படியே வைத்துக் கொண்டு, அதற்
பிறகு ஃபுட்நோட் என்று சொல்லி, இன்றைக்கு வழங்கின
தீர்ப்பை அதில் வெளியிட்டு அப்படி ஒரு மறு பதிப்பைகி
தாங்கள் வெளியே கொண்டு வர ஏற்பாடு செய்து அதை மீண்டும்
அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பி, அன்றை
தினம் அந்தப் பதிப்பு யார் யாருக்கு அனுப்பி வைக்கப்பட்டதோ
அத்தனை பேருக்கும் இந்த மறு பதிப்பை அனுப்பி வைக்க
தாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் தெரிவித்திருக்கிற கருத்து, நடைபெற்ற தவற்றுக்குப்
பரிகாரம் செய்கிற அளவுக்கு அமையும் என்று கருதுகிற காரணத்
தால் அந்த வகையில் நான் ஏற்கெனவே சொன்னபடி ஏற்
கெனவே அன்றைய நிகழ்ச்சிக் குறிப்புகள் என்று பேரவையிலே
அங்கீகரிக்கப்பட்டிருக்கிற அந்த ஆவணத்தோடு இணைப்பாக
இன்றைக்கு நான் அளித்திருக்கிற தீர்ப்பையும் சேர்த்து இரண்
டையும் அப்படியே மறுபதிப்பாக அச்சிட்டு அதுதான் அன்றைய
தினம் நடந்த நிகழ்ச்சிக் குறிப்பு என்கிற வகையில் அன்றைய
தினம் அவர்களாலே வெளியிடப்பட்ட, திருத்தப்பட்டு இடைச்
செருகலாகப் பல செய்திகள் சேர்க்கப்பட்டு, ஜனநாயக நடை
முறைகளுக்கும், மரபுகளுக்கும் மாறாக வெளியிடப்பட்டிருக்
கின்ற இந்தப் பேரவை நடவடிக்கைக்குறிப்புகள் என்பது
மார்ச் 26, 1992 அன்று பேரவைத் தலைவர் அளித்திருக்கின்ற
தீர்ப்புகளோடு இணைத்துப் படிக்க வேண்டும் என்கிற ஃபுட்
நோட்டோடு இன்றைய தினம் நான் அளித்த தீர்ப்பையும்,
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், ஏனைய உறுப்பினர்
களும் தெரிவித்திருக்கின்ற கருத்துக்களோடு, இணைத்து ஒரே
புத்தகமாக வெளியிடப்பட்டு அந்தப் புத்தகம் இன்றைய
மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், அன்றைய மாண்பு
மிகு உறுப்பினர்களுக்கும், அன்றையதினம் இந்த புத்தகங்கள்
கொடுக்கப்பட்ட நூலகங்கள், பத்திரிகைகள் மற்றும் அனை
வருக்கும் அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்கள்.

பேராசிரியர் க. பொன்னுசாமி (மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர்) : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி
முன்பு இருந்த நடவடிக்கைகளையும் இன்றைக்கு தாங்கள் அது
தொடர்பாக தந்திருக்கின்ற தீர்ப்புகளையும் இணைத்துப் புத்தக
மாக வெளியிட்டு அனுப்புகின்ற நேரத்திலேயே முன்பு நூலகங்
களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பழைய பிரதிகளை திரும்பப்
பெறுவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று உங்களைப்
பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் துணைத்
தலைவர் அவர்களுடைய கருத்தும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.
அதற்குரிய ஏற்பாடுகளும் செய்யப்படும்.



## 11. சட்டமுன்வடிவுகள் (ஆய்வுசெய்தல்)

### (அ) நகராட்சி சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவு
கள் ஆய்வு செய்தல், 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச்
சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப்
பேரவை சட்டமுன்வடிவு எண் 8/1992). மாண்புமிகு உள்
ளாட்சித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த
(திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு
எண் 8/1992) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த சட்டமுன்வடிவும்
சேர்த்து விவாதத்திற்கு வைக்கப்படுகிறது. எனவே விவாதத்தில்
பங்கு பெறுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு சட்டமுன்
வடிவுகள் மீதும் தங்களுடைய கருத்துக்களைக் கூறலாம் என்
பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே,
1992 தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த திருத்த சட்ட
முன்வடிவை வரவேற்று ஒருசில கருத்துக்களை கூற அனுமதி
அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த சட்டமுன்வடிவை
வரவேற்பதோடு இங்கே துணை மானியகோரிக்கையின் மீது
பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் தேர்
தல் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை வைத்துப் பேசினார்.
(மணியடிக்கப்பெற்றது).

## 12. அரசினர் தீர்மானம்.

### விதி 32-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நேரம் 1.43 ஆகிறது. நிறைய உறுப்பினர்கள் பேசுவதற்கு விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். எல்லோரும் பேசி, அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்குவதற்கு இப்போது நேரம் இருக்குமா அல்லது நாளையதினம் கேள்வி நேரத்தை ரத்து செய்துவிட்டு அந்த நேரத்தில் இதை எடுத்துக்கொள்ளலாமா என்பது குறித்து அவையின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''வழக்கம் போல் சட்டப் பேரவையின் முதல் ஒரு மணிநேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டப் பேரவை விதி 32-ஐ 27—3—1992 அன்று தளர்த்தி அந்த நேரம் அரசின் அலுவல்களுக்காக எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியைக் கோரினேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிந்து விட்டார்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையை தட்டும் ஒலி).

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன பேரவை மீண்டும் நாளை (27—3—1992) காலை 9.30 மணிக்கு கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.45 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.



## 13. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

38. தமிழ்நாடு வெடிமருந்து தொழில் நிறுவனத்தினால் தயாரிக்கப்படும் பொருட்களை விற்பனை செய்யும் சரக்கு ஏஜென்டுக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 14-10-1991 ஆம் நாளிட்ட 417 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

39. உணவகங்கள், சிற்றுண்டிச் சாலை, ஏனைய உணவு நிலையங்களில் விற்பனை செய்யப்படும் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பொருட்கள் நீங்கலான உணவு மற்றும் பானங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய வரியினை குறைப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 21—10—1991 ஆம் நாளிட்ட 422 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

40. ஐந்தாவது பட்டியலின் கீழ் வருகின்ற பொருட்களின் விற்பனைக்கு சலுகை முறையில் வரிவிதிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 4—11—1991 ஆம் நாளிட்ட 452 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

41. தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் 1990-91 ஆம் ஆண்டிற்கான பதினோறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

### ஆ. அறிக்கைகள். அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

53. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் நான்காவது அறிக்கை 1991-92.

54. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் [illegible] 1991-92.

D
V211,31'N92
N92.2-3
165046

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nanthi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.